SCAN & EDIT
ZEEVAA




## 1. பஞ்சவடி பயணம்

தேவகிரி யாதவகுல மன்னன் மகா தேவனின் மகாமந்திரியும் சிறந்த கவியுமான ஹேமாத்ரி நறுக்கு ஓலைகளில் தான் வடித்துக் கொண்டிருந்த கவிதைகளில் ஆழ்ந்துகிடந்த

zeevaa99@gmail.com

தால், தனது காலடியில் வணங்கி எழுந்து பய பக்தியுடன் நின்றிருந்த ராஜபுத்ரி குலவதியை ஏறெடுத்தும் பார்த்தாரில்லை. அவர் எழுத்தாணி ஓடிக்கொண்டிருந்த வேகத்தைக் கவனித்த குலவதியும் அவருடைய சிந்தனை. ஓட்டத்தை தடுக்க இஷ்டப்படாமலும் உதடுகளைக்கூட அசைக்காமலும் பேசாமல் நின்றுகொண்டே இருந்தாள். ராஜகுமாரி வந்ததையோ வணங்கியதையோ சிறிதும் கவனிக்காமலிருந்த மகா மந்திரியை இந்த உலகுக்கு கொண்டு வர அவருடைய சீடர்களில் ஒருவன் மெதுவாக "குருநாதரே" என்று ஒருமுறை அழைத்தான். அதற்கும் அவர் தலைநிமிராது போகவே "மகா மந்திரி?"என்று சிறிது உரக்கவே அழைத்ததும் காவிய நிஷ்டை கலைந்த ஹேமாத்ரி தமது கண்களை உயர்த்தி அரசகுமாரியைப்பார்த்து புன் முறுவல் கொண்டு "குழந்தாய்! நீ வந்து வெகு நேரமாகிவிட்டதா?" என்று விசாரித்தார்.

குலவதியும் சிறிது புன்முறுவல் செய்து "இல்லை, அதிக நேரமாகவில்லை" என்று மிக மிருதுவான குரலில் பதில் சொன்னாள்.

"பாதகமில்லை, படிக்க உட்கார். அடுத்த பாடம் சொல்கிறேன்" என்றார்.

குலவதி சிறிது முகம் சுருங்கி "குருநாதரே! இன்று நான் பாடம் சொல்லிக் கொள்ள வரவில்லை" என்று கூறினாள்.

ஹேமாத்ரி அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் "ராமாயணத்தில் நேற்று ராமன் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் பஞ்சவடி தீரத்தில் தங்கியதைச் சொன்னேன். அடுத்த கட்டம் இன்னும் சுவாரஸ்யம். அதை இன்று



பூர்த்தி செய்துவிடலாமே. அதுவும் ராவண சீதையைக் கொண்டுபோன பிறகு வால்மீ * விப்ரலம்ப சிருங்காரத்தை அமுதமாக பொழிந்திருக்கிருர்'' என்று சொல்லி அந் மகாகாவியத்தின் அழகை நினைத்து கண்களை மூடினர்.

ஹேமாத்ரியை அப்படியே காவிய தில் திளைக்கவிட்டால் தான் வந்த காரியம் கைகூடாதென்று நினைத்த குலவ "ஆசார்யரே! காவிய கட்டங்களை ஓலை கட்டில் படிப்பதைவிட நேரில் பார்ப்பது சிறப்பல்லவா?" என்று வினவினள்.

ஆசார்ய ஹேமாத்ரி வியப்பு நிரம்பிய கண்களை ராஜபுத்ரியின் மீது நிலைநாட்டினர். "குலவதி! நமது பார்வைக்கும் கவியின் பார்வைக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்றது. கவிக்கண் கொண்டு அதைப்பார்க்க நம்மால் முடியாது'' என்று கூறினர் திட்டமான குரலில்.

குலவதி அப்படியும் விடவில்லை. "ஆசார்யரே! தாங்களும் கவிதானே. தங்களிடம் நானும் காவிய பாடங்களைக் கேட்டிருக்கிறேனே. ஏன் நம்மால் கவிப்பார்வையுடன் பார்க்கமுடியாது?'' என்று வினவினள்.

"அபசாரம் அபசாரம்!'' என்ற ஹேமாத்ரி "வால்மீகிக்கு நாம் கவிகளா! அவர் பார்வையுடன் நாம் பார்க்கமுடியுமா?'' என்று கேட்டார். ஏதோ சொல்லக்கூடாததை ராஜ

---

* சோக கட்டத்தில் சிருங்காரத்தைச் சொல்லும் முறை

குமாரி சொல்லிவிட்ட தோரணை அவர் குரலில் இருந்தது.

"ஆசார்யரே!" மெதுவாக அழைத்தாள் குலவதி.

"சொல் ராஜகுமாரி!"

"மகான்கள் இருந்த இடங்களுக்கு நாம் யாத்திரை போவதில்லையா?"

"உண்டு"

"அப்படியானால் ராமனும் சீதையும் தங்கிய இடத்துக்குப்போவது யாத்திரையாகாதா?"

ஆசார்ய ஹேமாத்ரி சிந்தனையில் ஆழ்ந்தார் நீண்டநேரம். பிறகு சொன்னார், 'நீ' சொல்வதிலும் அர்த்தமிருக்கிறது. ஆனால் குலவதி! இப்பொழுது அந்த இடத்தில் யார் யாரோ வசிக்கிறார்கள். அடுத்த ஸஹ்யாத்ரி மலையிலும் முனிவர்கள் கிடையாது. தவம் செய்யும் யாரையும் பார்க்கமுடியாது" என்று.

குலவதி கைகுவித்துப் பேச முற்பட்டு "ஆசார்யதேவா! பழைய சூழ்நிலை இருக்க வேண்டிய அவசியமில்லை. நாம் கோவில்களுக்குப் போகிறோம். அவை பழைய சூழ்நிலையில் இல்லை. அதற்காக போகாமலிருந்து விடுகிறோமா? அந்த புனித தலங்களுக்குப் போவதே நமது மனத்தை புனிதப்படுத்திக் கொள்வதற்குத்தானே" என்று பிடிவாதமாகத் தனது கருத்துக்களை எடுத்துச்சொன்னாள்.

அதற்குமேல் எதுவும்சொல்லமுடியாததால் "சரி! உன் தந்தையைக் கேட்டுச் சொல்கிறேன்" என்று ஆசார்யர் கூறினார்.


அதற்கும் பதிலே சித்தமாக வைத்திருந்தாள் குலவதி. "தந்தையைக் கேட்டுவிட்டேன்" என்ருள்.

"தந்தை சம்மதம் கொடுத்து விட்டாரா?" ஆசார்யர் கேள்வியில் சிறிது கசப்பு தெரிந்தது. தம்மைக் கேட்காமல் எந்த முடிவையும் எடுக்காத மகாதேவன் எப்படி தனது சீடப் பெண் விஷயத்தில் தானே முடிவெடுத்தான் என்று சிந்தித்தார்.

அந்த சிந்தனையை ராஜகுமாரியின் ஒற்றைச்சொல் உடைத்தது. "தந்தை தங்கள் சம்மதத்தை கேட்கச் சொன்னார்" என்று குலவதி சொன்னதும் மன சந்துஷ்டியால் குறுநகை கொண்டார் குருநாதர். "சரி! உன் ஆசையை கெடுப்பானேன்? நாளைக்கே புறப் படுவோம் பஞ்சவடிக்கு. ஏற்பாடுகள் நடக் கட்டும்" என்று கூறியதும் குலவதியின் இதழ் கள் குறுநகை காட்டின. "ஏற்பாடுகள் எல்லாமே சித்தமாயிருக்கின்றன. இன்றே புறப்படலாம்" என்று சொன்னுள் மகிழ்ச்சி துலங்கிய குரலில்.

ஆசார்யர் குலவதியை நோக்கினர் முகம் மலர. "குழந்தாய்! என்னுடைய பலவீனத்தை நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிருய்! நீ எது கேட்டாலும் ஹேமாத்ரி மறுக்க மாட்டார் என்பது உனக்குத் தெரியும். நான் சித்தமாகிறேன். நீ சித்தமானதும் எனக்கு தெரியப் படுத்து" என்ற குருநாதர் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு "நாம் பஞ்சவடியுடன் திரும்பிவிடவேண்டியதுதானே?" என்று வினவினர்.





''இல்லை. ஸஹ்யாத்ரி மலைப்பகுதியையும், முடிந்தால் வடகொங்கண நாட்டையும் பார்ப்போம்'' என்றாள் ராஜகுமாரி.

''கொங்கண நாடா?'' அதிர்ச்சி தெரிந்தது மஹாமந்திரியின் குரலில்.

''ஆம்''

''அங்கு நமது விரோதிகள் இருக்கிறார்கள்.

''விரோதிகளா!''

''ஆம். உன் தந்தையின் விரோதிகள். உதாரணமாக சோமேசுச்வரன் இருக்கிறான்.''

சற்று சிந்தித்தாள் ராஜகுமாரி. ''அப்படியானால் ஸஹ்யாத்ரியுடன் திரும்பிவிடுவோம்'' என்று கூறினாள்.

குருநாதர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டார். பிறகு கேட்டார் ''நம்முடன் எத்தனை காவலர் வருகிறார்கள்?'' என்று.

''நான்கு காவலர் வருகிறார்கள். என்னுடன் ஒரு பணிப்பெண் வருகிறாள்'' என்று ராஜகுமாரி கூறினாள்.

''இன்னும் நான்கு பேர் வரட்டும். உன் பல்லக்கை தூக்க ஆட்கள் வேண்டாமா?'' என்று ஆசார்யர் சொன்னார்.

''பல்லக்கில் சென்றால் துரிதமாகப் பயணம் செய்ய முடியாது. நாம் எல்லோருமே புரவியிலேயே சென்று விடுவோம். புரவிகளும் சித்தமாகி விட்டன'' என்றாள் ராஜகுமாரி.

குலவதி சகல ஏற்பாடுகளையும் முன்னதாகவே செய்துவிட்டு தனது உத்தரவை பேருக்குத்தான் கேட்கிறாளென்பதை





குருநாதர் புரிந்து கொண்டார். ''இன்னும் சிறிது நேரத்தில் நான் சித்தமாகி அரசரிடம் அனுமதியும் பெற்றுவிடுகிறேன்'' என்று கூறவே குலவதி அந்தப்புரத்தை நோக்கி நடந்தாள்.

அன்று பிற்பகலுக்கு சற்று முன்னதாகவே ஆசார்யாரும் குலவதியும் மற்ருேரும் புறப்பட அவர்களை அரண்மனை வாயில் வரையில் கொண்டுவிட்ட யாதவ மன்னன் மகாதேவன் ''ஜாக்கிரதையாகச் சென்று வாருங்கள். அதிக நாள் தாமதிக்காமல் தலைநகர் வந்து சேருங்கள்'' என்று கூறிவிட்டு ''மகளே! ஆசார்யரை விட்டு நீ தனித்து எங்கும் போய்விடாதே'' என்று மகளையும் எச்சரித்தார்.

''நான் பார்த்துக் கொள்கிறேன். கவலை வேண்டாம் மகாராஜா'' என்று ஆசார்யரும் மன்னனுக்கு தைரியம் சொன்ஞர். ஆனல் குருநாதர் மனத்தில் ''அரசகுமாரியை தாம் எத்தனை தூரம் கட்டுப்படுத்த முடியும்?'' என்ற சந்தேகம் இருக்கவே செய்தது. அவள் கச்சையில் சொருகிய தந்தப்பிடி போட்ட குறுவாளும், புரவியின் பக்கவாட்டு வாரில் பிணைக்கப்பட்டிருந்த வில்லும் அம்பருத் துணியும் அவர் சந்தேகத்தில் பொருளிருப் பதை வலியுறுத்தின.

இத்தனை சந்தேகத்துடன் பஞ்சவடியை நோக்கி தேவகிரியிலிருந்து புறப்பட்ட ஹேமாத்ரி கோதாவரிக்கரையை அடைந்ததும் அங்கிருந்த அமைதியைப் பார்த்ததும் புராண காலத்துக்கே சென்று விட்டதால் ஏதும் பேசா மலே பயணம் செய்தார். அரசகுமாரி வழியிலி

ருந்த இயற்கையின் வனப்புகளைப் பார்த்துக் கொண்டே மிகுந்த உற்சாகத்துடன் பயணம் செய்தாள். அவள் கண்ணெதிரே ஆகாயத்தை தொட்டுவிடுவதுபோல் ஸஹ்யாத்ரி மலைத் தொடர் பிரும்மாண்டமாக எழுந்தது. பஞ்ச வடியை மறுநாள் காலையில் அடைந்தபோது அங்கிருந்த காட்டுக்காட்சி மனத்தை அள்ளி யது.

அந்த காட்சிகளைப்பற்றி பேசிய ஆசார்யர் "குலவதி! இங்கெல்லாம் ராமன் காலத்தில் எத்தனையோ துறவிகள் இருந்தார்கள். இப் பொழுது இங்கு வேடர்களையும் விலங்குகளை யுந்தான் பார்க்கலாம்'' என்ருர்.

அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போதே துறவியொருவர் கோதாவரியிலிருந்து தமது கமண்டலத்தில் நீரை மொண்டுகொண்டு எட்ட இருந்த ஒரு பர்ணசாலையை நோக்கி நடந்துகொண்டிருந்தார்.

—தொடரும்



# துறவி

## சாண்டில்யன்

சென்ற வாரம் :

தேவகிரி யாதவகுல மன்னன் மகா தேவனின் மகளான குலவதி, மன்னனின் மதிமந்திரியான ஹேமாத்ரியிடம் காவியங்களைப் பயில்பவள். ராமாயண காலத்தில் புகழ்பெற்ற பஞ்சவடிக்குச் சென்று பார்த்தேயாக வேண்டும் என்று தந்தையிடம் பிடிவாதம் பிடித்து மந்திரி ஹேமாத்ரியின் துணையோடு புறப்படுகிறாள் குலவதி. கோதாவரி நதி தீரத்தை அவர்கள் அடையவும் துறவியொருவர் தமது கமண்டலத்தில் நீரை மொண்டு கொண்டு எட்ட இருந்த ஒரு பர்ணசாலையை நோக்கிச் செல்வதை அவர்கள் பார்த்தார்கள்.

இனி...

## 2. மலர்க்கொத்தும் மாமுனியும்

கோதாவரி தீரத்துக்கு அருகில், அரசு, வில்வம், ஆல், நெல்லி, அசோகம் எனும் ஐந்து மரங்களால் சூழப்பட்டதும், சமதரை உள்ளதும், அருகே மேற்குத்தொடர்ச்சி மலையை உடையதும், அநேக புஷ்பச்செடி களையும், பழவகைச்செடிகளையுடையதுமான அந்த பஞ்சவடியையும் அதனருகே சல சலத்து ஓடிய கோதாவரியையும் கண்ட யாதவ அரசகுலமகளான குலவதி அந்த இடத்தின் இயற்கை அழகில் லயித்து புரவி யிலேயே நீண்டநேரம் அமர்ந்து இருந்து விட்டாள். "இந்த இடம் இத்தனை ரமணிய மாக இருப்பதால்தான் ராமபிரான் சீதை யுடன் தங்க அகஸ்திய முனிவர் இந்த இடத்தில் தங்கும்படி ராமபிரானுக்கு யோசனை கூறினார் போலும்!" என்று சொன்னாள் குரு நாதரான ஹேமாத்ரியை நோக்கி.

குலவதியின் அழகிய வதனத்தில் ஏற் பட்ட மகிழ்ச்சியையும் பிரமையையும் கண்ட ஹேமாத்ரி, "குலவதி! இடம் ரமணியமானது தான். இங்குள்ள புண்ய நதியான கோதா

வரியும், அதன் கரையிலுள்ள புஷ்பவிருட்சங்களும், கனிகள் தரும் தருக்களும், சற்று தூரத்தே இருந்தும் அருகே இருப்பது போல் பிரமையூட்டும் அத்தகிரியென்றும் ஸஹ்யாத்ரியென்றும் அழைக்கப்படும் இந்த மேற்கு மலைத்தொடரும் அழகின் சின்னங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இங்கு புராண காலத்தில் இருந்த மனித சூழ்நிலையில்லை. ரிஷிகள் ரிஷிபத்தினிகள் இல்லை. துறவிகள் இல்லை. இன்னும் சற்று தூரத்திலிருக்கும் வேடர் குடிசைகளை நீ பார்க்கும்போது எத்தகைய இடத்துக்கு நீ வந்திருக்கிறாயென்பதைப் புரிந்துகொள்வாய்'' என்று சொன்னார்.

இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போது துறவியொருவர் கோதாவரியிலிருந்து கமண்டலத்தில் நீரை மொண்டுகொண்டு எட்ட இருந்த ஒரு பர்ணசாலையை நோக்கிச் செல்வதைக்கண்ட குலவதி ஆச்சர்யத்தின் வசப்பட்டு குருநாதருக்கு பதிலேதும் சொல்லாமல் புரவியில் சிலையென உட்கார்ந்து விட்டாள். கமண்டலத்தில் நீரை மொண்டு கொண்டு கரையேறிய துறவி மிக வாலிபராகவும் அழகாகவும் இருந்தார். நன்றாகத் துலக்கப்பட்டதால் பளபளவென்று காலைக் கதிரவன் கதிர்களில் மின்னிக்கொண்டிருந்த செம்புக் கமண்டலத்தைப்போலவே அவர் தேகமும் சிவந்து மாசு மருவின்றி ஜொலித்ததைக்கண்ட குலவதி ''இத்தனை அழகிய துறவி இங்கிருப்பாரென்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்று தனக்குள்ளேயே வினவிக் கொண்டாள். அந்த வாலிபத்துறவியின்

அழகிய மேனியும், மாசு மருவற்ற திடமான உடலும், நன்றாகத் துவைக்கப்பட்டிருந்த காவி உடையும், மூன்றுமே அழகில் போட்டி போடுவதாகத் தோன்றியது யாதவ அரசகுல மகளுக்கு. இத்தனைக்கும் அந்த வாலிபத் துறவி மற்ற துறவிகளைப்போல் தலையில் ஜடாமுடி ஏற்காமல் குழல்களை காகபக்ஷங்கள் போல் (காக்கை இறக்கைகளைப்போல்) க்ஷத்ரியர்களைப்போலவே வெட்டிவிட்டிருந்ததையும், அந்த குழல்கள் மிகக்கருமையாக இருந்ததால் அவரது அழகிய மேனிக்கு அழகு செய்வதாகவே அமைந்திருந்ததையும் குலவதி கண்டாள். அந்தத்துறவி முப்புரி நூலை உடலுக்குக் குறுக்கே அணிந்திருந்தாலும் அதன் முக்கால் பகுதி அவர் அணிந்திருந்த காவிவஸ்திரத்திற்குள் மறைந்து விட்டதையும் பார்த்த குலவதி "இவருக்கு துறவி வேடம் அழகாயிருக்கிறது, ஆனல் பொருந்தவில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அந்தத் துறவி கோதாவரியின் கரையேறி நடக்கத்துவங்கியபோது அவருடைய கால்களுடைய வன்மையையும், அவை ஒரே சீராக பாவிச்செல்வதையும் கண்ட குலவதி "இது ஏதோ வீரர்கள் நடையாயிருக்கிறதே தவிர துறவியின் நடையாக இல்லை" என்றும் சொல்லிக்கொண்டாள்.

இத்தனை தூரம் குலவதி சிந்தித்தாளே யொழிய அந்தத்துறவி அவளையோ குருநாதரையோ, அவர்கள் கூட வந்த பணிமக்களையோ கண்ணெடுத்தும் பார்க்காமல் கமண்டலத்தில் ஜலத்தை மொண்டதும் எட்ட இருந்த தமது பர்ணசாலையை நோக்கி நடந்து

விட்டார். அவர் சென்று பர்ணசாலையில் மறைந்ததும் அவர் கண்ணுக்கு மறைந்து விட்டதால் அந்த பர்ணசாலையை கவனித்தாள் குலவதி. அந்த பர்ணசாலை, அரசு, ஆல் இலைக்கிளைகளால் கட்டப்பட்டிருந்ததன்றி அதன்மீது முல்லைக்கொடியும் மல்லிகைக் கொடியும் தொத்தி ஏறி கொத்து கொத்தாக மலர்களை புஷ்பித்திருந்ததையும் பார்த்த குலவதி "சந்நியாசிக்கு புஷ்பங்கள் எதற்கு? இவர் நிஜ சந்நியாசிதானா?" என்று சந்தேகித்தாள்.

இப்படி அவள் துறவியைப்பற்றி ஆராய்ந்திருந்த நிலையிலிருந்து அவளை மீட்க முயன்ற ஹேமாத்ரி "அரசகுமாரி! இங்கு நாம் இந்தத் துறவியைப் பார்க்க வரவில்லை" என்று ஏளனம் ஒலித்த குரலில் தமது கருத்தை வெளியிட்டார்.

அரசகுமாரி குருநாதர்மீது நாணம் கலந்த பார்வையொன்றை வீசி "குருநாதரே! இந்த புண்ணியதலத்தைப்பற்றி நீங்கள் போட்ட தடையும் சரியில்லையே" என்றாள்.

இங்கு வேடர்கள்தான் இருப்பார்கள் என்று தான் சொன்னதை அரசகுமாரி சுட்டிக் காட்டுகிறாளென்றும், இங்கு துறவிகள் யாரும் கிடையாதென்று தாம் சொன்னது பற்றி ஏளனம் செய்கிறாளென்பதையும் அறிந்துகொண்டு "குலவதி! காஷாயம் கட்டியவர்களெல்லாம் துறவிகளாகிவிட மாட்டார்கள். இப்பொழுது நீ பார்த்தவர் அர்ஜுன சந்நியாசியாகக்கூட இருக்கலாம். உன்னை அந்த மகானுபாவரிடமிருந்து காக்கும்

பொறுப்பு எனக்கிருக்கிறது. அதை அறிந்து நட" என்று கூறி லேசாக நகைத்தார். பிறகு அங்கிருந்த ஐந்து தருக்களுக்கு நடுவில் இரண்டு பர்ணசாலைகள் அமைக்க தம்முடன் வந்த பணியாட்களுக்குக் கட்டளையிட்டு புரவியிலிருந்து மகாமந்திரி இறங்கவே பணி மக்களும் அரசகுமாரியின் தோழிகளும் கூட இறங்கினார்கள். இறங்கிய பணிமக்கள் அந்த ஐந்து மரங்களுக்கிடையில் பர்ணசாலைகளைக் கட்டத்துவங்கினார்கள். யாதவர் தலைநகரி லிருந்து புறப்படும்போதே கொண்டுவந் திருந்த நீண்ட மரக்கால்களை நட்டும், அடுத் திருந்த தோப்பிலிருந்து வெட்டிக் கொணர்ந்த தழைகளுடன் கூடிய மரக்கிளைகளை சேர்த்துக் கட்டியும் நடுப்பகலுக்குள் இரண்டு இலை வீடுகளை பணியாட்கள் அமைக்கவே, ஒன்றில் அரசகுமாரியும் தோழிகளும் தங்கினார்கள். ஹேமாத்ரி தமக்கு மட்டும் ஒரு இலைவீட்டை இருத்திக்கொண்டு காவலர்களை ஆங்காங்கு மரத்தடிகளிலும் தோப்புகளிலும் தங்கவைத் தார். அரசகுமாரியின் பர்ணசாலை மீது ஒரு கண்ணை வைத்திருக்கும்படியும் வீரர்களுக்கு உத்தரவிட்ட பிறகு கோதாவரியில் நீராடச் சென்றார். அதன் குளிர் நீரில் அமிழ்ந்து நீராடி முடித்த ஹேமாத்ரி தமது மாத்தியானி கத்தை (நடுப்பகல் கடனை) முடித்து பர்ண சாலைக்குச்சென்றார். தாம் நீராடிய இடத்தி லிருந்து சற்று எட்ட அரசகுமாரியும் பணிப் பெண்களும் நீராடியதைக்கண்டும் காணாதது போல் போய்விட்டார் ஹேமாத்ரி.

கோதாவரியில் அமிழ்ந்து நீராடிக் கொண்டிருந்த குலவதி தனது தோழிகள்

போனபிறகும் நதிப்பிரவாகத்திலிருந்து எழுந்திருக்க மனமில்லாமல் அதன் சலசலத்த நீரிலே துளைந்து கொண்டிருந்தாள். தனது சீலையின் மேல் பகுதியை கழுத்தை தாழ்த்திப் பிடித்துக்கொண்டு மார்புக்கச்சையையும் அவிழ்த்து அதை நீரில் அலசி கரைமீது போட்டாள். அவள் அழகிய வழவழத்த உடலை அன்னை கோதாவரி தழுவித்தழுவி ஓடி நீராட்டிவிட்டாள். இப்படி நீண்ட நேரம் நீராடிய குலவதிக்கு தோழிகளிலொருத்தி வேறு ஆடைகளைக் கொண்டு பிரிக்கவே அதன் மறைவில் எழுந்த அரசகுமாரி அதை சுற்றிக் கொண்டு தனது சேலையை நெகிழ விட்டாள் கரைமீது. அவள் குழலை வேறொரு சீலைத் துண்டினல் துவட்டிக்கட்டினுள் பணிமகளொருத்தி. பிறகு வேறொரு துண்டினல் உடலைத் துடைத்து சேலையையும் அணிந்த குலவதி தனது பர்ணசாலையை நோக்கி நடந்தாள். நனைந்த சேலை முதலியவற்றைப் பிழிந்துகொண்டு தோழியும் அரசகுமாரியை பின்தொடர்ந்து பர்ணசாலையை அடுத்த மரக் கிளைகளில் எசமானியின் சேலையைக் கட்டினுள்.

மாற்றுச்சேலை அணிந்து பர்ணசாலைக்கு வந்த குலவதி அதன் வாயிலில் நின்று தனது குழலை அவிழ்த்து பிரித்து உலர்த்தினுள். அதில் ஏற்கனவே தடவியிருந்த தைலத்தின் நறுமணம் காற்றில் மிதந்து சுற்றிலும் பரவி நறுமணத்தை அளித்தது. மெல்ல தலையை உலர்த்தி அதன் நடுவே சிறு பின்னல் போட்டுக்கொண்ட அரசகுமாரி அந்த வாலிபத்துறவியின் பர்ணசாலையை நோக்கி

ளுள். அந்த பர்ணசாலைக் கதவு அடைக்கப்பட்டிருந்தது. அதன்மீது தவழ்ந்திருந்த முல்லைக் கொத்துகள் அவளைப் பார்த்து நகைத்தன. அந்த மலர்க்கொத்துகளைப் பார்த்து ஏதோ சிந்தித்த குலவதி தனது பணிமகளொருத்தியை அழைத்து ''அதோ அந்த மலர்க் கொத்துகளில் ஒன்றைக் கிள்ளி வா'' என்ருள்.

''பிறர் கூரையிலிருப்பதை நாம் எப்படிப் பறிக்க முடியும்?'' என்று பணிமகள் ஆட்சேபித்தாள்.

''துறவிக்கு மலர் எதற்கு. போய் பறித்து வா'' என்ருள் அரசகுமாரி.

பணிமகள் தயங்கவே அரசகுமாரியே துறவியின் பர்ணசாலையை நோக்கி நடந்து அதன் வாயிலில் சிறிது நேரம் நின்ருள். உள்ளிருந்து எந்த அரவமும் வராது போகவே மெள்ள தனது கால்களை ஊன்றி எழுந்து முல்லை மலர்க்கொத்து ஒன்றை கிள்ளியெடுத்து தனது கருங்குழலில் சூட்டிக்கொண்டாள். சிறிது நேரம் அங்கேயே நின்று விட்டு தனது இலைக் குடிலுக்கு வந்து சேர்ந்த அரசகுமாரி அன்று முழுவதும் அந்தத் துறவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். மாலை வந்தும் கூட அவள் அந்தத் துறவியை மறக்கவில்லை. அந்தத் துறவியும் அன்று முழுவதும் அவள் கண்களில் படவில்லை. ஆனுல் அன்று மாலை அரசகுமாரி மீண்டும் தனித்து கோதாவரியில் நீராடப் போனபோது நீராட்டத்துறையில் அந்த வாலிபத்துறவி நின்றிருந்தார்.

அவர் தமது கமண்டலத்தை கரையில் வைத்துவிட்டு அங்கிருந்த ஒரு சீலைத் துண்டை



எடுத்துப்பார்த்தார். திரும்பித்திரும்பி இரண்டு மூன்று முறை பார்த்த பிறகு அவர் சற்று எட்ட நின்று கொண்டிருந்த குலவதியையும் பார்த்து தமது கையின் சீலையையும் பார்த்து அதை கோதாவரிக் கரையிலிருந்த ஒரு பாறை மீது வைத்துவிட்டு நீராட வேறு இடத்துக்குச் சென்றார். அரசகுமாரி அந்தப் பாறையை நோக்கிச் சென்று அந்த சீலையை எடுத்துப் பார்த்தாள். காலையில் நீராடிச் சென்றபோது தான் தவறி விட்டுப்போன மார்புக்கச்சையே அந்த சீலை என்பதை உணர்ந்த அரசகுமாரி யின் இதழ்களில் குறுநகை விரிந்தது. நீராட தொலைவில் இறங்கிவிட்ட துறவியை நோக்கினாள் குலவதி. துறவி அவளை ஏறெடுத் தும் பார்க்கவில்லை. நீராட்டத்தில் முனைந் திருந்தார். அவர் அலட்சியத்தைக் கண்ட குலவதி அன்று எப்படியும் அவரை சந்தித்து விடுவது என்று தீர்மானித்தாள். அந்த சந்திப்பும் எதிர்பாராதவிதமாக ஏற்பட்டது. அன்று பௌர்ணமியாகையால் நிலவின் ஆட்சி பூர்ணமாக இருந்ததால் அந்த பிராந் தியமே அழகின் பிம்பமாகக் காட்சியளித்தது. இன்னும் இரு மலர்க்கொத்துகளைப் பறிக்கப் போன குலவதிக்கு கூரையில் எட்ட இருந்த கொத்துகள் எட்டவில்லை. அவள் கையைத் தாண்டிய இன்னொரு நீண்ட கை அந்த மலர்க் கொத்தைப் பறித்து அரசகுமாரியின் கையில் திணித்தது. அதைப் பறித்தது யாராயிருக்கும் என்று திகைத்த குலவதி திரும்பிப்பார்த்தாள். அவள் பின்னால் அந்த வாலிபத்துறவி நின்றி ருந்தார். அவள் பார்த்ததும் வேகமாக பர்ண சாலைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார்.

தன் பின்னால் நின்று தனது கைக்கு
டடாத மலர்க்கொத்தைப் பறித்து தனது
கயில் திணித்துவிட்டு தான் திரும்பிப்
ர்த்ததும் வேகமாக பர்ணசாலைக்குள்
ந்து கதவை மூடிவிட்ட துறவியைப் பற்றி
னத்தவண்ணம் மூடியிருந்த கதவைப்
ர்த்துக்கொண்டே நீண்ட நேரம் நின்று
ட்டாள் குலவதி. தனக்குப் பின்னால்
ப்பொழுது அவர் வந்தார்? ஏன் அப்படி
சைப்படாமல் பூனை போல் வந்தார்? வந்து
த்தனை நேரம் நின்றிருப்பார்? இப்படிப் பல
த கேள்விகளை தன்னுள் எழுப்பிக் கொண்ட
லவதி "ஒருவேளை இந்தத்துறவி ருத்திராட்சப்
னையாயிருப்பாரோ?" என்றும் கேட்டுக்
காண்டாள். பரபுருஷனொருவன் கணநேரம்
ன் பின்னால் நின்றாலும், சிறிதாவது அவன்
டல் தன் மீது பட்டிருந்தால் தனது உடல்
டுக்குற்றிருக்கும் என்று நினைத்ததால் அந்தத்
றவி மிகப் பண்பாட்டுடன் நடந்து கொண்டி
க்கிறாரென்றும், அவர் ருத்திராட்சப் பூனையா
ருக்க முடியாது என்றும் சமாதானமும்
சய்துகொண்டாள் யாதவ ராஜகுமாரி.
விர, தன் கையைத் தாண்டி அவர் கை
சன்று மலர்க்கொத்தைக் கிள்ளியபோது
வரது நீண்ட கையும் தனது கை மீது படா
ருந்ததை நினைத்த குலவதி அவர்மீது மனத்
ல் முதலில் முளைத்த சிறு சந்தேகத்தையும்
க்கிக் கொண்டாள். இருப்பினும் அவர் ஓடி
டிலின் கதவை சாத்திக்கொண்டதற்கு
ன்ன காரணம் என்று நினைத்துப் பார்த்து
டை காணாத காரணத்தால் "நான் என்ன
கமா பிசாசா என்னைக் கண்டு அவர் ஓட?"

யி வினு ஒன்றையும் எழுப்பிக் கொண்
ர். அந்த வினு அவளுக்கே வெட்கத்தைத்
தால், அவள் வெட்கங்கலந்த புன்முறுவல்
டு "நான் எதற்காக அவரைப் பற்றியே
ாக்க வேண்டும்?" என்று தன்னை கண்டித்
கொண்டாள்.

"என் முகத்தில் கதவைச் சாத்துவது
ால் ஓடி சாத்திக்கொண்டாரே, அது என்ன
ாபாடா?" என்று அந்தத் துறவியைக்
ந்துகொண்டு, அந்தக் கதவை தான்
டினுல் என்ன என்றும் நினைத்தாள். அந்த
யத்தில் அவள் பின்னுலிருந்து எழுந்த
றமாத்ரியின் குரல் அவளை இந்த உலகத்
க்கு இழுத்தது.

"குலவதி! இங்கே ஏன் நின்று கொண்டி
க்கிருய்?" என்று ஹேமாத்ரி வினவினுர்.

கையிலிருந்த முல்லைக்கொத்தை தலையில்
சாருகிக்கொண்ட குலவதி "ஆசார்யரே!
ந்த பர்ணசாலையிலிருக்கும் துறவியின்
பாக்கு விசித்திரமாயிருக்கிறது" என்ருள்.

"அவர் போக்கைப் பற்றி உனக்கென்ன?"
ன்று ஹேமாத்ரி வினவினுர், வறண்ட,
கிழச்சியற்ற குரலில்.

"என்னை அவமானப்படுத்தினுர் இந்தத்
றவி" என்று பதிலிறுத்தாள் குலவதி.

"உன்னை அவமானப்படுத்தினுரா!" ஆசார்
யரின் கேள்வியில் வியப்பு இருந்தது.

"ஆம்" என்ருள் குலவதி.

"எப்படி அவமானப்படுத்தினுர்?"—
உணர்ச்சியற்ற குரலில் வந்தது ஆசார்யரின்
கேள்வி.

"நான் இந்த பர்ணசாலைமீது பூத்திருக்கும் மலரைப் பறிக்க வந்தேன்..."

"சரி"

"என்னைப் பார்த்ததும் உள்ளே ஓடி கதவை மூடிக் கொண்டார்."

"அவர் குடிலின் கதவைத்தானே சாத்திக் கொண்டார்?"

"ஆம். இருந்தாலும், நான் அரசகுமாரி..."

"இருந்தாலும் பெண். உன்னைப் பார்க்கவோ, பேசவோ, துறவி இஷ்டப்படவில்லை யென்றால் அது எப்படித் தவறாகும்? தவிர, அவர் பர்ணசாலை மீதிருந்த மலர்க்கொத்தை அவர் அனுமதியின்றி நீ எப்படிப் பறிக்கலாம்? அதிருக்கட்டும். மலர்க்கொத்தைப் பறிக்க நீ வருவானேன்? நமது காவலரில் ஒருவனை அனுப்பலாமே?"

இதைக்கேட்ட அரசகுமாரி மிகவும் சங்கடத்தில் ஆழ்ந்தாள். இந்த விவாதம் தொடருமானால் தனது நிலை இக்கட்டாகி விடுமென்று நினைத்ததால் தலை குனிந்து நின்றாள். அதற்கு மேல் அவளை எதுவும் கேட்காத ஆசார்யர் திரும்பி தனது பர்ணசாலையை நோக்கி நடந்தார். குலவதியும் மௌனமாக அவரைத் தொடர்ந்தாள்.

துறவியின் பர்ணசாலைக்கு முன்பு நடந்த வாக்குவாதத்திற்குப் பிறகு ஹேமாத்ரி அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் அவளுடைய பர்ணசாலைக்கு முன்பு நின்று விட்டதைக்கூட கண்டுகொள்ளாமல் தமது பர்ணசாலைக்குள் நுழைந்து அங்கிருந்த

விளக்கை ஏற்றச் சொல்லி ஓலைச்சுவடிக் கட்டை அவிழ்த்து ஏதோ எழுத முற்பட்டார். ஆனால் தனது பர்ணசாலைக்கு எதிரில் நின்று விட்ட அரசகுமாரி மட்டும் உடனடியாக பர்ணசாலைக்குள் செல்லவில்லை. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தோழியொருத்தி "தேவி!" என்று அழைத்ததைக்கூட காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தோழி மற்றொரு முறை அவளை அழைத்து "வாயிலிலேயே ஏன் நிற்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு பதில் சொல்லாத குலவதி பர்ண சாலைக்குள் நுழைந்து தரையிலிருந்த பட்டு விரிப்பில் உட்கார்ந்து கொண்டாள். "எனக்கு பட்டு விரிப்பு இருக்கிறது. துறவி எதில் உட்கார்ந்து கொள்வார்? ஒருவேளை மான் தோல், புலித் தோல் இவற்றில் உட்காரு வாரோ?" என்று எண்ணினாள். துறவியை மறக்க அவளால் முடியவில்லை. தோழிகள் அளித்த உணவைக்கூட சிறிதே அருந்தினாள். அவர்கள் படுத்துக்கொண்டபிறகும் அவளுக்கு உறக்கம் வராததால் அவள் படுக்கவில்லை. இருள் முற்றிவிட்ட நேரத்தில் பர்ணசாலையை விட்டு வெளியே வந்து துறவி யின் பர்ணசாலையை நோக்கினாள். அதன் கதவு திறந்திருந்தது. கோதாவரிக் கரையை நோக்கினாள். அங்கிருந்த பாறையொன்றின் மீது துறவி உட்கார்ந்துகொண்டு நதியை நோக்கிக்கொண்டிருந்தார். அவர் அப்பொழுது இடையில் மட்டும் காவி அணிந்திருந்தார். மேல் காவியில்லாததால் அவர் உடல் நிலவில் மின்னியது. அவருடன் எப்படியும் பேசி விடுவது என்று தீர்மானித்த குலவதி பக்கத்தி

லிருந்த ஆசார்யர் குடிலை நோக்கினாள். அதன் கதவு மூடப்பட்டிருந்ததால் துணிவுடன் கோதாவரி நதிக்கரையை நோக்கி நடந்தாள். அவள் துறவி உட்கார்ந்த பாறையை அணுகியதும் துறவி எழுந்திருந்து நதியின் நீரில் இறங்கி வான்மதியை நோக்கி கைகளை நீட்டி ஏதோ வாயால் சொற்களை உதிர்த்தார். அப்படி ஏதோ ஓதிவிட்டு மீண்டும் கரையேறியபோது அரசகுமாரி கரையில் நின்றிருந்தாள். அவளைக் கடந்துசெல்ல துறவி முற்பட்டபோது "இத்தனை நேரம் ஏதோ சந்திரனைப் பார்த்து சொன்னீர்களே, அது என்ன?" என்று கேட்டாள் குலவதி துணிவுடன்.

"சந்திர பூஜை" என்று கூறிய துறவி சற்று நின்று குலவதியை உற்று நோக்கினார். ஈட்டியிலும் கூரிய கண்கள் அவள் இதயத்தை ஊடுருவி விடுவன போல் பார்த்தன.

26—5—85 குங்குமம்
இதழில் இணைப்பு தொடரும்


சாண்டில்யன்

# 3. துறவியின் துணை

கோதாவரிக் கரையில் நின்ற கட்டழகி குலவதி தான் கரையேற முயன்ற சமயத்தில் சிறிதும் விலகி இடம் கொடுக்காமல் நின்ற இடத்திலேயே நின்றதைக் கண்ட அந்த வாலிபத் துறவி அவள் துணிவை நினைத்து வியப்பெய்தினாரென்றால், அவள் பவளவாய் திறந்து கேள்வி கேட்க முற்பட்டதும் பெரும் பிரமையை அடைந்தார். ஆனால் அந்த பிரமையை கண்ணிமைக்கும் நேரத்தில் உதறி விட்டு அவளுக்கு பதிலும் சொன்னார். 'சந்திர பூஜை' என்று அவர் பதில் சொன்னதன்றி சந்திரனைப் போலவே அழகாய் இருந்த அவள் முக பிம்பத்தில் முளைத்திருந்த இரு கருவிழிகளுடன் தனது விழிகளையும் கலந்தார். அந்த வாலிபத் துறவியின் பார்வை தனது கண்கள் மூலமாக தனது உயிர் நிலையையே எட்டி ஆராய்வது போலிருந்த

காரணத்தால், குலவதி சற்று சங்கடப்பட்டு கண்களை அவர் கண்களிலிருந்து விடுவிக்க முயன்றும், அது முடியாததால் மேலும் பேச்சைக் கொடுக்கத் துவங்கி "சந்திரபூஜையா!" என்று வியப்பு ஒலித்த குரலில் விசாரிக்கவும் செய்தாள்.

வாலிபத் துறவி அவள் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்லாமல் அவள் கண்களையே உற்றுப் பார்த்த வண்ணம் கோதாவரி நீரிலேயே நின்றிருந்தார் பல விநாடிகள். பிறகு அவர் கண்கள் அவள் உடல் பூராவையுமே கவனிக்கத் தொடங்கின. குலவதியின் சந்திர பிம்ப முகமும், வண்டினும் கரிய விழிகளும், அந்த விழிகளுடன் நிறத்தில் போட்டி போட்ட கரிய குழலும், நுதலில் அவள் தீட்டியிருந்த செவ்விய பொட்டும், அதிகமாக நீண்டோ குறைவாகவோ இல்லாமல் அளவுடன் இருந்த நாசியும், சங்கத்தை பறிக்கும் கழுத்தும் துறவியின் கண்களை ஈர்த்தன. துறவியின் கண்கள் செல்லக்கூடாத இடங்களிலும் அவர் கூர் விழிகள் சென்று, பருவத்தின் காரணமாக கெட்டிப்பட்டு இருந்த தாமரை மொட்டை பழிக்கும் மார்பக எழுச்சியிலும், சிற்றிடையிலும், பருத்த கால்களின் பரிமாணத்தையும் பார்த்தன. அந்த விழியின் கூர்மை தனது ஆடைக்குள்ளும் புகுந்து அலசுவது போன்ற பிரமை குலவதிக்கு ஏற்படவே அவள் பெரிதும் சங்கடத்துக்குள்ளாகி சற்று விலகி வழிவிட்டு நின்றாள்.

அவள் நகர்ந்ததை கண்ட அந்த வாலிபத் துறவி லேசாக முறுவல் கொண்டபோது


அவருடைய வலிய பெரிய உதடுகளின் அசைவில் அழகும் வல்லமையும் இருந்ததை கவனித்த குலவதி அந்த துறவி ஒரு வேளை ராவண சந்நியாசியாய் இருப்பாரோ? என்று நினைத்தாள்.

துறவிக்கு மனோதத்வ சாஸ்திரணம் நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும். "நீ நினைக்கும் சந்நியாசியும் வந்த இடந்தான் இது" என்று சொன்ன துறவி "சந்திர பூஜையைப் பற்றி உனக்குத் தெரிய வேண்டுமா?" என்று வினவினுர்.

துறவி மேலும் மேலும் பேச்சுக் கொடுப்பதைப்பற்றி பலத்த சந்தேகத்திற்குள்ளான குலவதி "எனக்கு எதுவும் தெரிய வேண்டிய அவசியமில்லை" என்று கூறி தனது பர்ண சாலையை நோக்கி நடக்க முற்பட்டாள்.

"அவசியமில்லாவிட்டால் கேள்வி கேட்டிருக்கக்கூடாது. கேட்டபின் அறிந்து கொள்ளாமலிருப்பதும் புத்திசாலித்தனமல்ல" என்ருர் துறவி.

அவர் சொற்களைக் கேட்ட குலவதி திரும்பிப் பார்த்தாள் சிறிது அச்சத்துடன். நின்ற இடத்தைவிட்டு துறவி அகலவுமில்லை, அவளைத் தொடர முற்படவுமில்லை. அங்கிருந்தபடியே பேசினுர் "ராஜகுமாரி! நீ ஒரு புண்ணிய தலத்துக்கு வந்திருக்கிருய். இதைப்பற்றி முழுவதும் அறிந்து கொள்வது நல்லது. புனிதமான இடங்களுக்கு யாத்திரை செய்வதே புனிதமான மனிதர்கள் அங்கு நடந்திருக்கிருர்கள், வாழ்ந்திருக்கிருர்கள் என்பதை அறியவும் உணரவுந்தான். வேடிக்கைக்குப் போகும்



இடங்கள் வேறு. அவற்றை தலங்கள் என்று பெரியவர்கள் சொல்வதில்லை. பஞ்சவடியின் விவரங்களை, கோதாவரியின் விசேஷங்களை அறிய வேண்டுமானால் ஹேமாத்ரியைக் கேள்: அவர் சொல்லுவார்'' என்று கூறினார்.

துறவி மகாமந்திரியின் பெயரைச் சொன்னதும் மிகவும் ஆச்சரியத்தின் வசப்பட்ட அரசகுமாரி துறவியை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து ''உங்களுக்கு மகாமந்திரியை ஏற்கனவே தெரியுமா?'' என்று வினவினாள்.

''தெரியும்'' என்ற துறவி மேலும் முறுவல் கொண்டார்.

''அவருக்கு உங்களைத் தெரியுமா?'' என்று வினவினாள் குலவதி.

''என்னை சிறுவயதில் பார்த்திருக்கிறார். இப்பொழுது அடையாளம் கண்டுகொண்டாரா இல்லையா என்பது தெரியாது'' என்ற துறவியின் குரல் மிக மதுரமாயிருந்தது கேட்பதற்கு.

''உங்கள் பெயர்?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''பூர்வாசிரமப் பெயரா? இந்த ஆசிரமப் பெயரா?'' என்று கேட்டார் துறவி.

வந்த சமயம் முதல் தன்னை அடியோடு லட்சியம் செய்யாமல் போய்க்கொண்டிருந்த துறவி திடீரென அன்று சகஜமாகப் பேச முற்பட்டது மிக விந்தையாயிருக்கவே அவள் கேட்டாள் ''பூர்வாசிரமம் என்பது...'' என்று.

''இந்த கோலம் ஏற்பதற்கு முந்திய கோலம்...''–துறவி சிறிதும் சிந்திக்காமல் பதில் சொன்னார்.

"அது...?"- தயக்கத்துடன் கேட்டாள் ராஜகுமாரி.

"பிரும்மசரிய ஆசிரமம்"

"அப்படியானல் உங்களுக்கு?"

"கல்யாணம் ஆகவில்லே. அதற்கான வயதுமில்லே அப்பொழுது"

"ஏன் அத்தனே சிறுவயதில் துறவறம் ஏற்றீர்கள்?"

"அது பெரிய கதை. ஹேமாத்ரியிடமிருந்து தெரிந்து கொள். கேட்டால் சொல்லுவார்."

இப்படிச் சொல்லிவிட்டு தமது பர்ண சாலேயை நோக்கி நடக்கலாஞர் அந்த வாலி பத் துறவி. அவர் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற குலவதி சிந்தனேயில் ஆழ்ந்தவளாய் மெள்ள தனது பர்ணசாலேயை நோக்கிச் சென்ருள். துறவியிடம் பேசியதி லிருந்து அவர் கபடத் துறவியல்லவென்பதை யும் மிகவும் நேர்மையானவர் என்பதையும் புரிந்து கொண்டதால் மன மகிழ்ச்சியுடன். பர்ணசாலேயை அடைந்தபொழுது அவளது பணிப் பெண்கள் இருவரும் குடிலின் வாயிலி லேயே நின்றிருந்தார்கள். அவள் பர்ண சாலேயை அடைந்ததும் "அரசகுமாரி! உங் களே மகாமந்திரி வரச் சொன்ஞர்" என்று அறிவித்தாள் ஒரு பணிப்பெண்.

குலவதியின் குறுநயனங்களில் அச்சத் தின் சாயை படர்ந்தது லேசாக. "எதற்கு வரச் சொன்ஞர்?" என்று கேட்டாள் அவள் குரலிலும் அச்சம் தெரிய.

"காரணம் தெரியாது" என்ருள் பணிப் பெண்.

"நான் அந்தத் துறவியுடன் பேசிக் கொண்டிருந்ததை மந்திரி பார்த்தாரா?" என்று வினவினாள் அரசகுமாரி.

"ஆம், பார்த்தார். அவர் பர்ணசாலையை விட்டு வெளியே வந்தார் திடீரென்று. நீங்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் எங்களை நோக்கி 'அரசகுமாரி வந்ததும் வரச் சொல்லுங்கள்' என்று சொல்லிப் போய் விட்டார்" என்றாள் இரண்டாவது பணிப் பெண்.

குலவதி ஹேமாத்ரியின் குடிலின் வாயிலை யும் பார்த்து கோதாவரிக் கரையையும் பார்த் தாள். குடிலிலிருந்தே வாயில் வழியாக அவர் தானும் துறவியும் பேசியதை கவனித்திருப்பா ரென்பதை ஊகித்ததால் சற்று திகிலுடனேயே ஹேமாத்ரியின் பர்ணசாலை வாயிலுக்குச் சென்று வெளியே நின்றபடியே "ஆசார்யரே!" என்று குரல் கொடுத்தாள்.

வாயிலுக்கு நேர் எதிரில் உள்ளே உட்கார்ந்திருந்த ஹேமாத்ரி தாம் படித்துக் கொண்டிருந்த ஓலைச்சுவடியிலிருந்து கண்களை உயர்த்தி "யார்! குலவதியா? உள்ளே வா" என்றார்.

ஆசார்யர் அழைத்த குரலில் கோபம் அடி யோடு இல்லாததால் சிறிது மனத்தைத் தேற் றிக்கொண்ட குலவதி தலைகுனிந்து வாயிலுக்குள் நுழைந்து ஆசார்யர் எதிரில் வணங்கி தலைகுனிந்து நின்றாள். அவளை ஏற இறங்கப் பார்த்த ஹேமாத்ரி "குலவதி! உட்கார்" என்று தமது கிருஷ்ணாஜினத்தில் (மான் தோலில்) சிறிதும் இடம்விட்டு நகர்ந்து கொண்டார்.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் உட்கார்ந்த குலவதி ஏதும் பேசாமல் மௌன மாகவே இருந்ததைக் கண்ட ஆசார்யர் "குலவதி!" என்று மெதுவாக அழைத்தார்.

"ஆசார்யரே!" என்று குலவதியும் சொல்லை மென்று விழுங்கினுள்

ஆசார்யர் வீணுக பேச்சை வளர்த்தாமல் "துறவி என்ன சொன்ஞர்?" என்று நேராக விஷயத்துக்கு வந்தார்.

குலவதியும் நேராகவே பதில் சொன்ஞள் "சந்திர பூஜையைப்பற்றி சொன்ஞர்" என்று.

"வேறு தன்னைப்பற்றி ஏதும் சொல்ல வில்லையா?" என்று ஹேமாத்ரி வினவினுர்.

"இல்லை. தன்னைப் பற்றி ஏதாவது தெரிய வேண்டுமாஞல் உங்களையே கேட்கச் சொன்ஞர்" என்ருள் குலவதி.

"அப்படியா சொன்ஞர்?" என்று வினவிய ஹேமாத்ரியின் முகத்தில் சிந்தனைச் சாயை படர்ந்தது.

"ஆம். அவரை நீங்கள் சிறுவயதில் பார்த்த தாம்" என்ருள் குலவதி.

மேற்கொண்டு உடனடியாக ஹேமாத்ரி கேள்விகளைக் கேட்கவில்லை. தீவிர சிந்தனை யில் இறங்கி நீண்ட நேரம் பேசாமலே இருந்து விட்டு "அப்பொழுதே சந்தேகப்பட்டேன். அவன்தாஞ இவன்? சரி; எதற்காக துறவறம் ஏற்ருன்? ஒருவேளை அண்ணன் வேலையா யிருக்குமோ?" என்று சற்று ராஜகுமாரியின் காது கேட்கும்படியே, தன்னைக் கேட்டுக்கொண் டார். பிறகு "ஆம் ஆம். சந்தேகமில்லை. அவஞ

கந்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சந்திர பூஜை எதற்காகச் செய்கிருன்? துறவறம் பூண்டும் குலவழக்கத்தை விடவில்லை. ஆகவே துறவறம் உண்மையாயிருக்க முடியாது. எப்படியாளுல் என்ன? சத்தியசந்தன். பொய் சொல்லமாட்டான். அறமுறைக்குப் புறம்பான எதையும் செய்யமாட்டான்'' என்று விளக்கிக் கொள்ளவும் செய்தார். பிறகு கண்களை உயர்த்தி ''குலவதி! அவன் பெயரைக் கேட்டாயா?" என்ருர்.

''கேட்டேன்!''- அரசகுமாரி குழப்பத்துடன் பதில் சொன்ளுள். ஆசார்யரின் போக்கு மிக விசித்திரமாயிருந்தது அவளுக்கு.

''என்ன பதில் சொன்ளுன்?'' ஏக வசனத்திலேயே பேசிஞர் ஹேமாத்ரி.

''விசித்திரமாக பதில் சொன்ஞர்!''

''என்ன விசித்திரம் அதில்?"

''பூர்வாசிரமப் பெயரா, இந்த ஆசிரமப் பெயரா என்று கேட்டார். பூர்வாசிரமம் பிரும்மசரியம் என்றும் கூறிஞர்.''

''இது மாத்திரமென்ன? இதுவும் பிரும்மசரியந்தான். இடையிலிருந்திருக்க வேண்டிய இல்லறம் இல்லை. அவன் திருமணம் செய்து கொள்ளாததற்குக் காரணமும் உண்டு'' என்ருர் மகாமந்திரி.

''என்ன காரணம்?''-சிறிது தயக்கத்துடன் கேட்டாள் ராஜகுமாரி.

''வட கொங்கணத்தின் அரசியல் கதை அது. வட கொங்கண சோமேசுவரன் தனது தம்பிக்கு கன்னட நாட்டுப் பெண்ணை

திருமணம் பேசினான். அந்தப் பெண்ணை மணக்க தம்பி இஷ்டப்படவில்லை. அதனால் கன்னட நாட்டு விரோதம் ஏற்படவே தம்பியை சோமேசுவரன் நாடு கடத்தி விட்டான். அந்த தம்பிதான்இந்த துறவியாயிருக்க வேண்டும். நிச்சயிக்கப்பட்ட பெண் இவன் கண் முன்பாகவே இன்னொருவனுடன் சரசமாடியதைப் பார்த்த இவன் திருமணத்தையே வெறுத்து துறவறம் பூண்டதாக தேவகிரிக்கு செய்தி வந்தது. இருப்பினும் இவன் ம கா வீ ர ன். கப்பற்படைகளை நடத்துவதில் மிக வல்லவன். இவனில்லாதது சோமேசுவரனுக்கு பெரும் பலவீனம். சந்திரதேவன் இல்லாததால் சோமேசுவரன் நாட்டை மிக சுலபமாகப் பிடிக்கலாம்" என்று துறவியின் பூர்வ கதையை விளக்கியதன்றி ஹேமாத்ரி "வேறெதுவும் சொல்லவில்லையா அவன்?" என்றும் வினவினார்.

"சொன்னார்"- மெதுவான குரலில் பேசினாள் குலவதி.

"என்ன சொன்னார்?"

"இது புண்ணியதலமென்றும் இங்குள்ள இடங்களைப் பார்ப்பது புண்யமென்றும் அந்த இடங்களை நீங்களே காட்டுவீர்களென்றும் சொன்னார்."

ஹேமாத்ரி புன்முறுவல் கொண்டார். "ஏன் அவனே காட்டினால் என்ன?"

"அவர் துறவி".

"அதனாலென்ன?"

"என்னைப் போன்ற பெண்ணை எப்படி அழைத்துக்கொண்டு போவார்?"

"தனியாக அழைத்துக் கொண்டு போக வேண்டாம். தோழிகளுடனும் இரு காவலருடனும் நீ போகலாமே" என்ற ஹேமாத்ரி "நீ படுத்துக் கொள். சந்திரதேவனுடன் நான் பேசுகிறேன்" என்று கூறினர்.

அரசகுமாரி ஆசார்யர் பர்ணசாலையிலிருந்து வெளியே வந்து தனது பர்ணசாலைக்குள் நுழைந்தாள். அங்கிருந்த பட்டு விரிப்பில் படுத்த வண்ணம் அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய ஆரம்பித்தாள். அவள் கண்களை மூடியதும் அந்த துறவியின் அழகிய உருவும் அவள் மனக்கண் முன்பு எழுந்தது. "இவரும் சந்திரனைப் போலத்தானிருக்கிருர். இவர் எதற்காக அந்த சந்திரனுக்கு பூஜை செய்ய வேண்டும்? பெயர் பூர்வாசிரமத்தில் சந்திரதேவர். இந்த ஆசிரமத்தில்?" இப்படி கேள்விகளை எழுப்பிக் கொண்டாள். "எந்தப் பெயரை வைத்தாலும் அவருக்கு அழகாகத்தான் இருக்கும்" என்று தானே முடிவுக்கும் வந்தாள். தன்னுடன் அத்தனை தூரம் பேசியும் தன் சமீபத்தில் அவர் வரவில்லையென்பதையும் எண்ணிப் பார்த்து "இவர் சத்தியமான சந்நியாசி" என்று அவரைப் பாராட்டவும் செய்தாள். அன்று முழுவதும் அவள் மனம் அந்த வாலிபத் துறவியைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது.

இத்தகைய சிந்தனையில் ஆழ்ந்து அரை குறையாக நித்திரை செய்த அரசகுமாரி அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். அவள் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பர்ணசாலைக்குத் திரும்பியபோது அங்கு தனது இரு பணிப்பெண்களும் பயணத்துக்கு சித்தமா

யிருப்பதையும், புரவிகளும் வாயிலில் சேண மணிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்ததையும் கவனித்தாள். அந்த சமயத்தில் ஹேமாத்ரி அங்கு தோன்றி "குலவதி!சீக்கிரம் பயணப்படு. இந்தப்பகுதியின் சில அழகிய இடங்களை நீ இன்று பார்க்கப் போகிறாய்" என்றார்.

"உங்கள் புரவி?" என்று வினவிய ராஜ குமாரி சுற்றும்முற்றும் பார்த்தாள்.

"நான் வரவில்லை. உங்களை மகரிஷி சந்திரதேவர் அழைத்துப் போவார். என் புரவியை அவருக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றார் ஹேமாத்ரி.

அரசகுமாரி தனது விழிகளை துறவியின் பர்ணசாலையை நோக்கிச் செலுத்தினாள். அந்த வாலிபத்துறவி ஹேமாத்ரியின் புரவியில் அமர்ந்து பயணத்துக்கு சித்தமாயிருந்ததைக் கவனித்தாள் குலவதி. அதை துறவியும் கவனித்திருக்க வேண்டும். அவர் தமது புர வியை மலைப்பகுதியை நோக்கிச் செலுத் தலானார்.

பேசாமல் தனது புரவியை நடக்க விட்டாள் அரசகுமாரி. இரு பணிப்பெண்களும் அவளை தங்கள் புரவிகளில் பின்தொடர்ந் தனர். அரை ஜாமத்திற்கெல்லாம் அடர்ந்த அடவிக்குள் துறவி பிரவேசித்து விட்டார். காட்டின் அடர்த்தியைப் பார்த்ததும் சிறிது தனது புரவியை நிறுத்தினாள் அரசகுமாரி. அப்பொழுது ஒலித்தது முன்னே சென்ற துறவியின் குரல் "அரசகுமாரி! அஞ்சாமல் வா. நீ இதுவரை கண்டிராத காட்சிகளை காணப் போகிறாய்" என்று

அரசகுமாரி தனது புரவியை அடவிக்குள் செலுத்தினாள். அவள் அங்கு கண்ட முதல் காட்சியே அவள் இதயத்தை அள்ளிச் சென்றது. அந்த சமயத்தில் அவள் சந்திர தேவனின் பூர்வ கதையை நினைத்தாள், சந்திர பூஜையை நினைத்தாள். இவர் பூஜை செய்த அந்த சந்திரனே சந்திரதேவனாக வந்திருக்க வேண்டும் என்று எண்ணினாள். அத்தனை அழகாக, கம்பீரமாக புரவியில் உட்கார்ந்திருந்த அந்தத் துறவியை அணுக தனது புரவியையும் செலுத்திய அரசகுமாரி அவர் புரவியின் பக்கத்தில் நிறுத்தினாள். துறவி எதிரே விரிந்த சோலையையும் வாவியையும் காட்டி "இது புராண மகிமை வாய்ந்தது" என்று சொன்னார். கண்ணெதிரே விரிந்த காட்சியில் மனத்தைப் பறிகொடுத்த குலவதி பேசும் சக்தியை இழந்து நின்றாள்.

2—6—85 குங்குமம் இதழ்
இணைப்பில் தொடரும்


இலவச
இணைப்பு-2.6.85

# துறவி



சாண்டில்யன்

# 4. மாயாதேவி

கண்ணெதிரே விரிந்த காட்டு வாவியின் அமைப்பையும் அழகையும் கண்டு பிரமித்த குலவதி, தனது சேலையின் மேல்பகுதி காற்றில் அலைந்து பக்கத்துப் புரவியில் அமர்ந்திருந்த துறவியின் தோளைத் தடவியதைக்கூட பார்க்காமலும், சேலையை இழுத்து மூடாமலும் இடையில் அதன் தலைப்பை எடுத்து சொருகிக் கொள்ளாமலும், சிலையென புரவிமீது அமர்ந் திருந்தாள் நீண்டநேரம். அந்த வாவி சக்கிர வட்டமாக அமைந்திருந்ததாலும் அதன் நீர் பளிங்கு போல் அடி வரையில் தெரிந்து கூழாங்கற்களைக் காட்டிக் கொண்டிருந்த தாலும் வைரங்கள் பதித்த வெள்ளித் தாம்பாளம் போல் தெரிந்தது. அதைச் சுற்றி லும் முளைத்துப் பூத்திருந்த பலவகை புஷ்பச் செடிகள் அதன் நீர் மீது ஆங்காங்கு புஷ்பங் களை உதிர்த்திருந்ததாலும், காற்றில் எழுந்த வாவியின் அலைகள் அவற்றை சுற்றிலும்

ஒதுக்கியிருந்ததாலும், வளையமாகத் தொடுத்த புஷ்ப மாலையைத் தலையில் சூட்டிய யுவதியென காட்சியளித்தது அந்த வாவி. அந்த வாவி யின் நடுவிலிருந்த இரண்டு மூன்று பெரிய பாறைகள் நீந்துவோர்க்கு தங்கும் வசதியாக அமைந்திருந்தது. அதைத்தவிர எங் கிருந்தோ தொடர்ச்சியாக நீரைப் பாய்ச்சிக் கொண்டிருந்த மெல்லிய அருவியொன்று அதன் ஆழம் குறையாமலிருக்க உதவிக் கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்த குலவதி "என்ன அழகு! நீராடுவதற்கு எத்தனை சிறந்த இடம்!" என்று சற்று வாய் விட்டே சொன்னாள்.

அது காதில் விழுந்தாலும், தமது தோளை குலவதியின் மேலாடை தழுவிக் கொண்டிருந்த காரணத்தால் சங்கடப்பட்டுக் கொண்டும், அந்த ஆடையைத் தொட இஷ்டமில்லாத தால் என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளூர இம்சைப்பட்டுக்கொண்டும், புரவி யில் உடகார்ந்த துறவி பதிலேதும் சொல்ல வில்லை. அவர் பதில் சொல்லாததால் அவரைத் திரும்பி நோக்கிய குலவதி "நான் சொன்னது உங்கள் காதில் விழவில்லையா?" என்று கேட்டவள் சட்டென்று தனது முந்தானை துறவியின் தோள் மீது ஆரோகணித் திருப்பதைக் கண்டு "மன்னிக்க வேண்டும்" என்று கூறி அதை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு துறவி பேசலானார். "பெண்ணே! நீ சொன்னதில் தவறில்லை.

இந்த வாவி நீராட்டத்துக்கு தகுந்த இடந் தான். இதில் பாயும் அருவியும் கோதா வரியைச் சேர்ந்ததுதான். இந்த நீராட்ட கட்டம் மிகவும் புனிதமானது. புராணப் பிரசித்தியுள்ளது. இங்குதான் சீதையும் ராமனும் ஜலக்கிரீடை செய்தார்கள். நீந்தி துளைந்து விளையாடினார்கள்'' என்று கூறிய துறவியின் கண்கள் அந்த பழைய காலத் துக்கே சென்றுவிட்டன போல் பிரமை தட்டிக் கிடந்தன.

துறவி அந்த பிரமையிலேயே கனவில் பேசுவது போல் பேசினர். ''கோதாவரியை அடுத்த இந்த வாவிக்கு சீதை அடிக்கடி கணவனுடன் நீந்தி விளையாட வருவாள். அப்படியொரு நாள் செய்த ஜலக்கிரீடையின் போது ராமனை நோக்கி 'நீங்கள் ஆண் பிள்ளையானல் என்னைப் பிடியுங்கள்' என்று கூறி வாவியில் குதித்து விட்டாள், வேகமாக நீந்தவும் செய்து ஒரு பாறை மீது ஏறி உட்கார்ந்தாள். ராமபிரானும் வாவியில் குதித்து நீந்தி அந்தப் பாறையை நோக்கிச் சென்றுர். அவர் அருகில் வந்தவுடன் சீதை அதிலிருந்து நீரில் குதித்து நீந்தி வேறொரு பாறைக்குப் போய்விட்டாள். அதையும் ராமன் நீந்தி அணுகி அவள் காலைப் பிடிக்கப்போக அவள் அவர் கைகளிலிருந்து நழுவி நீரில் துளைந்து நீந்தி வேறொரு பாறைக்குச் சென் ருள். ராமன் பெருமூச்சு வாங்க நீந்தி அந்தப் பாறைக்கும் சென்று சிறிது மூச்சுவாங்க



நிதானப்பட்ட சமயத்தில், லட்சுமணன் வாவியைச் சுற்றியிருந்த செடிகளை நீக்கிக்கொண்டு எட்டிப் பார்த்தான்..." இங்கு சிறிது நிறுத்தினார் துறவி.

அந்த கட்டம் மிகவும் சுவையாயிருக்கவே "மேலும் சொல்லுங்கள்" என்று ஊக்கினாள் குலவதி.

"அப்படி ராமன் களைத்து நின்ற சமயத்தில் சீதை லட்சுமணனைப்பார்த்து "லட்சுமணா! உன் அண்ணா மிகப்பெரிய வீரரென்று சொல்கிறார்களே. கேவலம் ஒரு பெண்ணைப் பிடிக்க முடியவில்லை. நீச்சலில் தோற்று சளைத்து விட்டாரே! இவர் என்ன வீரர்?" என்று பலபடி சொல்லி நகைத்தாள். லட்சுமணனும் நகைத்தான். இந்த சிருங்கார நீராட்ட லீலை வால்மீகி ராமாயணத்தில் குறிப்பாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த வாவியையும் இதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் புண்ணியத் தலமென்று சொல்கிறார்கள்".

இந்த இடத்தில் அதிக உணர்ச்சி வசப் பட்ட துறவி * "இந்த ஜலக்கிரீடையைப் பற்றி சீதையை ராவணன் தூக்கிச் சென்ற பிறகு துக்கத்துடன் லட்சுமணனிடம்

---

* வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டம் 63- வது சர்க்கத்தில் "அஸ்மின் மயாஸார்த்தம்" என்ற சுலோகம். பெரிய ஆச்சான்பிள்ளை இயற்றிய 'தனிச்லோகி' என்ற நூலில் ஜலக்கிரீடை விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

ராமன் சொல்கிருன்'' என்ற அவர் தொண்டை அடைத்துக் கொண்டது.

அவர் மன நெகிழ்ச்சியைப் பார்த்த குலவதி "அப்பா! என்ன ஈடுபாடு இந்த துறவிக்கு காவியத்தில்? அதுவும் ஜலக் கிரீடையை எப்படி தத்ரூபமாக வர்ணிக் கிருர்!'' என்று வியந்தாள். அதை மெள்ள கேட்கவும் செய்தாள் "தாங்கள் தற் போதைய ஆசிரமத்துக்கு இத்தகைய காவிய கட்டங்களை நினைப்பதும் வர்ணிப் பதும் பொருந்துமா?'' என்று.

துறவி அவளை மெதுவாகத் திரும்பிப் பார்த்தார். "பெண்ணே! நான் விவரித்தது மானிடரின் அற்பமான விளையாட்டல்ல. ஆண்டவன் விளையாட்டு. அவன் திருவிளை யாடல்களை எண்ணுவதும், பேசுவதும் புண்யம். தவிர எனது ஆசிரமத்துக்கும் இதற்கும் எந்தவித தடையும் கிடையாது. இதை எழுதியவரே ஒரு துறவி. முற்றும் துறந்த முனிவர். அது மட்டுமல்ல, நாம் பார்க்கும் விஷயங்களிலும் எண்ணும் விஷயங்களிலும் நமக்கு ஆசாபாசங்கள் இல்லாவிட்டால் எதையும் பார்க்கலாம்'' என்றும் சொன்னர்.

"அப்படியானல் ஒன்று அனுமதிப்பீர் களா?'' என்று வினவினுள் அரசகுமாரி.

"சொல் ராஜகுமாரி'' என்ருர் துறவி.

"இப்பொழுது கதிரவன் நன்ருகப் பிரகா சிக்கிருன்''— அரசகுமாரி இதை வேண்டு



மென்றே சுட்டிக் காட்டினுள்.

"ஆம். வெகு சீக்கிரம் நடுப்பகலை எய்துவோம்"

"அப்படியானுல் எனக்கு ஒரு ஆசை இருக்கிறது"

"என்ன ஆசை சொல்"

"நீங்கள் அனுமதிப்பீர்களா?"

"ஆசையைப் பொறுத்தது"

"இந்த வாவியில் நானும் நீராடலா மென்று நினைக்கிறேன்" — இதை மிகவும் குழைந்த குரலில் சொன்ன குலவதி துறவியை ஏறெடுத்துப் பார்த்தாள்.

துறவியின் கண்களும் அவள் கண்களை சந்தித்தன. "அரசகுமாரி! நீ நீராடுவதைப் பற்றி ஆட்சேபனையில்லை. ஆனுல் இந்த வாவி நீ நினைப்பது போல் சிறியது அல்ல. அதிக ஆழமானது. நன்ருக நீந்தத் தெரிந்தாலொழிய இதில் இறங்குவது ஆபத்து" என்று சுட்டிக் காட்டினுர். அவருடைய கண்கள் அவள் கண்களை ஊன்றிப் பார்த்தன.

நீண்டநேரம் அவர் கண்களை சந்திக்க முடியாத குலவதி தனது கண்களை தாழ்த்திக் கொண்டாள். "நீச்சலில் நான் யாருக்கும் சளைத்தவளல்ல. நான் மீனுகப் பிறந்திருக்க வேண்டும். பிரும்ம சிருஷ்டி சிறிது தவறி என்னை மானிடப் பெண்ணுக்கிவிட்டது" என்று சொல்லி பூமியைப் பார்த்த வண்ணமே நகைத்தாள்.

ஜலதரங்கம் சப்திப்பது போல் சப்தித்த அந்த சிரிப்பை காதில் வாங்கிய துறவி தமது இதழ்களிலும் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு "நீயும் மீன்தான். உன் கண்களும் மீன்களைப் போலத்தான் இருக்கின்றன. சரி நீராடு ராஜகுமாரி. ஆனால் ஆழம் பார்த்து இறங்கு. நீந்தி நடுப்பாறைக்குச் சென்று திரும்ப முடியாமல் திகைக்காதே" என்று கூறி விட்டு "நான் மறைவிலிருக்கிறேன். தேவை யானல் குரல் கொடு" என்று சொல்லி தனது புரவியை புதர்கள் அடர்த்தியாயிருந்த இடத் துக்குச் செலுத்தி அடுத்த சில விநாடிகளில் குலவதியின் கண்களிலிருந்து மறைந்து விட்டார்.

அவர் கண்ணுக்கு மறைந்ததும் பணிப் பெண்களை அழைத்து தனது நீராட்ட ஆடையை எடுத்து வர உத்தரவிட்ட குலவதி தோழியொருத்தி தந்த சிற்றுடையை நன்கு இழுத்து உடலில் சுற்றி சேலையை நெகிழவிட் டாள். "இங்கு யாரும் வராமல் பார்த்துக் கொள் ளுங்கள்" என்று பணிப்பெண்களை எச்சரித்து விட்டு வாவியில் இறங்கினாள். சூரிய கிரணங்கள் பட்டபின்பும் அந்த வாவி நீர் மிகக் குளிர்ச்சி யாகவே இருந்ததால் அந்தக் குளிரை சரி செய்துகொள்ளவென திடீரென நீரில் குதித்து நீந்தத் தொடங்கினாள் குலவதி. சிறிது நேரம் கைகளை மாற்றிப் போட்டு நீந்தினாள். சிறிது நேரம் மல்லாந்து நீந்தினாள். ஒருமுறை வாவியின் நடுவிலிருந்த பாறைமீது ஏறி

உட்கார்ந்து கால்களை ஜலத்தில் அடித்து நீர்த் திவலைகளைக் கிளப்பினாள்.

மகரிஷி சந்திரதேவர் மறைவுக்குச் சென்றாராலும் அந்த வாவியின் ஆழத்தைக் கருதி சிறிது அச்சத்துடன் மறைவிலிருந்த படியே அரசகுமாரியின் நீச்சலைக் கவனித்தார். அவள் கைகளை மாற்றிப் போட்டு நீந்திய போது அவள் பின்னழகுகள் அசைந்த முறையும், மல்லாந்து நீந்தியபோது முன்னழகுகள் துலங்கிய விதமும் அவர் மனத்துக்கு பெரும் சஞ்சலத்தை உண்டுபண்ணவே "மகரிஷிகளின் தவத்தைக் கெடுக்க இந்திரன் பெண்களை அனுப்பியது எத்தனை சரியானது" என்று சிந்தித்தார். எத்தனையோ பெண்களைப் பார்த்தும் சலிக்காத தன் மனம் இந்தப் பெண்ணிடம் ஏன் சலிக்கிறது என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டார். இறுகிய கண்களுக்குள்ளும் குலவதியின் மனத்தைக் குலைக்கும் எழிலுருவம் எழுந்து அவரை அவதிப்படுத்தியது. தம்மைப் பார்த்து அவள் கண்கள் நகைப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. கண்கள் மூடினாலும் அவள் துளைந்து நீராடி ஜலத்தில் கால்களை அடித்த ஒலியும், அவள் சிரிப்பொலியும் காதுகளில் பாய்ந்து அவரது துறவறத்துக்கு இழுக்கை விளைவிக்கத் துவங்கின.

இருப்பினும் நல்ல குலத்தில் பிறந்த காரணத்தால் அவர் தமது மனத்தை பெரிதும் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றார். கடைசி

டியில் அவள் நீராட்டத்தை முடித்துக்கொண்டு கரையேறியதைக் கண்டதும் இன்னும் அதிக மறைவுக்குப் போனார். அங்கும் விதி அவரை விடாமல் துரத்தியது.


அரசகுமாரி ஆடையணிய சரியான மறைவிடத்தைத் தேடி சுற்றுமுற்றும் பார்த்து மிகவும் அடர்த்தியாயிருந்த புதரை நாடினாள். புதரை நோக்கி புறப்படுமுன்பு தனது பணிப்பெண்களிடம் ஆடையைக் களைந்து கொடுத்துவிட்டு சீலையை உடம்பு பூராவும் மறையும்படி சுற்றிக் கொண்டு புதரை அடைந்து சேலையை நெகிழ விட்டு சரியாக அணியத் துவங்கினாள். அணியு முன்பு தன் மார்பில் தங்கியிருந்த இரண்டொரு பூ இதழ்களை எடுத்து எறிந்தாள். பிறகு தன்னைத்தானே அழகு பார்த்துக் கொண்டாள் இடையில் மட்டும் சேலையைக் கட்டிக்கொண்டு. "இப்படி என்னை துறவி பார்த்தால்?" என்று எண்ணியவள் 'சீ! சீ! என்ன எண்ணம் இது? அந்த மகானுபாவரைப் பற்றி எண்ணுவது எத்தனை அபசாரம்?' என்று தன்னை நொந்துகொண்டாள். அந்தப் புதருக்கு அப்புறம் புரவியில் அமர்ந்திருந்த துறவி சற்று கண்ணைத் திருப்பியபோது அரசகுமாரியிருந்த நிலையைக் கண்டார். ஏதோ விஷம் கடித்துவிட்டது போல் கண்ணை இறுக மூடி உதட்டையும் கடித்துக் கொண்டார். "பெண் சிருஷ்டி பெரும் மாயை. ஆட்வர்களின் மனத்தைக் கெடுக்கவே ஏற்பட்டது" என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டார். அரசகுமாரியைக் கண்ட பாவத்துக்கு பிராயச்



சித்தம் செய்ய புரவியிலிருந்து இறங்கி தரையில் மண்டியிட்டு வாயால் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்தார். அவர் அப்படி மந்திரங்களை ஓதி முடித்தபிறகு கண்ணைத் திறந்த போது மாயை தன்னை விடவில்லையென்பதை உணர்ந்து கொண்டார். அவர் எதிரே மிக அழகாக ஆடையணிந்து ஆபரணங்களைப் பூட்டிக் கொண்டு மாயாதேவியைப் போலவே அரசகுமாரி நின்றிருந்தாள்.

9—6—85 குங்குமம் இதழில்
இணைப்பு தொடரும்

SUPPLEMENTED TO KUNGUMAM ISSUE
DATED 2—6—85


குங்குமம்
இலவச இணைப்பு
சூறாவளி
சாண்டில்யன்


சாண்டில்யன்

## 6. அண்ணன் கேட்ட வரம்

தன்னைப் பின்பற்றி வரும்படி துறவிக்கும் மற்றவர்களுக்கும் உத்தரவிட்டு தனது புரவியை சில அடிகள் நகர்த்தியதும் யாரும் தன்னைப் பின்பற்ருததை உணர்ந்த சோமேசுவரன் திடீரெனத் தனது புரவியைத் திருப்பியபோது, துறவி தனது மார்புக்கு நேராக அம்பொன்றைக் குறிவைத்துக்கொண்டு அசையாமல் அவரது புரவிமீது உட்கார்ந்திருப்பதைக் கண்டு "எதற்காக அம்பைப் பூட்டியிருக்கிருய்? என்னைக் கொல்ல உத்தேசமா?" என்று வினவினுன். அவன் அப்படிக் கேட்டபோது அவன் முகத்தில் கோபம் விரவிக் கிடந்ததையும், உதடுகள் லேசாக உட்புறம் மடிந்து சிறிது இகழ்ச்சியைக் காட்டியதையும் கவனித்த சந்திரதேவர் "உன்னைக் கொல்ல நினைத்திருந்தால் நான் இத்தனை நாள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை" என்று எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பேசினுர்.

தன்னைக் கொல்ல பல வாய்ப்புகள் தம்பிக்கு இருந்ததை சோமேசுவரன் ஏற்கனவே

உணர்ந்திருந்தான். அவனை நாடுகடத்தியதை மக்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பதையும், சந்திரதேவர் போன்ற ஒரு மாபெரும் வீரரை, கடல்போரில் இணையில்லாத ஒரு கப்பலோட்டியை இழப்பதின் அபாயத்தை தனது மகா மந்திரியும் சுட்டிக்காட்டியதையும் எண்ணிப் பார்த்த சோமேசுவரன் "தம்பி நினைத்திருந்தால் வடகொங்கணத்தில் எனக்கு எதிராக புரட்சியையே கிளப்பியிருக்கலாம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அண்ணன் எண்ணத்தை வலியுறுத்த துறவியே பேசத்துவங்கி "சோமேசுவரா! உன்னைக் கொல்லவேண்டுமானால் அதற்கு வாய்ப்புகள் பல நான் நமது நாட்டிலிருந்த போதே இருந்தன. அதைத்தவிர நீ இங்கு அடிக்கடி வேட்டையாட வருவதும் எனக்குத் தெரியும். நீ வேட்டையாட மலையின் இப் புறத்துக்கு வந்ததை பலமுறை நான் கண்டிருக்கிறேன். உனக்கு வெகு அருகில் புதர்களில் பலமுறை ஒளிந்து உன்னைக் கவனித்திருக்கிறேன். உன்னை நான் எப்பொழுதோ கொன்றிருக்க முடியும். நாடாசை இருந்தால் அதைச் செய்து இருப்பேன். நான் ஆசைகளைத் துறந்தவன். ஆதலால் நீ இங்கு வந்தபோதெல்லாம் உன் கண்ணில் படாமலே இருந்தேன். இந்த அரசகுமாரியை நீ சிறை செய்வது தவறு. மலையின் இந்தப் பகுதி உன் நாட்டைச் சேர்ந்ததல்ல" என்றார் சர்வ சாதாரணமான குரலில்.

சோமேசுவரன் தம்பி வில்லில் பூட்டியிருந்த அம்பைக் கண்டு சிறிதும் அஞ்சின

னில்லை. அம்பைப் பூட்டியிருப்பது தன்னை அச்சுறுத்துவதற்கே என்று நம்பிய சோமேசுவரன் "அண்ணனைக் கொல்வது துறவிகளின் தர்மமோ?" என்று வினவினான்.

"அல்ல. தர்மத்தைக் காப்பது துறவிகளின் கடமை" என்று மகரிஷி சந்திரதேவர் திட்டமாகச் சொன்னார்.

"எந்த அதர்மத்தைக் குறிப்பிடுகிறாய்?"

"பெண்ணைப் பிடிக்க முயலும் ஒரு அரசனின் அதர்மத்தைக் குறிப்பிடுகிறேன்."

"நீதான் துறவியாயிற்றே! உனக்குப் பெண் எதற்கு?"

"எனக்கு எந்தப் பெண்ணும் வேண்டாம். இவளைக்காத்து பஞ்சவடியிலிருக்கும் இவளது மனிதர்களிடம் ஒப்படைப்பது எனது கடமை. என்னை நம்பித்தான் ஹேமாத்ரி இவளை அனுப்பியிருக்கிறார்"—இந்த கடைசி வார்த்தைகளை சிறிது அழுத்தியே சொன்னார் சந்திரதேவர்.

ஹேமாத்ரியின் பெயரைக் கேட்டதும் சிறிது அதிர்ச்சியுற்று நின்றான் சோமேசுவரன். "எந்த ஹேமாத்ரி? தேவகிரி மன்னனின் முதல் அமைச்சரா?" என்று வினவினான் குரலில் சிறிது அச்சமும் மரியாதையும் கலந்து ஒலிக்க.

"ஆம்" என்றார் துறவி.

சோமேசுவரன் சிறிது சிந்தனைவசப்பட்டான். "இவள்...?" என்று தம்பியின் முன்னால் புரவியில் உட்கார்ந்திருந்த அரசகுமாரியை சுட்டிக் காட்டினான்.

"யாதவமன்னின் மகாதேவன் மகள்" என்ற துறவி, "விரோதி மகளென்பதால் அவளைப் பிடித்துவிடலாமென்று எதிர்பார்க்காதே சோமேசுவரா! அவள் என் பாதுகாப்பில் இருக்கிருள்" என்றும் சுட்டிக் காட்டினர்.

"மகரிஷிக்கு பெண்ணைப் பாதுகாக்கும் பணி ஏற்பட்டிருக்கிறதா? விசித்திரம்! பெரு விசித்திரம்!" என்ற சோமேசுவரன் "மகரிஷி! நான் இந்த இருவீரர்களுடன் மட்டும் வரவில்லை. இன்னும் பத்துபேர் கூப்பிடுதூரத்திலிருக்கிருர்கள். உங்களை நான் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல போதிய பலத்துடன் வந்திருக்கிறேன்" என்ற கூறிவிட்டு தனது புரவியை தம்பியின் புரவியை நேரக்கிச் செலுத்திஞன்.

துறவியின் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. "அப்படியே நில் சோமேசுவரா! இன்னும் ஒரு அடி உனது புரவி எடுத்து வைத்தால் வடகொங்கணம் தனது மன்னனை இழக்கும்" என்று கூறி நாணை சற்று அதிகமாகவே இழுத்தார்.

சோமேசுவரன் முகத்தில் அச்சம் லவலேசமும் இல்லை. திடீரென காரணமின்றி நகைத்தான். துறவிக்குப் பின்ஞலிருந்த பணிப்பெண்கள் அலறிஞர்கள். சோமேசுவரன் தம்பியுடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டே இருக்கையில் பின்ஞல் அவன் வீரர்களில் பத்து பேர் வந்து வாட்களை உறுவி நின்றதையும் கவனிக்காவிட்டாலும் ஊகித்த துறவி வில்லின் நாணை

தளரவிட்டார். "அரசகுமாரி! நாம் இனி தப்ப முடியாது. கை வலித்தாலும் பொறுத்துக் கொள். இந்த கடிவாளத்தைப் பிடி" என்று அவர் கையில் கடிவாளத்தைக் கொடுத்தார். அடுத்தவிநாடி துரித நிகழ்ச்சிகள் துவங்கின. கடிவாளத்தைக் கொடுத்த அதே விநாடியில் புரவியிலிருந்து சரிந்த துறவி ஒரே எட்டில் சோமேசுவரன் புரவிமீது தாவி அண்ணனை இழுத்துக்கொண்டு தரையில் புரண்டார். அப்படி தரையில் விழுந்தபோது அண்ணன் கச்சையிலிருந்த வாளையும் உருவி அவன் கழுத்தில் வாளின் நுனியை ஊன்றினார். "டேய்! வாட்களைக் கீழே போடுங்கள். நன்றாக விலகி எட்ட நில்லுங்கள். இல்லையென்றால் இந்த விநாடியே உங்கள் மன்னனை இழப்பீர்கள்" என்று கூறினார்.

தன் மார்புமீது காலைவைத்து தனது வாளா லேயே தன்னைக் கொல்லத் துடிக்கும் எமன் போல் ருத்திராகாரமாக நின்ற துறவியைக் கண்ட சோமேசுவரன் முதன் முதலாக பெரும் பீதியை அடைந்தான். அவன் கழுத்தில் ஊன்றிய வாளை எடுக்காமலே அவனை எழுந் திருக்க உத்தரவிட்ட துறவி பின்னாலிருந்த வீரர்களை நோக்கினார். அனைவரும் வாட் களை நிலத்தில் போட்டு நிராயுதபாணிகளாக நின்றதைக் கவனித்து துறவி "எல்லா வாட் களையும் ஒன்றுசேர்த்துக் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டார். துறவியின் கட்டளையை சிரமேற்கொண்டு சோமேசுவரன் வீரர்கள் நிறைவேற்றியதும் "நீங்கள் போகலாம். நாளைக் காலையில் உங்கள் மன்னன் உங்கள்

நாட்டுக்கு வந்துசேருவார்'' என்று கூறிய துறவி சோமேசுவரனை மீண்டும் அவன் புரவியில் ஏறச்சொல்லி அரசகுமாரியுடனும் பணிப் பெண்களுடனும் மலையைவிட்டு இறங்கலானார்.

சோமேசுவரன் தனது வீரர்களை துறவி சொல்வதுபோல் நடந்து கொள்ளுமாறு கண் ஜாடைகாட்டி துறவியுடன் சென்றான். சோமேசுவரன் தன் சொல்லுக்குப் பணிந்தது அச்சத்தாலல்ல என்பது துறவிக்கு நன்றாகத் தெரிந்தே இருந்ததால் மிகுந்த எச்சரிக்கையுடனும், அவன்மீது ஒரு கண்ணை வைத்துக் கொண்டும் பயணத்தை நடத்தினார். பஞ்சவடிக்கு வரும்போது இரவு நன்றாக முற்றி வெண்மதி தனது ஆட்சியை பலமாக நடத்திக் கொண்டிருந்தான். எங்கும் மனத்தை அள்ளும் சூழ்நிலையிருந்தாலும் அந்த பயணத்தில் சம்பந்தப்பட்ட யாருக்கும் மனநிம்மதியில்லை. ஒரு நாட்டு மன்னனை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பிடித்து வந்துவிட்டதால் பிரச்சனை முடிந்துவிட்டதாக நினைக்கமுடியாதென்பதை அரசகுமாரி உணர்ந்தே இருந்ததால் ''துறவி இதனால் என்ன சாதிக்க விரும்புகிறார்?'' என்று எண்ணினாள். ''மன்னனை மீட்கவும் தங்களை அழிக்கவும் ஒரு சிறு படை வந்தாலும் தாங்கள் என்ன செய்யமுடியும்?'' என்று சிந்தித்துப் பார்த்தாள். இப்படிப் பலவித யோசனைகளில் சிக்கித்தவித்த அரசகுமாரி ஏதும் புரியாமல் துறவியுடன் பயணம் செய்தாள்.



ஆனல் துறவி எந்தவித அச்சத்தையும் காட்டாமல் பஞ்சவடி பர்ணசாலை வந்ததும் தாமும் இறங்கி தமையனையும் இறங்கச் சொன்னர். மற்றவர்களை அவர்கள் பர்ண சாலைகளுக்குப் போகும்படி உத்தரவிட்டு தமையனுடன், தமது பர்ணசாலையில் நுழைந் தார். அங்கு அண்ணனை உட்காரச் சொல்லி விட்டு உணவு சமைத்து அண்ணனுக்குப் பரிமாறினர். தாம் சிறிது பாலை மட்டும் அருந்தி விட்டு அண்ணன் முன்பு நின்றவண்ணம் வினவினர் "இந்த நாடகத்துக்கு என்ன அர்த்தம்?" என்று.

தரையிலிருந்த வியாக்கிராசனத்தில் அமர்ந்திருந்த சோமேசுவரன் "எந்த நாட கத்தைப்பற்றிக் கேட்கிருய் தம்பி?" என்று வினவினன்.

துறவி சிறிதும் சிந்திக்காமலே பேசினர். "இவர்கள் வந்திருப்பது உனக்கு ஏற்கனவே தெரியும். உனது ஒற்றர்கள் எங்கும் திரிந்து கொண்டிருக்கிருர்கள். ஆகையால் வந்திருப்பது யாதவன் மகள் என்பது உனக்குத் தெரியும். அப்படியிருக்க அவளை ஏன் சிறை செய்ய முயன்ருய்? அவளுக்கு எது நேரிட்டாலும் யாதவர் படையெடுப்பு நிச்சயம். அவர்கள் பகை உனக்குக் கிடையாது. அப்படியிருக்க ஏன் இந்தப் பெண்ணைத் தூக்கும் முயற்சியில் இறங்கிஞய்?" என்று வினவினர்.

சோமேசுவரன் சற்று சிந்தித்து பதில் சொன்னன். "தம்பி! அரசகுமாரி புறப் பட்டதைப்பற்றி செய்தி வந்தது. ஆனல்

ஹேமாத்ரி வரும் விஷயம் எனக்குத் தெரியாது. தவிர உன்னைப் பிடித்தபோது இவள் அரச குமாரியென்றும் நான் நினைக்கவில்லை. ஹேமாத்ரியை நான் எனது வீரர்களை அனுப்பி சிறை பிடித்தால் உடனடியாக போர் நிகழும். அதனால்தான் நான் ஹேமாத்ரி வந்திருப்பதாகச் சொன்னதும் இவளை சிறை செய்யும் எண்ணத்தை விட்டேன். தவிர ஹேமாத்ரியிடம் ஏற்படும் விரோதம் கொங்கணத்துக்கு மிகுந்த அபாயத்தை ஏற்படுத்தும். ஹேமாத்ரி கவி என்பதால் எல்லா நாடுகளும் அவரிடம் பெருமதிப்பு வைத்திருக்கின்றன. அதனால் தான் நீ சொன்னதும் உன்னுடன் வந்தேன். ஹேமாத்ரியிடம் நான் ஒரு வரம் கேட்பேன். அவர் அதற்கு இசைந்தால் அவர்களுக்கு ஏதும் ஆபத்தில்லை. அவர் மறுத்தால் உலகமே திரண்டுவந்து எதிர்த்தாலும் குலவதியை நான் தூக்கிச் செல்ல தயங்கமாட்டேன்'' என்றான் சோமேசுவரன்.

துறவி இகழ்ச்சியுடன் தமையனைப் பார்த்தார். ''பெண்ணைத் தூக்கிச் செல்ல நீ என்ன ராவணனா?'' என்று கேட்டார்.

''பஞ்சவடியில் நடந்தது அதுதானே?'' என்றான் சோமேசுவரன்.

பிறகு துறவி சிறிது ஆலோசித்தார். ''அண்ணா! ஹேமாத்ரியிடம் என்ன வரம் கேட்கப் போகிறாய்?'' என்று விசாரித்தார்.

''அவரிடம்தான் சொல்ல முடியும்'' என்று சோமேசுவரன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அங்கு நுழைந்த ஹேமாத்ரி

"சோமேசுவரா! உன் வரத்தை கேட்கலாம். என்னல் முடிந்தால் அதைக் கொடுக்கத் தவற மாட்டேன்" என்றார்.

சோமேசுவரன் அவரை நிமிர்ந்து பார்த்தான். வரத்தை மெதுவாகக் கேட்கவும் செய்தான். அவன் கேட்ட வரம் ஹேமாத்ரியை மட்டுமல்ல, துறவியையும் அதிர்ச்சியில் ஆழ்த்தவே அந்த பர்ணசாலையில் சில விநாடிகள் பயங்கர மௌனம் நிலவியது.

அப்படி ஒரு வரத்தை சோமேசுவரன் கேட்பானென்று துறவியோ ஹேமாத்ரியோ அடியோடு எதிர்பார்க்காததால் இருவருமே அதிர்ச்சியில் ஆழ்ந்ததன் விளைவாக அந்த பர்ணசாலையில் சூழ்ந்த மௌனத்தை சோமேசுவரனே உடைத்து "இரண்டு நாடுகளுக்கும் நன்மையை அளிக்கக்கூடிய வரத்தைத்தானே கேட்டேன். இதில் பிரமைக்கோ அதிர்ச்சிக்கோ என்ன இருக்கிறது?" என்று வினவினான்.

ஹேமாத்ரி சோமேசுவரனை வியப்பு நிரம்பிய கண்களால் நோக்கினர். "கொங்கண நாட்டு மன்னனே உன் துணிவைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன். ஆனல் இந்த அளவுக்கு உனக்கு புத்திமாருட்டம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை" என்று சொன்னதன்றி "உன் வரம் பலிக்கவேண்டுமானல், உன் கருத்துடன் யாதவ மன்னன் கருத்து மட்டுமின்றி வேறொருவர் கருத்தும் இசைய வேண்டும். அரசகுமாரியின் உடன்பாடின்றி உன் எண்ணம் எப்படி நிறைவேறும்?" என்று கேட்கவும் செய்தார்.

"அப்படி அரசகுமாரி ஒப்புக்கொள்ள முடியாத எதைக் கேட்டுவிட்டேன்? அரச குமாரியை என் தம்பிக்கு மணமுடிக்கும்படி கேட்டேன்" என்ருன் சோமேசுவரன்.

ஹேமாத்ரி சொன்ஞர் "உன் தம்பி துறவி" என்று.

"அது கலைந்து விட்டது காட்டில்" என்ருன் சோமேசுவரன்.

அதுவரையில் அந்த உரையாடலில் கலக்காதிருந்த சந்திரதேவர் "எனக்கு பெண் பார்ப்பதைத் தவிர உனக்கு வேறு வேலையில்லையா அண்ணு?" என்று வினவிஞர். "முன்பு ஒரு பெண்ணைப் பார்த்தாய். நான் அவளை மணக்க மறுக்கவே என்னை நாடுகடத்திஞய். இப்பொழுது மீண்டும் ஒரு பெண்ணை என் காலில் கட்டப்பார்க்கிருய். இதஞல் நமது விரோதம் இன்னும் அதிகப்படும்" என்று எச்சரித்தார்.

சோமேசுவரன் இதழ்களில் இகழ்ச்சிப் புன் முறுவல் படர்ந்தது. "பெண்ணை நான் உன் காலில் கட்ட அவசியமில்லை. அவள்தான் ஏற்கனவே உன் கைகளில் கட்டுண்டு புரவியில் வந்தாளே?" என்று இகழ்ச்சி நிரம்பிய குரலில் பேசிஞன்.

சோமேசுவரன் சொற்களைக் கேட்ட ஹேமாத்ரி சந்தேகம் நிரம்பிய விழிகளை துறவி மீது திருப்பிஞர். "இது உண்மையா?" என்று துறவியை நோக்கி வினவவும் செய்தார்.

துறவி நின்றவண்ணம் அண்ணனை நோக்கிஞர். "உண்மை முழுவதையும் சொல்லிவிடு அண்ணு" என்ருர். அவர் கண்கள்

அண்ணனின் இதயத்தையே ஊடுருவிவிடுவது போல் பார்த்தனர்.

"முழு உண்மையா! அது என்ன?" என்று ஹேமாத்ரி சந்தேகத்துடன் பார்த்தார் சகோதரர் இருவரையும்.

துறவி சொன்னார்; "மகாமந்திரி! அரசகுமாரிக்கு கால் மக்களித்து விட்டது. ஆகையால் அவளை புரவியில் ஏற்றி நானும் ஏறிவர வேண்டியதாயிற்று. புரவிக் கடிவாளங்களைப் பிடிக்க நான் எனது இரு கைகளினாலும் அரசகுமாரியைச் சுற்ற வேண்டியதாயிற்று. இதற்கு என் தமையன் வியாக்கியானம் செய்கிறார். இது மட்டுமல்ல நான் செய்த பிழை. அரசகுமாரியை சிறைபிடித்து அழைத்துச் செல்ல முயன்ற அண்ணன் மார்புக்கும் அம்பைக் குறிவைத்தேன். அவர் தனது எண்ணத்தைநிறைவேற்றமுனைந்திருந்தால்வட கொங்கணம் இத்தனை நேரம் தனது மன்னனை இழந்திருக்கும். இன்னும் ஒருமுறை கொங்கண மன்னர் இம்மாதிரி பொய்யிலும் புனை சுருட்டிலும் பெண்களைப் பற்றிய அவதூறிலும் ஈடுபட்டால் இனியும் அந்த விபரீதம் நிகழும்"- இப்படிப் பேசிவிட்டு துறவி வெளியே சென்றுவிட்டார்.

துறவி சென்றதும் சோமேசுவரன் பெரிதாக நகைத்தான். "தம்பி உளறுகிறான். ஹேமாத்ரி! அவன் அரசகுமாரியின் மையலில் ஊறிவிட்டான். நமது இருநாடுகளுக்கும் சமாதானத்தை ஏற்படுத்த இதுதான் தருணம். உங்கள் மன்னர் சரியென்று சொன்னால் துறவி

இல்லறத்தைத் தழுவுவான். நமது நாடுகள் நட்பைத் தழுவும். எனது கப்பற்படைக்கு நல்ல தலைவன் கிடைப்பான்'' என்று கூறினான்.


ஹேமாத்ரி சிந்தனையில் இறங்கினார். ''சரி கொங்கண மன்னா. நான் எனது மன்னனுக்கு இதுபற்றி ஓலை அனுப்புகிறேன். அவன் சம்மதம் தெரிவித்தால் உனக்குத்தெரிவிக்கிறேன். அதுவரை நீ உன் நாட்டு எல்லையைத் தாண்டாதே. மேற்குமலைத் தொடருக்கு அப்புறத்திலேயே இரு'' என்று சொல்லி அனுப்பினார்.

சோமேசுவரன், தம்பியின் பர்ணசாலையிலிருந்து கிளம்பிய ஹேமாத்ரியைப் பின் தொடர்ந்தான். அவர்கள் இருவரும் வெளியே வந்ததும் தூரத்தேயிருந்த கோதாவரி நதிப் பாறை மீது துறவி உட்கார்ந்து ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அரசகுமாரி தனது பர்ணசாலையிலிருந்து கிளம்பி கோதாவரியை நோக்கி நடந்ததையும் கவனித்தார்கள்.

**23—6—85 குங்குமம் இணைப்பில் தொடரும்**

16-6-85 குங்குமம் இதழுடன்
இணைப்பு

SUPPLEMENTED TO KUNGUMAM ISSUE
DATED 16—6—85


துறவி
சாண்டில்யன்
குங்குமம்
இலவச இணைப்பு



# குமரி

சாண்டில்யன்

# 7. மந்திரமும் மாயையும்

அன்று பௌர்ணமி கழிந்த பிரதமையாத லால் இரண்டு நாழிகைகள் கழித்தே சந்திரன் புறப்பட்டானானாலும் மதியொளி மூந்திய நாளுக்கு சிறிதும் குன்றுமலே இருந்தபடியால் பஞ்சவடிப் பிரதேசம் மிகுந்த அழகுடனும் அலங்காரத்துடனும் விளங்கியது. துறவி உட் கார்ந்திருந்த பாறையை இருபுறமும் தழுவிச் சென்ற கோதாவரி நீரோட்டம் பலவித கண்ணுடிகளை சிருஷ்டித்திருந்ததால் பல இடங் களிலும் பளபளவென ஜொலிக்கவே செய் தது. பஞ்சவடியின் பர்ணசாலைக்கு அருகி லிருந்த கொடிகளின் மலர்களும் மதியொளி யால் சிறிதே வர்ணம் மாறியதைப்போல் தெரிந்தாலும் அந்த மாற்றத்திலும் ஒரு புது அழகும் புது மெருகும் பெற்றிருந்தன. அங் கிருந்த மரங்களிலிருந்த இலைகள் மூலம் புகுந்து தரையில் வட்டவட்ட ஒளித்தட்டுகளை நிர்மா ணித்த சந்திரன் தானும் இணையிலா ஓவியன் என்பதை நிரூபித்தான். இந்த சூழ்நிலையில் கோதாவரிப் பாறையில் உட்கார்ந்து ஆகா யத்தை நோக்கிக் கொண்டிருந்த துறவி ஏதோ தேவலோகத்திலிருந்த தேவனைப்போல

காட்சியளித்தார். அவர் இடையில் மட்டும் காஷாயம் அணிந்திருந்ததால் அவர் மார்பும் முதுகும் பொற்பாளங்களெனப் பிரகாசித்தன.

பர்ணசாலையிலிருந்து வெளிவந்து அவரைத் தூரத்திலிருந்தே பார்த்த ஹேமாத்ரி, "துறவி நிஷ்டையிலிருப்பதாகத் தெரிகிறது" என்று கூறினார் சோமேசுவரனை நோக்கித் திரும்பி.

"நிஷ்டை சீக்கிரம் கலைக்கப்படும்" என்று கூறிய சோமேசுவரன் துறவியிருந்த இடத்தை நோக்கி குலவதி செல்வதை சுட்டிக்காட்டினார்.

அரசகுமாரி அப்படி பகிரங்கமாக துறவியை நோக்கிச் செல்வதை ஹேமாத்ரி ரசிக்காவிட்டாலும் "அரசகுமாரியும் விவஸ்தை கெட்டவளல்ல, துறவியும் சபலமுடையவராகத் தெரியவில்லை. அவர் ஆகாயத்தைப் பார்த்து மந்திரங்களை ஜபிப்பதாகத் தெரிகிறது" என்றார் ஹேமாத்ரி.

"என் தம்பியைவிட பெரிய பெரிய ரிஷிகள் பெண்வலையில் விழுந்திருப்பதை புராணங்களில் படிக்கிறோம்" என்றான் சோமேசுவரன்.

இதைக் கேட்டதும் ஹேமாத்ரியின் முகத்தில் சினம் துளிர்த்தது. "அரசகுமாரியைப் பற்றிப் பேசும்போது நீர் சிந்தித்து சொற்களை வீசுவது நல்லது. வலைவிசும் வர்க்கத்தில் சேர்ந்தவளல்ல குலவதி" என்று சொற்களிலும் உஷ்ணத்தைக் காட்டினார் ஹேமாத்ரி.

"பெண்கள் வலைவீசித்தான் ஆகவேண்டுமென்பதில்லை ஹேமாத்ரி. சிலர் அழகிலிருந்தே

## இதுவரை ...

தேவகிரி யாதவகுல மன்னர் மகாதேவனின் மகள் குல்வதி, மந்திரி ஹேமாத்ரியுடன் ராமாயண கால பஞ்சவடிக்குச் சென்றவள், அங்கு கோதாவரி தீரத்தில் சந்திரதேவன் எனும் வாலிபத் துறவியைச் சந்திக்கிறாள். வட கொங்கண சோமேசுவரனால் நாடு கடத்தப்பட்ட அவனது தம்பியே சந்திரதேவன். அங்குள்ள புண்ணிய தலங்களுக்கு குல்வதியை அழைத்துச் சென்ற சந்திரதேவன், தன்னை எதிர்த்த அண்ணன் சோமேசுவரனைச் சமாளித்து அவனை தனது பர்ணசாலைக்கு அழைத்து வருகிறான். சோமேசுவரன், ஹேமாத்ரியிடம் ஒரு வரம் கேட்கவேண்டும் என்று கூறி, தம்பி சந்திரதேவனுக்கு அரசகுமாரி குலவதியை மணம் முடித்து வைக்கவேண்டுமென வேண்டுகிறான். ஹேமாத்ரியும், தமது அரசருக்கு இதுபற்றி ஓலை அனுப்புவதாகவும், தகவல் தெரிவிக்கும் வரை அவனது நாட்டு எல்லையைத் தாண்டவேண்டாமென்றும் கூறுகிறார். அவர்கள் இருவரும் வெளியே வருகையில், கோதாவரி நதிப் பாறை மீது துறவி உட்கார்ந்திருப்பதையும், அரசகுமாரி பர்ணசாலையிலிருந்து கிளம்பி துறவியை நோக்கி நடந்ததையும் கவனித்தார்கள். இனி...

கயறுகள் வலைகளாகப் பின்னப்படுகின்றன. சில பெண்களுக்கு கண்களே வலை. அந்த வலைவீச்சில் அகப்படாதவன் கிடையாது. கவியான உமக்கு நான் அதிகமாக எதுவும் சொல்லத் தேவையில்லை'' என்ற சோமேசு வரன் ''ஹேமாத்ரி! என் தம்பிக்கு என்ன, எங்கள் அரசுக்கும் அதிர்ஷ்டமிருந்தால், என் தம்பி மனம் மாறும். நமது அரசுகள் இணைந்து பலப்படும். அப்படி இணைந்தால் பாரதத்தின் ஒரு பெரிய வல்லரசாக யாதவர்கள்கூட விளங்கக்கூடும். எனது அரசின் கடற்படை யாதவர்களுக்கு துணை நிற்குமானால் யாதவர் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை'' என்று உணர்ச்சியுடன் பேசினான்.

''அந்த கடற்படையின் சக்தியை நீயே உபயோகித்து சிலாரா வம்சத்தை வல்லரசாக் குவதை யார் தடுத்தது?' என்று ஹேமாத்ரி ஏளனமாகக் கேட்டார்.

''என் தம்பி. இப்பொழுது என் கடற் படையை செலுத்த தகுதியான மாலுமி யாரு மில்லை. அதை செய்யக்கூடியவன் என் தம்பி தான். அவன் மனத்தை குடும்பத்தில் பிணைத்து விட்டால் அவன் மீண்டும் எனது கடற் படைத் தலைவனுவான்'' என்றான் சோமேசு வரன்.

''சரி பார்ப்போம். முதலில் அரசகுமாரி யைக் கேட்கிறேன். அவள் இசைந்தால் யாதவ மன்னனைக் கேட்கிறேன். அவனும் ஒப்புக்கொண்டால் திருமணம் நடக்கும். அதா வது, உன் தம்பி துறவறம் நீத்தால்'' என்றார் ஹேமாத்ரி.

"இன்னும் இரண்டு நாட்களில் உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்" என்றான் சோமேசுவரன்.

ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக தலையை அசைத்த ஹேமாத்ரி தமது கண்களை குலவதியை நோக்கி செலுத்தினர். கோதாவரிக் கரை வரையில் சென்ற குலவதி நீரில் இறங்க வில்லை, துறவி உட்கார்ந்திருந்த பாறையையும் அணுகவில்லை. கரையிலேயே உட்கார்ந்து கோதாவரி நீரில் தனது பாதங்களை துளைய விட்டாள். துறவி அவளிருந்த பக்கம் திரும்ப வில்லை. நிஷ்டையிலேயே நீடித்தார்.

அவர்களை நீண்ட நேரம் பார்த்த ஹேமாத்ரி "சோமேசுவரா! நீ நினைத்தபடி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்ருர்.


"இருந்தால்?" சோமேசுவரன் வினவினன்.

"நீ நினைத்தபடி திருமணம் நடக்கும்! இல்லையேல்...?" ஹேமாத்ரி வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

"இல்லையேல்?". சோமேசுவரன் கேட்டான்.

"நடக்கக்கூடியது என்னவென்று எனக்குத் தெரியாது. யாதவன் சீறினல் உனது நாடு உனக்கு சொந்தமல்ல" இதை திட்டமாகச் சொன்னர் ஹேமாத்ரி.

சோமேசுவரன் உள்ளே துளிர்த்த சினத்தை வெளியிலும் காட்டினன். 'ஹேமாத்ரி! எனது நாட்டைப் பிடிப்பது அத்தனை சுலபமல்ல. இடையே இருப்பது



ஸஹ்யாத்ரி மலைத்தொடர். இதைத் தாண்டு முன்பே மகாதேவன் படைகள் அழிக்கப்படும். தவிர இந்த மலைப்பகுதியை தாண்டி வந்து என் படைகளை சந்திக்கும் படைகளை செலுத்தும் தலைவன் யாரும் யாதவ மன்னனிடம் கிடையாது" என்று சினத்துடனும் ஆணவத்துடனும் பேசினான்.

"ஒருவனிருக்கிறான்" என்றார் ஹேமாத்ரி.

"அது யார்?" சோமேசுவரன் குரலில் வியப்பு இருந்தது.

"அவன் பெயர் ஹேமாத்ரி" என்றார் ஹேமாத்ரி அடக்கத்துடன்.

"நீங்கள் கவியல்லவா?"

"கவியாயிருந்தால் படைத்தலைவனாக இருக்கக்கூடாது என்ற தடை எதுவும் கிடையாது."

"அப்படியானால் நீங்கள்!"

* "படைத்தலைவன் பணியும் செய்வேன் அவசியமானால், அதை திறமையுடனும் செய்வேன்"- இதை ஹேமாத்ரி அழுத்தந்திருத்தமாகச் சொன்னார். அத்துடன் "அரசகுமாரியையும் சந்திரதேவனையும் நாம் வேவு பார்க்க வேண்டாம். வா உள்ளே" என்று சோமேசுவரனை அழைத்துக்கொண்டு பர்ணசாலைக்குள்

---

* "Hemadri the famous Author of Vratakhanda was also a successful general"- Maharashtra State Gazetteer-Part I-Ancient History Page 370.

சென்றார். உள்ளேயிருந்த படுக்கையைக் காட்டி ''நீ படுத்துக் கொள்ளலாம். மற்ற விவரங்களை காலையில் பேசிக்கொள்வோம்' என்றார்.

சோமேசுவரன் படுக்கவில்லை. உட்காரக் கூட இல்லை. ''எனக்கு இங்கு வேலை ஏது மில்லை. நான் புறப்படுகிறேன!'' என்றான் வடகொங்கண மன்னன்.

''நீ செல்ல என் அனுமதி தேவையில்லை. உன்னை சிறைபிடித்த உன் தம்பியின் அனுமதி பெற்றுப் போகலாம்'' என்றார்.

சோமேசுவரன் ஹேமாத்ரியை இகழ்ச்சி யுடன் பார்த்தான். ''நான் போவதை யார் தடைசெய்ய முடியும்?'' என்று கேட்டான்.

''வெளியே பார்'' என்றார் ஹேமாத்ரி.

வெளியே பர்ணசாலை வாயிலில் ஈட்டி களை ஏந்திய இரு வீரர்கள் உலாவுவதைக் கண்ட சோமேசுவரன் மெல்ல நகைத்தான். ''இவர்கள் என்னை தடை செய்துவிட முடியுமா?'' என்று ஏளனமாகக் கேட்கவும் செய்தான்.

''வேண்டுமானால் முயன்றுபார்'' என்றார் ஹேமாத்ரி.

சோமேசுவரன் முயன்று பார்க்கவில்லை. பேசாமல் ஹேமாத்ரி காட்டிய படுக்கையில் தலைக்கு கையை முட்டுக்கொடுத்து அரைவாசி படுத்தவண்ணம் கோதாவரிக் கரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கோதாவரிக் கரைமீது உட்கார்ந்து நீரில் கால்களை துளையவிட்டுக் கொண்டிருந்த

குலவதியை நிஷ்டை கலைந்த துறவி திரும்பிப் பார்ப்பதை சோமேசுவரன் கவனித்தான். அவர் பேசமுற்பட்டதும் சற்றே தெரிந்தது அவனுக்கு. இருப்பினும் தூரத்தின் காரண மாக விவரங்கள் தெரியாததால் தானே மனத்தில் தனக்கு அனுகூலமான கதைகளை சிருஷ்டித்துக் கொண்டான். அதன் விளை வாக மெள்ள ஒரு விபரீத திட்டத்தையும் வகுத்துக் கொண்டான்.

சோமேசுவரன் எண்ணங்களையோ ஹேமாத்ரியுடன் அவர் பேசிய விவரங் களையோ முற்றும் அறியாத துறவி தமது நிஷ்டை கலைந்து அரசகுமாரியைப் பார்த்ததும் "அரசகுமாரி! நீ எதற்காக இங்கு வந்து உட்கார்ந்திருக்கிருய்?" என்று வினவினுர்.

அரசகுமாரி மெள்ள தனது கண்களால் துறவியை ஏறெடுத்து நோக்கினுள். "நிலவு இந்தப் பகுதியை அழகாக அடித்திருந்தது. அதில் நீங்கள் ஒரு தேவனைப் போல் தெரிந் தீர்கள். ஆகாயத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அப்படி ஆகாயத்தில் என்ன இருக்கும் என்று உங்களைக் கேட்கலா மென்று வந்தேன். நீங்களோ கண்ணைத் திறந்தும் பார்க்கவில்லை" என்று குற்றம் சாட்டும் தோரணையில் பேசினுள் குலவதி.

துறவி புன்முறுவல் கொண்டார். "குலவதி! நான் கருட ஜபம் செய்துகொண்டிருந்தேன். ஆகையால் உன்னைப் பார்க்கவில்லை" என்ருர்.

"கருடஜபமா" வியப்புடன் வினவினுள் குலவதி.



''எங்கள் குலத்தார் செய்யவேண்டிய முக்கிய ஜபம்'' என்ருர் துறவி.

"நீங்கள்தான் துறவியாயிற்றே. உங்களுக்கு குலம் ஏது?" என்று கேட்டாள் குலவதி.

''ஜன்மவாசனை யாரையும் விடாது யாதவன் மகளே! எங்கள் வம்சத்தைப்பற்றி புராணம் உண்டு. நாங்கள் சிலார வம்சமல்ல. சிலா—ஆஹார வம்சம், கருடனுக்கு சிலாதலத்தில், அதாவது பாறை மீது, உணவு படைக்கும் வம்சம். எங்கள் மூதாதையான ஜீமூத வாஹனன் கருடனுல் தூக்கிச் செல்லப்பட்ட ஒரு நாகனைக் காப்பாற்ற கருடனுக்கு தமது உடலையே ஆஹாரமாகக் கொடுக்க ஸஹ்யாத்ரி மலைப்பாறை மீது படுத்தாராம். அது முதற் கொண்டு நாங்கள் *'சிலாஹாரர்' என்று அழைக்கப்படுகிருேம். எங்கள் வம்சத்திலுள்ள அனைவருக்கும் கருடன் தெய்வம். கருட ஜபம் செய்வது கடமையென கருதப்பட்டிருக்கிறது'' என்று துறவி தமது ஜபத்தின் காரணத்தை விளக்கினுர்.

அந்த புராணக் கதையைக் கேட்டு மெய் சிலிர்த்த குலவதி ''இந்த மந்திரத்தால் பயன் ஏதாவது உண்டா?'' என்று வினவினுள்.

"எந்த மந்திரத்தினுலும் பலன் உண்டு, முறைப்படி ஜபித்தால்'' என்ருர் துறவி.

''அந்த மந்திரத்தை எனக்கும் சொல்லிக் கொடுங்களேன்'' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் குலவதி.

---

*Maharashtra State Gazetter Part I—
Ancient History—Page 260

துறவி சிறிது சிந்தித்தார். ''அதற்கு சுத்தி வேண்டும். நீராடித்தான் அதை கற்க வேண்டும். நாளை சொல்கிறேன்'' என்று கூறினார் முடிவில்.

''இப்பொழுதே நீராடுகிறேனே'' என்றாள் குலவதி.

''இப்பொழுதா?'' என்று துறவி கேட்டார்.

''ஆம். மந்திரோபதேசத்துக்கு குரு சித்தமாகும்போது சிஷ்யை தாமதம் செய்யலாமா?'' என்ற குலவதி உடுத்திய ஆடையுடன் அப்படியே அவர் இருந்த பாறைக்கருகிலேயே நீரில் அமிழ்ந்தாள். தலைக் குழலையும் சிறிது அவிழ்த்து மூழ்கினாள். மூழ்கி எழுந்து தலைக் குழலை உருவி நீரைப் பிழிந்து முடியிட்டு துறவி அருகில் சென்று ''நான் சித்தம் ஸ்வாமி'' என்றாள்.

''நெற்றி சூன்யமாக இருக்கிறதே அரச குமாரி'' என்று ஆட்சேபித்தார் துறவி.

குலவதி தனது மார்புக் கச்சையின் மத்தியிலிருந்த குங்குமமும் சந்தனமும் கலந்த குழம்பிலிருந்து சிறிது விரலில் எடுத்து நெற்றியில் தீட்டிக்கொண்டாள். ''ஸ்வாமி! இது சரிதானா?'' என்று கேட்டாள்.

சுவாமிகளின் உள்ளம் பெரிதும் கலங்கி இருந்தது. சலிக்காத அவர் மனமும் குலவதியின் மேடுபள்ளங்களில் ஒட்டிவிட்ட சேலையாலும், சந்தனக்குழம்பை அவள் எடுக்கக் கச்சையைத் தளர்த்தியபோது தெரிந்த மார்பு விளம்புகளாலும் தத்தளித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டாலும் சிறிது

சமாளித்துக்கொண்டு "குலவதி! இப்படி வா" என்று அழைத்தார். பாறைக்கருகில் அவள் வந்ததும் அவளை பாறையில் உட்காரச் சொல்லி அவள் காதுக்கருகில் குனிந்து "மந்திரம் சொல்லுகிறேன். அதை திருப்பிச் சொல். பிறகு ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் பத்துமுறை சொல்" என்று கூறிவிட்டு அவள் காதில் கருட மந்திரத்தை ஓதினார். அப்படி ஓதியபோது திறந்து திறந்து மூடிய அவர் இதழ் கள் தனது காதில் அடிக்கடி பட்டதால் மந்திரத்தைவிட துறவியை ஜபித்தாள் குலவதி. பிறகு மந்திரத்தையும் ஜபிக்கக் தொடங்கி அவர் ஓதிய மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னாள். பிறகு ஆகாயத்தை நோக்கி மந்திரம் ஜபிக்க குனிந்த தலையை நிமிர்ந்த போது அவள் கண்கள் துறவியின் கண்களை சந்தித்தன. அவள் இதழ்களும் அவர் இதழ்களை நோக்கி விரிந்தன. ஏதோ புஷ்பம் விரிவது போல் லேசாக மலர்ந்த உதடுகளை நோக்கிய அந்த வாலிபத் துறவி மீளமுடியாத ஏதோ ஆழத்துக்கு தாம் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்தார். பிறகு தம்மை சமாளித்துக் கொண்டு "அரசகுமாரி! நீ போய் வேறு ஆடை அணிந்துகொள்" என்றார்.

"நீங்கள்?" உதடுகளை விரித்த நிலையில் கேட்டாள் குலவதி.

"சற்றுநேரம் கழித்து வருகிறேன்" என்று சற்று கடுமையுடன் சொன்னார் துறவி.

அதற்குமேல் அரசகுமாரி பேசவில்லை. புடவையின் கீழ்ப்பகுதியை மட்டும் பிழிந்து கொண்டு கரையேறி உடலில் ஒட்டிய சீலை,

அழகுகளைப் பகிர்ந்து காட்ட பர்ணசாலையை நோக்கி நடந்தாள். அவள் போவதை துறவி பார்த்துக்கொண்டே நின்ருர். பிறகு பாறையில் உட்கார்ந்து தமது முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டார்.


அங்கிருந்து அவர் நடுநிசிக்குமேல்தான் நகர்ந்தார். ஏதும் பேசாமல் நடுங்கிய உள்ளத்துடன் தமது பர்ணசாலைக்குச் சென்று படுத்து கண்களை மூடினர். குலவதியின் விரிந்த உதடுகள் அவர் கண்களுக்கு முன்பு தோன்றின. அதை மறக்க கண்ணை இருமுறை இறுக மூடினர். மூடிய கண்களைத் திறக்காமலே படுத்துக் கிடந்தார். அதன் விளைவாக காட்டு முகப்பில் நிகழ்ந்துகொண்டிருந்த விபரீதத்தை அவர் பார்க்க இயலாமல் போயிற்று.

**30—6—85 குங்குமம் இணைப்பில் தொடரும்**

குங்குமம் 23-6-85 இதழுடன்
இணைப்பு

SUPPLEMENTED TO KUNGUMAM ISSUE
DATED 23—6—85


குங்குமம்
இலவச இணைப்பு
சாண்டில்யன்



# துறை

சாண்டில்யன்

# 8. சிறைக்கோட்டை

கண்களை மூடி பர்ணசாலையில் படுத்த துறவியின் அகக்கண் முன்பாக குலவதி பற் பல கோணங்களில் தோன்றவே, அந்த அழகு பிம்பங்களை மனத்தைவிட்டு விரட்ட முயன் றும் முடியாமல் மகரிஷி சந்திரதேவர் தத்தளித் தார். கோதாவரியின் பாறையில் அமர்ந்திருந்த நேரத்திலிருந்து தானும் குலவதியும் பிரிந்த நேரம்வரை நடந்த சகல விவரங்களும் அவர் மனக்கண்முன் வலம் வந்தன. காலை கோதாவரி நீரில் விட்டுத் துளைந்த அழகை எண்ணிப் பார்த்த துறவி அந்த கணுக்கால்களின் அழகைநினைத்தார். அதோடு நினைப்பை நிறுத் திக் கொண்டிருந்தால் துறவி நிலைக்கு அழகா யிருந்திருக்கும். ஆனல் கால்களை அகற்றியும் கட்டியும் துளையவிட்டபோது அவள் பருவத்

தொடைகள் விரிந்தும் இணைந்தும் விவரித்த இந்திரஜாலம் அவர் உணர்ச்சிகளை உலுக்கிக் கொண்டிருந்தன. அடுத்து அ ர ச கு மா ரி தம்மை பாறைக்கருகில் அணுகி மந்திரோப தேசம் கேட்டபோது, அவள் அருகாமையால் அவள் முந்தானை அடிக்கடி தம்மீது உராய்ந் ததை நினைத்துத் திண்டாடினார். "என்ன துணி விருந்தால அரசகுமாரி அவள் சேலையை என் மீது தவழவிட்டிருப்பாள்?" என்று எரிச்சலும் கொள்ள முயன்றார் சந்திரதேவர். ஆனால் எரிச்ச லுக்குப் பதில் இன்ப இம்சையே பரந்தன அவர் மனப்பார்வையில். பிறகு அவள் மந்தி ரோச்சாடனம் பெற சட்டென்று நீரில் மூழ்கி எழுந்துவிட்ட காட்சியை நினைத்து, உடலில் ஒட்டிக்கிடந்த சேலை விளக்கிய சிருங்கார அம்சங்களை மனக்கண்ணில் பார்த்துப் பார்த்து சிந்தை நெகிழ்ந்தார். "அரசகுமாரி பெரிய மாயக்காரி. என்னை மயக்கவே மூழ்கியிருக் கிறாள்" என்று அவள்மீது குற்றமும் சாட்டி னார். "ஒட்டிக்கிடந்த சேலையுடன் அவளை நான் கட்டியிருந்தால் அவள் கதி என்ன ஆகியிருக் கும்? என்றும் தம்மைக் கேட்டுக்கொண்டார். "என்ன ஆகியிருக்கும்? அவள் கற்பு குலைந் திருக்கும், என் துறவறம் பறந்திருக்கும்" என்று கேள்வியோடு பதிலும் சொல்லி உள்ளூர நகைத்தும் கொண்டார். கடைசியாக மந்தி ரோபதேசம் செய்தபோது தமது மனம் பட்ட பாட்டையும், அவள் காதுகளில் தமது உதடு கள் பட்டபோது தமக்கு ஏற்பட்ட விபரீத உணர்ச்சிகளின் நெகிழ்ச்சியையும் நினைத்து "நல்லவேளை, அவளும் தப்பினாள். நானும்

தப்பினேன்" என்று தன்னை சமாதானம் செய்துகொண்டார். ஆனால் அந்த சமாதானம் எந்தவித சாந்தியையும் அளிக்கவில்லை துறவிக்கு. தமது மன களங்கத்துக்கு தனது சமாதான எண்ணம் வெறும் புரட்டு என்பது புரிந்தாலும், புரியாதது போல் பாசாங்கு செய்தார்.

இப்படிப் பலபடி நினைத்து உறங்காமலிருந்தாலும் இந்திரியங்கள் வேறுவழிகளில் இயங்காததால் காட்டில் முகப்பில் விடியற்காலைக்கு சற்றுமுன்பாக ஏற்பட்டுக்கொண்டிருந்த சலசலப்பு அவர் காதில் விழவில்லை. நிஷ்டையில் இருந்த நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் இலை அசைந்தாலும் அந்த ஒலியை காதில் வாங்கக்கூடிய செவிகள் அன்று இயங்க மறுத்தன. காம உணர்ச்சிகள் மற்ற உணர்ச்சிகளை அறுத்து எறிந்திருந்தன. இப்படி நினைவையெல்லாம் அரசகுமாரியின் எழிலுக்குப் பறிகொடுத்துப் படுத்திருந்த துறவி இந்த உலகத்தை அடியோடு மறந்திருந்ததால், காட்டு முகப்பு சஞ்சாரம் எதுவும் காதில் விழாததால், ஒரே சிந்தையில், சிக்கிக் கிடந்தார் சந்திரதேவர். மாயை சூழும்போது ஏற்படும் மோகனப் பிரபஞ்சம் துறவறத்தின் மோக்ஷப் பிரபஞ்சத்தை அர்த்தமற்றதாகச் செய்து விட்டது.

அவருக்கு மட்டுமல்ல இந்த நிலை ஏற்பட்டது. துறவியற்ற யுவதியான குலவதியும் அன்றிரவில் விழித்தே படுத்திருந்தாள். துறவியின் ஒவ்வொரு அசைவும் நெருக்கமும் அவளை

அல்லற்படுத்திக் கொண்டிருந்தது. புரவியில் அவர் தனது பின்னுல் உட்கார்ந்து வில்லில் அம்பைப் பொருத்தி அண்ணனே அச்சுறுத்திய போது அவள் தன்பின்னுல் உராய்ந்த துறவி யின் உடலைத்தவிர வேறெதையும் நினைக்க சக்தியற்றவளானுள். பிரதமை இரவில் அவள் தனது பர்ணசாலையில் படுத்திருந்தபோது புரவியில் அத்தனை நெருக்கமாக உட்கார்ந் திருந்தபோது, அதுவும் வில்லின் நாணை இழுக்க தனது உடலின் இருபுறத்திலும் கைகளை உபயோகித்தபோது, தன்னை ஏன் அப்படியே கட்டிப்பிடிக்கவில்லை என்று கேள்வி எழுப்பிக் கொண்டாள் குலவதி. "மந்திரோபதேசம் செய்தபோது காதில்பட்ட உதடுகளை கன்னத் திலும் அழுத்தியிருந்தால் என்ன இவருக்குக் கேடு?" என்றும் கேட்டு சினமடைந்தாள் உள்ளூர. ஈரச்சேலை உடுத்திய தனது உடலைப் பார்த்த பின்பும் அவர் எப்படி அத்தனை திடத் துடன் இருக்கமுடிந்தது என்று எண்ணி "என்ன நெஞ்சழுத்தம்?" என்று சினந்தாள். "அப்பொழுதுதான் பகிரங்கமாக நாலுபேரும் பார்க்கும்படியாக கோதாவரியில் இருந்தோம். இப்பொழுதென்ன அவருக்கு? 'இங்கு வரு வதை யார் தடை செய்யப்போகிருர்கள்?" என்று கேட்டுக்கொண்டு சிந்தனையை பல விதத்திலும் அலையவிட்டாள்.

அவள் ஆசைதான் பலித்ததோ அல்லது உள்ளத்தின் நினைப்புதான் உருவத்தோற்ற மாக வந்ததோ, அவள் குடிசையின் வாயிலில் துறவியே நின்றிருந்தார். ஆனுல் அவர் காவி

வாளுடன் உள்ளே நுழைந்தார். அவர் நுழைந்த பின்புதான் உள்ளே வந்தது துறவியல்லவென்பதையும், அவர் சகோதரன் சிலார மன்னன் சோமேசுவரனென்பதையும் அவள் உணர்ந்தாள், உணர்ந்து துடித்து எழுந்தாள். அவள் எழுந்திருந்து சற்று எட்ட இருந்த தனது வாளை எடுக்க முயன்றபோது அவள் மார்பில் சோமேசுவரன் வாள் ஊன்றப்பட்டது. ''குலவதி! சிறிதும் அசையாதே. நீ என் சொல்லை மீறினாலும் என் எண்ணத்துக்கு முரண்பாடாக எதைச் செய்தாலும் உன் உயிர் உன்னுடையதல்ல'' என்று எச்சரிக்கவும் செய்தான் சோமேசுவரன்.

''என் உயிரைப்பற்றி நான் கவலைப்படவில்லை'' என்றாள் குலவதி.

''ஆனால் என் தம்பியின் உயிரைப்பற்றி கவலைப்படுவாய். அவன் இத்தனைநேரம் கட்டுண்டிருப்பான். நீங்களிருவரும் என்னுடன் ஒன்றாகவே என் தலைநகருக்குப் பயணமாகலாம்'' என்றான் சோமேசுவரன்.

''அவருக்கு...?'' அச்சத்துடன் கேட்டாள் குலவதி.

''ஆபத்து எதுவுமில்லை, சொன்னபடி நீ கேட்கும் பட்சத்தில்'' என்ற சோமேசுவரன் ''வெளியே நட'' என்று உத்தரவிட்டான்.

குலவதி வெளியே வந்ததும் விபரீதமான நிலையைப் பார்த்தாள். பஞ்சவடியை ஏராளமான போர்வீரர்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆங்காங்கிருந்த பர்ணசாலைகள் சூழப்பட்டிருந்தன. சற்று நேரத்திற்கெல்லாம்

காட்டு முகப்பிலிருந்து புரவி வீரர் கூட்ட மொன்று வெகுவேகமாக பஞ்சவடியை நோக்கிப் பாய்ந்து வந்தது. ஏற்கனவே காட்டுக்குள்ளிருந்து ஓசைப்படாமல் வந்து பர்ணசாலைகளைச் சூழ்ந்து கொண்ட வீரர்கள் பர்ணசாலைக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை வெளிக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். குலவதிக்குக் காவலாக வந்த யாதவ வீரர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டு ஒரு புறத்தில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். குலவதியின் பணிப் பெண்களை ஒன்றாக நிற்கவைத்து வீரர்கள் சூழ்ந்து காவல் செய்தார்கள். மகரிஷியும் ஹேமாத்ரியும் வீரர்கள் காவலுடன் வெளியில் அழைத்துவரப்பட்டு இரண்டு புரவிகளில் ஏற்றப்பட்டார்கள். ஹேமாத்ரியின் கைகளும் துறவியின் கைகளும் பின்னால் கயிறுகள் கொண்டு பிணைக்கப்பட்டிருந்தன. அவர்களை மற்ற வீரர்கள் பிடித்து புரவிகளின் மீது ஏற்றி விட்டார்கள். இப்படி அனைவரையும் வஞ்சக மாக எல்லோரும் உறங்கிய சமயத்தில் சிறை பிடித்த சோமேசுவரன் "உம்! மலையை நோக்கி பயணம் தொடங்கட்டும். நாளைக் காலைக்குள் நாம் நமது தலைநகர் ராஜபுரியில் இருப்போம்" என்று உத்தரவிட்டான்.

அக்கம்பக்கத்துப் புரவிகளில் உட்கார்ந் திருந்த துறவியும் ஹேமாத்ரியும் சோமேசு வரனை சிறிதும் லக்ஷியம் செய்யாமல் உட்கார்ந் திருந்தார்கள். அவர்கள் அலட்சியத்தை கவனித்த சோமேசுவரன் "ஹேமாத்ரி! சோமேசுவரனை ஏமாற்ற யாராலும் முடியாது. யாதவ மன்னன் பெண்ணை மீட்க வருவான்.

அப்பொழுது கிடைக்கும் அவனுக்கு படிப் பிணை" என்று கூறினன்.

"தம்பீ! உன் துறவறம் பெரும் பொய். யாதவன் மகளின் காதை நேற்று நீ கடித்ததை நானே பார்த்தேன். நீ ஒரு காமப்பித்தன். என்னைத் துறந்தாய், நாட்டைத் துறந்தாய், பெண்ணாசையைத் துறக்கவில்லையே நீ. ராஜபுரியில் உனக்குப் பாடம் கற்பிக்கிறேன், இரு" என்று துறவியைப் பார்த்து கறுவினன்.

ஆனல் ஹேமமாத்ரியோ, துறவியோ அவனுக்கு பதிலேதும் சொல்லவில்லை. அரசகுமாரி மட்டும் சீறினள். "இரவில் உறங்கும் வீரர்களைப் பிடிக்கும் நீ ஒரு வீரனா? என்னைக் காட்டி என் தந்தையை அடக்கும் யோசனையுள்ள நீ ஒரு மன்னனா! பொறு கயவனே! யாதவர் படைகள் இங்கு வரும்வரை பொறு. பிறகு உன் நாட்டுக்கு நீ மன்னனாயிருப்பாயா? அல்லது யமலோகத்துக்குப் பயணம் செய்வாயா? என்பதை நினைத்துப்பார். உனது இந்த அசட்டுத் துணிவு உன் அரசை நாசம் செய்யப் போகிறது. இந்த பஞ்சவடியின் சரித்திரத்தைப் பார். இங்கிருந்துதான் ராவணன் பெண்ணைத் தூக்கிச் சென்றான், அவன் அழிந்தான், அவன் அரசும் அழிந்தது" என்று சீறிப் பேசினள்.

"குலவதி! சரித்திரத்தை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. சீதையைக் காப்பாற்ற ஜனகன் வரவில்லை. அவள் கணவன் தான் வந்தான். உனக்குக் கணவனில்லை. ஆனல் அந்தக் குறையை நிவர்த்திக்கலாம்.

அதற்கும் வழி வைத்திருக்கிறேன்'' என்று கூறி விட்டு ''உம்! நடவுங்கள்'' என்று தனது வீரர் களுக்கு உத்தரவிட சோமேசுவரன் புரவி வீரர்கள் சிறைப்பட்டவர்களை சூழ்ந்து சென்றார் கள் ஸஹ்யாத்ரி மலையை நோக்கி. இந்த கோஷ்டிப் பயணம் நடுப்பகல்வரை இடை விடாமல் நடந்தது. நடுப்பகலில் குலவதி நீந்திய வாவிக்கருகில் பயணத்தை நிறுத்திய சோமேசுவரன் உணவுகளைத் தயாரிக்க உத்தர விட்டான். உணவுகளை வீரரும் சிறைப்பட் டோரும் அருந்தினார்கள் மூவரைத் தவிர. துறவியும் ஹேமாத்ரியும் உணவைத் தொடவும் மறுத்தார்கள். குலவதி தனக்களிக்கப்பட்ட உணவை பறவைகளுக்கு விட்டெறிந்தாள்.

இதையெல்லாம் கவனித்தும் கவனிக் காததுபோலவே நடந்துகொண்ட சோமேசு வரன் பிற்பகலில் மீண்டும் பயணத்தைத் துவங்கி விளக்கு வைக்கும் நேரத்தில் மலையின் அப்புறத்தை அடைந்தான். அங்கிருந்து கடலுக்கு வெகு அருகிலிருந்த ராஜபுரியின் விளக்குகள் கண்களைச் சிமிட்டின. அன்றிரவு நீண்டநேரம் கழித்து ராஜபுரியை அடைந்த சோமேசுவரன் எல்லோரையும் சிறையில் அடைக்க உத்தரவிட்டு குலவதியை மட்டும் தன்னுடன் வரச்சொன்னான். போகும் வழியில் 'குலவதி! நீ கடலுக்கு நடுவிலிருப்பாய். உன்னை உன் தந்தையோ என் தம்பியோ கண்டுபிடிக்க முடியாத இடத்துக்குக் கொண்டு போகிறேன்'' என்று கூறி பயணத்தை மேலும் துவங்கினான். கடற்கரை

யிலிருந்த ஒரு படகில் அவளை ஏறச்சொல்லி "இவளை கடற்கோட்டைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று படகோட்டிகளுக்கு உத்தரவிட படகு கடலலைகளில் பாய்ந்து சென்றது.

அந்த படகு செல்வதை மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டு நின்ற சோமேசுவரன் "இனி குலவதி என் கையில்" என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டான். குலவதியை தாங்கிச் சென்ற படகு, மலையை உடைத்து கடல்புகுந்திருந்த ஒரு இடத்துக்கு நள்ளிரவில் வந்தது. எதிரே தெரிந்த பலமான தீவுக் கோட்டையின் அலைமோதும் படிகளில் படகு பிணைக்கப்பட்டது. அங்கிருந்த கோட்டைக்குள் குலவதி அழைத்துச் செல்லப்பட்டாள்.

புரி என்று சிலாஹாரா மன்னர்கள் காலத்திலும் ராஜபுரியென்று பிற்காலத்திலும் பிரசித்தமான அந்த துறைமுக நகரத்திலிருந்து கடல்மூலம்ஊரைச் சுற்றிக்கொண்டு வரப்பட்ட போதிலும் நிலப்பகுதி அதிக தூரத்திலில்லை யென்பதை யாதவ ராஜகுமாரி மிக எளிதில் புரிந்துகொண்டாளாதலால் அவள் அந்தக் கோட்டைச் சிறையைப்பற்றி அதிக அச்சம் கொள்ளவில்லை. அவள் அந்த தீவுக்கோட்டைக்குள் அழைத்துச்செல்லப்பட்டு அங்கிருந்த நடுக்கட்டிடத்தின் மாடி அறையொன்றில் காவலரால் சிறை வைக்கப்பட்டு பின்பு அந்த அறையைச் சுற்றிப்பார்த்தாள். காவலர் அறைக்கதவை வெளிப்புறத்தில் பூட்டிச் சென்றபிறகு அறையின் கிழக்குப்புற

சாளரத்தின் மூலம் வெளியே பார்த்து சற்று எட்டத்தெரிந்த விளக்குகளே தலைநகரான புரியாக இருக்கவேண்டுமென்று உணர்ந்து கொண்டதன்றி, அங்குதான் ஹேமாத்ரியும் மகரிஷியும் சிறைவைக்கப்பட்டிருப்பார்களென் பதையும் ஊகித்துக்கொண்டாள். சந்திரதேவர் தன்னிடமிருந்து அதிக தூரத்திலில்லையென் பதை சந்தேகமற உணர்ந்து, அந்த உணர்வின் பயனாக தைரியத்தையும் அடைந்தாள். அந்தத்தீவுக் கோட்டைக்கும் தரைப்பகுதியான மலைத்தொடரின் அடிவாரத்துக்கும் அதிக தூர மில்லையென்றாலும், கோட்டையைச் சுற்றிலும் எழுந்து ஆரவாரம் செய்துகொண்டிருந்த அலைகளை நீந்தித்தாண்டுவது சிறிது கஷ்ட மென்பதையும் புரிந்துகொண்டாள். இருப் பினும் சந்தர்ப்பம் வரும்போது தான் தீவின் கடலை நீந்திச்செல்வதென்று உறுதியும் கொண்டாள். அந்த சமயத்தில் சுற்றிலும் காய்ந்துகொண்டிருந்த வெண்ணிலவுகூட, அதன் அழகு கூட, ராஜகுமாரிக்கு மகிழ்ச்சி யைத்தரவில்லை. கொடியவனான சோமேசு வரனை அழிக்கும் வழியையே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

எதிரே புரியின் சிறையிலிருந்த மகரிஷியும் மகாகவியான ஹேமாத்ரியும் அதே சிந்தனை களில் ஆழ்ந்து கிடந்தார்கள். மலைத்தொடரின் சரிவிலிருந்த சிறை விடுதியில் காவல் கட்டு பலமாயிருந்தது. சாதாரணமாக அந்த சிறைக் கட்டிடத்தைக் காவல் செய்ய நியமிக்கப்படும் வீரர்கள் தொகை அன்று இரட்டிக்கப்பட் டிருந்ததை சுற்றும் உலாவிய வீரர்கள் அணி

வகுப்பிலிருந்து மனீஷி புரிந்துகொண்டார். ஆனால் அவருக்கு அந்த சிறையைப்பற்றி லவலேசமும் கவலையில்லையென்றாலும் அரச குமாரியின் நிலை எவ்வாறிருக்கும் என்பதைப் பற்றி சிறிது அச்சப்பட்டுக்கொண்டிருந்தார். சோமேசுவரனின் முட்டாள்தனமான இந்த நடவடிக்கையால் சிலாஹாரா அரசு அழிந்து விடும் என்று முடிவுக்கும் வந்தார். அரசகுமாரி யின் சிறையிருக்குமிடத்தைப்பற்றி ஊகிப்பது அவருக்கு ஒரு பிரமாதமில்லையென்றாலும் சோமேசுவரனிடமிருந்து அவளை விடுவிக்கும் அவசியத்தை நினைத்து அதற்கான வழிகளைப் பற்றியும் சிந்திக்கலானார்.

இப்படி அவர் சிந்தனையில் ஆழ்ந்த சமயத்தில் ஹேமாத்ரி கேட்டார் "சந்திரதேவா! அரச குமாரி எங்கு சிறை வைக்கப்பட்டிருப்பாள்?" என்று.

ஹேமாத்ரியை அருகே வரும்படி சைகை செய்த சந்திரதேவர் சாளரத்தின் மூலம் தூர இருந்த தீவுக்கோட்டையை சுட்டிக்காட்டி "அரசகுமாரி அந்தக்கோட்டையிலிருக்கிறாள்" என்றார்.

ஹேமாத்ரி தூரத்தே கடலுக்கு நடுவே கன்னங்கரேலென்று தெரிந்த அந்த கோட்டையைப் பார்த்து "அதை அணுகுவது..." என்று துவங்கிய கேள்வியை முடிக்காமல் விட்டார்.

"கஷ்டம்" என்று வாசகத்தை பூர்த்தி செய்த துறவி "என்னைத் தவிர மற்றவர்களுக்கு" என்றும் கூறினார்.

"நீர் மட்டும் எப்படி விலக்கு?" என்று வினவினுர் ஹேமாத்ரி.

"இடையிலுள்ள கடற்பகுதியை நீந்தித் தாண்டிவிடுவேன். பத்து வயது முதல் எத்தனேயோ முறை நான் அந்தக்கோட்டைக்கு நீந்திச்சென்றிருக்கிறேன். சிலாஹாரா ராஜ்யத்தின் கடற்படைத் தலேவனுன பிறகு அந்தக் கோட்டையையே எனது கப்பல் தளமாக்கிக் கொண்டேன். அதெல்லாம் பழைய ஆசிரமக் கதை" என்ற துறவி "மீண்டும் தற்காலிகமாக பழைய ஆசிரமத்துக்குச் செல்லவேண்டிய அவசியத்தை அண்ணன் ஏற்படுத்திவிட்டான் இப்பொழுது" என்றும் கூறி பெருமூச்செறிந்தார்.

ஹேமாத்ரி அந்த வாலிபத்துறவியை சற்று உற்று நோக்கினுர். "மகரிஷி! அரசகுமாரி விடுதலேயாகி நீரும் சுதந்திரம் அடைந்தால் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று வினவவும் செய்தார்.

"ஆசிரமம் மாறலாம். நமது கையில் என்ன இருக்கிறது?" என்று கூறிய துறவி பெருமூச்செறிந்தார். கண்களே வானத்தை நோக்கியும் உயர்த்தினுர். "நாம் பதுமைகள், அவன் இயக்குகிருன்" என்றும் கூறினுர்.

மகரிஷி மெல்ல மெல்ல மெல்ல போலியாகி வருகிருர் என்று எண்ணினுர் ஹேமாத்ரி. அரசகுமாரியின் வாள்விழிகள் துறவியின் சித்திக் கயிறுகளே மெல்ல மெல்ல அறுப்பதை உணர்ந்து புன்முறுவல் கொண்டார்.

திடீரென துறவி கேட்டார் "ஹேமாத்ரி• அரசகுமாரி இருக்கும் நிலையை யாதவ மன்னருக்கு தெரிவிக்க வேண்டாமா?" என்று.

"இங்கிருந்து தேவகிரிக்கு தினம் என் ஓலை போய்க்கொண்டிருக்கிறது. ஒரு நாள் ஓலை போகவில்லையென்றாலும் யாதவன் படை இங்குவரும்" என்றார்.

திருப்திக்கு அறிகுறியாக தலையை அசைத்த துறவி "ஹேமாத்ரி! நீங்கள் உறங்குங்கள்" என்று கூறினார்.

"நீங்கள்?" ஹேமாத்ரி வியப்புடன் வினவினார்.

"அரசகுமாரியைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார் மகரிஷி சந்திரதேவர்.

30-6-85 குங்குமம் இதழுடன் இணைப்பு

**7—7—85 குங்குமம் இதழில் தொடரும்**

SUPPLEMENTED TO KUNGUMAM ISSUE
DATED 30--6—85

# 9

## துறவியை இழுத்த காமம்

காவலர் எங்கும் உலாவ கடுமையாக சிறையில் வைக்கப் பட்ட துறவி, தன்னை உறங்கச் சொல்லிவிட்டு தாம் அரசகுமாரி யைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொன்னதும் அவருக்கு சித்தப் பிரமை ஏதும் ஏற்படவில்லையென் பதை உறுதி செய்துகொள்ள மகரிஷியை உற்று நோக்கினார் ஹேமாத்ரி, சில விநாடிகள். பிறகு சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள "என்ன சொன்னீர்கள்?" என்று கேள்வியொன்றையும் வீசினார்.

ஹேமாத்ரியின் சித்தத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டதால் சற்றே புன்சிரிப்பை தமது உதடுகளில் தவழவிட்டுக் கொண்ட துறவி "முடியாதது எதையும் சொல்லவில்லை" என்றார் உவகை ஒலித்த குரலில்.

ஹேமாத்ரிக்கு சந்தேகம் தீர்ந்து எரிச்சல் பற்றிக்கொண்ட தால் "இங்கிருந்து நேராகப் போய் விடுவீர் அரசகுமாரியிருக்கும் இடத் திற்கு?" என்று எரிச்சல் நிரம்பிய குரலில் கேட்டார்.

"உத்தேசம் அதுதான்" என்றார் துறவி.

''இந்த சிறைச்சாலையைச் சுற்றிலும் ஐம்பது வீரர்களாவது காவல் இருப்பார்கள்...'' என்றார் ஹேமாத்ரி.

''நூறுபேருக்குக் குறைவில்லை'' என்று துறவி கூறினார்.

''அது கடுங்காவல் இல்லையா?''

''ஆம். காவலில்லாவிட்டால் இதற்கு சிறை என்ற பெயர் எப்படிப் பொருந்தும்?''

''பொருந்தாது பொருந்தாது. அது கிடக்கட்டும், ராஜகுமாரி அதோ கடல் நடுவிலிருக்கும் தீவுக் கோட்டையில் இருப்பதாக நீர் தானே கூறினீர்?''

''ஆம். எனக்குத்தானே சிலாரா நாட்டின் மர்மம் தெரியும்?''

இந்த சம்பாஷணையால் மிகவும் சினத்தின் வசப்பட்ட ஹேமாத்ரி ''சந்திரதேவரே! நீர் என்ன பட்சியா?'' என்று வினவினார்.

''பக்ஷியாக ஏன் இருக்க வேண்டும்?'' என்று துறவி வினவினார்.

''இந்த சிறையிலிருந்து அந்த தீவுக்கோட்டைக்குப் போனால் இந்த சாளரத்தின் வழியாகப் பறந்துதான் போகமுடியும்'' என்றார் ஹேமாத்ரி இகழ்ச்சியுடன்.

துறவி அவர் இகழ்ச்சியைப் பற்றி கவலைப்படவில்லை. ''சாளரத்தின் வழியாகத்தான் போகவேண்டும். ஆனால் பறக்கவேண்டியதில்லை'' என்று சொன்னார்.


துறவி
சாண்டில்யன்

''சாளரத்தின் கம்பிகள் பல மானவை'' என்று சுட்டிக்காட்டி ஞர் ஹேமாத்ரி.

''அதனுலென்ன?''- துறவி சர்வ சாதாரணமாக வினவிஞர்.

''நமது கைகள் பின்புறமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன''

''அதனுலென்ன?''

''கயிறுகளை அவிழ்க்க எந்த மார்க்கமும் இல்லை''

''அதனுலென்ன?''

''என்ன அதனுலென்ன?'' எரிந்து விழுந்தார் ஹேமாத்ரி.

''கையைத்தான் கட்டிஞர்கள். கால்கள் சுதந்திரமாகத்தானே இருக்கின்றன'' என்ற துறவி அறை மூலையில் சற்று உயரமாக வைக்கப் பட்டிருந்த விளக்கை மெதுவாக நகர்த்த முற்பட்டு முதலில் தரை யில் படுத்தார். பிறகு தனது இடுப்பை வளைத்து கால்களை உயர்த்தி விளக்கை இருகால்களா லும் பற்றி மெதுவாகத்தூக்கி தரை யில் வைத்தார். அடுத்து எழுந்து உட்கார்ந்து விளக்குக்கு முதுகைக் காட்டி உட்கார்ந்து பின்னுல் கட் டப்பட்டிருந்த கைக்கயிறுகளை தீபத்தின் சிறு சுடரில் பிடித்தார். மெள்ள மெள்ள கயிறு தீப்பிடித்து எரிந்தது. அதனுல் இறுக இருந்த முடிப்புகள் தீய்ந்து போகவே கைகளை முறுக்கி கைக்கட்டுகளை அனுயாசமாக அவிழ்த்துப் போட் டார்.

துறவியின் சேஷ்டைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ஹேமாத்ரி வியப்பின் எல்லையை எட்டிக் கொண்டிருந்தார். துறவி இடுப்பை வளைத்து தீபத்தை எடுத்த திறமை யைக் கண்டு பெரிதும் வியந்ததால், வியப்பின் சாயை அவர் முகத்தில் நன்றாகவே தெரிந்தது.

ஹேமாத்ரியின் வியப்பைக் கண்ட துறவி "யோகாசனங்கள் நமது உடலை இஷ்டப்படி வளைக்க விடுகின்றன. அதில் சிறிது அப்பி யாசம் இருந்தால் நான் செய்தது பெரிய வித்தையல்லவென்பது உங்க ளுக்கே தெரியும்" என்று தமது உடல் வாளிப்புக்கு விளக்கம் சொன்னார்.

அடுத்து ஹேமாத்ரி "நன்று துறவி. விளக்கை இங்கு கொண்டு வாரும். எனது கைகளையும் விடு வித்துக்கொள்கிறேன்" என்று கேட்டார்.

"வேண்டாம். உமது கைகளின் பிணைப்பு அப்படியே இருக்கட்டும்" என்றார் துறவி.

"ஏன்?"- ஹேமாத்ரியின் கேள் வியில் கடுப்பு இருந்தது.

"நான் போன பிறகு காவலர் எச்சரிக்கை அடையாமலிருக்க நீங்கள் கைக்கட்டுடன் சாளரத்தின் முன்பு உலாவிக்கொண்டிருங்கள். அப்பொழுது காவலர் என்னைப்பற்றி கவலைப்படமாட் டார்கள். நான் உறங்கிவிட்டதாக

நினைப்பார்கள்'' என்று கூறிவிட்டு ''ஹேமாத்ரி! நான் ஒரு சாளரத்தைத்தான் வளைக்கப் போகிறேன். இந்த விளக்கை அந்தக் கோடிக்கு அகற்றிவிட்டு நீர் முதுகுப்பக்கத்தை அடுத்த சாளரத்துக்காகக் காட்டி உலாவும். நான் இறங்கியபின்பு விளக்கை ஊதி விடும். யார் வந்தாலும் கதவைத் திறக்கவேண்டாம். கதவை உடைத்தால் நான் ஓடிவிட்டதாகக் கூறி சாளரத்தைக் காட்டுங்கள்'' என்று துறவி வேகமாகப் பேசினார். பிறகு சாளரத்தை நோக்கிச்சென்று அதன் பலமான கம்பிகளை கைகளால் நீக்கமுற்பட்டார். கம்பிகளை வளைப்பது முதலில் கஷ்டமாயிருந்தாலும் துறவியின் கனத்த இரும்புக் கைகளின் முயற்சியால் மெள்ள மெள்ள வளையத் தொடங்கின. இரண்டு கம்பிகளை நன்றாக வளைத்தபோது அவருக்குப் பின்னால் நின்றிருந்த ஹேமாத்ரி, துறவியின் கைகளின் முண்டுகள் பெரிதாகிவிட்டதையும், அவர் மூச்சுப்பிடித்ததால் முதுகு கூட சிறிது புடைத்து அவர் முதுகுச் சதைகள் பயங்கரமாக அசைந்ததையும் பார்த்தார். ஹேமாத்ரி அந்த அசுரபலத்தைக் கண்டு அதிசயத்தின் எல்லையை எய்தினார்.

மூச்சை இழுத்துப் பிடித்து இரண்டு கம்பிகளை நன்றாகவே வளைத்துவிட்ட துறவி அவற்றை

மெதுவாக சாளரக் கம்பிகளிலிருந்தும் திருகிப் பெயர்த்தெடுத்தார். ஒரு கம்பியை ஹேமாத்ரியிடம் கொடுத்து இன்னொன்றை தாம் வைத்துக்கொண்டார். "ஹேமாத்ரி! இனி நாம் இருவரும் நிராயுதபாணிகளல்ல. இந்த இரும்புக்கம்பிகளில் ஒன்று சரியாக மண்டையில் இறக்கப்பட்டால் அவனுக்குக் கபால மோட்சம் நிச்சயம்" என்று துறவி சொன்னார்.

"என் கைகள் பின்புறத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கையொன்றில் சாளரக் கம்பியை திணித்திருக்கிறார்கள். அதை எப்படி நான் கழற்றுவது? எப்படி அடிப்பது?" என்று ஹேமாத்ரி கேட்டார்.

துறவி பதில் சொல்வதற்கு பதில் செயலில் காட்டினார். தன் கைகளையும் கம்பியுடன் பின்னால் கொண்டுசென்று ஹேமாத்ரியை அணுகி "நீங்கள் வரும் காவலரின் முட்டியில் தட்டினால் போதும் இப்படி" என்று பின்னாலிருந்த கையின் தடியை திருப்பிக் காட்டினார்.

வெகு லாவகமாக அது சுழன்ற வழியைப் பார்த்த ஹேமாத்ரி "மகரிஷி! நீர் சிலம்பமும் பழகியிருப்பதாகத் தெரிகிறது" என்றார்.

துறவி லேசாக நகைத்தார். "ஹேமாத்ரி! எதுவும் தெரியாவிட்டால் சாவதைத் தவிர வேறு வழியில்லை. சாவைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அரசகுமாரி

என் அண்ணனிடம் சிறைப்படடிருக்காவிட்டால் இந்த சிறை அறையிலேயே நான் படுத்துக் கிடப்பேன்'' என்ருர்.

பிறகு ஹேமாத்ரியை எச்சரித்துவிட்டு அந்தப் பக்கத்து சாளரத்தின்மீது சாய்ந்து ''எதிரி விளக்கை மறையுங்கள். நான் சாளரத்தில் இறங்கியதும் உலாவத் தொடங்குங்கள். விளக்கிலிருந்து என்னை மறைத்து விடுங்கள்'' என்று கூறிய துறவி பிடுங்கிய கம்பிகள் அளித்த இடைவெளியில் மெதுவாக இறங்கலானுர். அங்கிருந்து மெல்ல தரையில் குதித்த துறவி எதிரிலிருந்த மரங்களில் மறைந்து விட்டார்.

துறவியின் சாகசத்தைப் பார்த்த ஹேமாத்ரி பிரமிப்புடன் நின்று கொண்டிருந்தார்,சிறையில். பிறகு அறையின் உட்புறத்தில் உலாவலானுர். துறவி அத்தனை அவசரமாகத் தம்மை விட்டுச் செல்லும் காரணத்தை ஹேமாத்ரி புரிந்துகொண்டார். ''துறவிக்குப் பெண்ணுசை வலுத்துவிட்டது. அதனுல் ஆபத்தை அலட்சியப்படுத்தி ஒடுகிருர் அரசகுமாரியிடம். காமம் இழுக்கிறது துறவியை'' என்று தமக்குள் கூறிக்கொண்டார். மலைச் சரிவிலிருந்த மரங்களில் மறைந்து விட்ட பிறகு துறவி ஹேமாத்ரியின் கண்ணுக்கு அகப்படவில்லை

தூரத்தே தெரிந்த கடற்பகுதிமீது கண்களை ஓட்டிய ஹேமாத்ரி அங்கிருந்த நாவாய்களில் பிணைக்கப்பட்டிருந்த படகுகளில் ஒன்று அசைவதையும் நீரைப் பிளந்து செல்வதையும் பார்த்தாள். பிறகு படகும் கண்ணுக்கு மறைந்தது.

அடுத்த அரை ஜாமத்திற்குள் கோட்டைத் தீவை நோக்கி ஒரு படகு வருவதையும், அதைச் செலுத்தி வந்த மாலுமியின் தலையில் மகுடமொன்று இருந்ததையும் பார்த்தாள் அரசகுமாரி. ''சோமேசுவரன் வருகிறான். என்ன கெட்ட எண்ணத்துடன் வருகிறானோ?''' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு தனது இடையின் சேலை மடிப்பில் மறைத்து வைத்திருந்த ஒரு சிறிய கத்தியையும் எடுத்து தனது கையை பின்புறம் கொண்டுபோய் கத்தியை மறைத்தாள். ''வா மன்னனே வா! உன் வாழ்க்கை இன்றுடன் முடிந்துவிடும்'' என்று கூறிக்கொண்டே கத்தியை இறுகப் பிடித்தாள். கதவுக்கு முன்பாக சித்தமாகவும் நின்றாள்.

ஆனால் நீண்டநேரம் யாரும் வரவில்லை, கதவும் திறக்கப்படவில்லை. பின்னாலிருந்து அவளை யாரோ பொட்டில் அடித்தார்கள். அரசகுமாரி சுரணையற்று வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்ட கொடி போல் விழுந்தாள. அவளுக்கு

சுரணை திரும்ப நீண்ட நேரம் பிடித்தது. அவள் கண்விழித்த சமயத்தில் ஏதோ ஒரு படகில் போய்க் கொண்டிருந்ததை உணர்ந்து கொண்டாள். தலையை தூக்க முயன்றாள். தலை துவண்டு விழுந்தது. இரண்டாவது முறையாக சுரணை அடைந்தபோது அவள் இருந்த இடம் அரண்மனையுமல்ல,

கடலுமலல, ஏதோ ஒரு குடிசையில் கிடத்தப்பட்டிருந்தாள். குடிசை வாயிலுக்கு வந்த ஒரு பெரிய யானை துதிக்கையை நீட்டி அவள் உடலைத் தடவலாயிற்று. தான் கண்டது சொப்பனமென்பதை உணர்ந்த ராஜகுமாரி மீண்டும் கண்களை மூடினாள்.

—தொடரும்

# 10. கமண்டலத்தின் உபயோகம்

கண்ணை இரண்டாவது முறை யாக விழித்த குலவதி தான் எங்கோ குடிசையில் படுத்துக் கிடப் பதையும் தன்னை யானையொன்று துதிக்கையால் தடவியதையும் கண் டதும் மீண்டும் கண்களை மூடினு ளென்ருல் அதற்குக் காரணம் இருக் கவே செய்தது. அப்படி மூன்ரும் முறையாகக் கண்களை மூடியும் உணர்வு உறங்காததாலும் நல்ல சுரணை இருந்ததாலும் தனக்குத் தெரிந்த தங்கள் நாட்டுப் பட்டத்து யானை அங்கு எப்படி .வரமுடியும் என்று சிந்தித்துப் பார்த்தாள். அதன் நெற்றியில் இடப்பட்டிருந்த தீர்க்கமான நாமமும், உடலின் இரு பக்கத்திலும் தொங்கிய வண்ணப் படுதாவும், அதன் துதிக்கை தன்னை ஆதரவுடன் தடவியதையும் எண் ணிப் பார்த்து ''இது கோவிந்தன் தான், சந்தேகமில்லை'' என்று உள் ளூர சொல்லிக்கொண்டாள். தங் கள் பட்டத்து யானை இங்கு வரக் காரணமில்லையென்பதால் எதற்கும் அது தங்கள் யானைதானு என்பதை உணர கண்மூடிய நிலையிலும் ''கோவிந்தா!'' என்று மெதுவாக அழைத்தாள். கோவிந்தன் அவள் குரலைக் கேட்டு தலையை ஒருமுறை ஆட்டி மீண்டும் அவள் உடலை

னு துக்கையால் மெதுவாகத் தடவி யது. அதன் விளைவாக தான் கண்டது கனவல்ல என்பதை அறிந்த குலவதி கண்களை நன்ருகவே திறந்துகொண்டு எழுந்திருக்க முயன்ருளாஞலும் முடியாததால் திரும்ப மல்லாந்து படுத்துக்கொண்டாள். அவள் உடல் பூராவும் பெரும் வலி இருந்தது. அவள் பொட்டு கூட விண்விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்தது.

அவள் அவஸ்தையை கோவிந்தனும் புரிந்துகொண்டிருக்கவேண்டும். தனது துதிக்கையை மீண்டும் குடிசைக்குள் நீட்டி அவள் உடலை மெதுவாகத் தூக்கி வெளியே எடுத்து குடிசை வாயிலில் அவளை உட்காரும்படி சார்த்தியது. குடிசையில் சாய்ந்து உட்கார்ந்த குலவதி மெதுவாக கண்களை நாற்புறமும் ஓடவிட்டாள். அவள் கண்களுக்கு ஏதும் புலஞகாவிட்டாலும் காடு முழுவதும் யானைகள் நிரம்ப உலாவும் அரவமும் அவை பிளிறும் ஒலிகளும் காதில் விழுந்தன. உணர்ச்சிகள் நன்ருகத் திரும்பியதும் அவள் பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தாள். தான் சிறையிருந்த அறைக்குள் யாரோ ஒருவன் வந்து தன்னை பொட்டிலடித்தது நினைவிருந்தாலும் அது யாரென்று தெரியவில்லை அவளுக்கு. அடுத்து மேலும் சிறிது சுரணை வந்தாலும் படகுக்கு தன்னை கொண்டு வந்தது



யாரென்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. கடலில் இருந்த காரிருளில் படகை செலுத்தியது யாரென்பதைப் பார்க்குமுன்பு தனது கண் இருட்டிவிட்டதை நினைவுபடுத்திக் கொண்டாள். "பொட்டில் அடித்து மயக்கமடையச் செய்தவன் யார்? எதற்காக இந்த குடிசைக்கு கொண்டு வந்தான்? பட்டத்து யானை இங்கு எப்படி வந்தது?" என்று எண்ணமிட்டாள். சுற்றுப்புறத்தைப் பார்த்ததும் தானிருப்பது ஸஹ்யாத்ரி மலையென்பதையும், ராஜபுரிக்கு அருகில்தான் தான் இருப்பதையும் உணர்ந்தாள். கடைசியாக துறவியின் நினைவுகூட அவளுக்கு வந்தது. "பாவம்! துறவி சிறையில் என்ன பாடுபடுகிருரோ?" என்று எண்ணி பரிதாபமடைந்தாள். "சுவாமி! சுவாமி!" என்று இரண்டு முறை அழைத்தாள் மெதுவாக. அவள் அழைத்ததைக் கேட்டதுபோல் துறவி கையில் கமண்டலத்துடன் மலைச்சரிவில் ஏறி வந்துகொண்டிருந்தார்.

அவர் தூரத்தில் வருவதைப் பார்த்ததுமே அவள் உள்ளத்தில் துணிவு விரைந்து எழுந்தது. உடலிலும் சிறிது சக்தி வந்துவிட்டதாகத் தோன்றியது அரசகுமாரிக்கு. துறவி அநாயாசமாகவும், கம்பீரமாகவும் மலைச்சரிவில் ஏறி அவள் சாய்ந்திருந்த குடிசையை அணுகி

அவள் முன்பு மண்டியிட்டு உட்கார்ந்தார். கமண்டலத்திலிருந்து கையில் சிறிது நீரை எடுத்து அவள் முகத்தையும் கண்களையும் துடைத்துவிட்டார். "இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று வினவினார் துறவி.

அவள் கண்களில் வியப்பு விரிந்தது. "நான் இங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினாள் வியப்பு குரலிலும் விரிய.

துறவி புன்முறுவல் கொண்டார். "இதில் தெரியாததற்கு என்ன இருக்கிறது? நான்தானே உன்னை இந்த குடிசைக்கு கொண்டு வந்தேன்" என்றார்.

"நேற்றிரவு அந்த பயங்கர கோட்டையிலிருந்து..." வாசகத்தை முடிக்கவில்லை அரசகுமாரி.

"நேற்றிரவல்ல அரசகுமாரி. அந்த கதை நடந்து மூன்று நாளாகி

விட்டது. இன்று நான்காவது நாள். இன்றும் நீ விழிக்காவிட்டால் மருத்துவரை அழைத்துவருவதாக இருந்தேன்'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன துறவி ''நல்ல வேளையாக அநத சிரமத்தை நீ வைக்கவில்லை எனக்கு'' என்றும் சொன்னார் மகிழ்ச்சியுடன்.

அரசகுமாரி மிதமிஞ்சிய வியப்பில் ஆழ்ந்தாள். ''அப்படியானால் அந்த தீவுக்கோட்டை அறையில்...'' என்று துவங்கினாள்.

''நான்தான் லேசாகப் பொட்டில் தட்டினேன். அந்த சிறு தட்டல் உன்னை மூன்று நாளைக்கு மயக்கத்தில் ஆழ்த்தும் என்று நான் எண்ணவில்லை. நீ இத்தனை பலவீனமானவளென்று நான் நினைக்கவில்லை'' என்றார் துறவி.

''சிறு தட்டா அது!'' அரசகுமாரி எரிச்சலுடன் கேட்டாள்,

''மிகவும் லேசாகத் தட்டினேன். நீ அப்படியே துவண்டு விட்டாய். உன்னைத் தூக்கிக் கொண்டு சாளரத்தின் மூலம் நூலேணியில் இறங்குவது மிகவும் கஷ்டமாயிருந்தது. கோட்டைக்

காவலர் யார் பார்த்திருந்தாலும் விபரீதம் விளைந்திருக்கும். நல்ல வேளை யாரும் பார்க்கவில்லை. உன்னை தோளில் போட்டவண்ணம் நான் படகைப் பிணைத்திருந்த இடத்துக்கு வந்தேன். அங்கும் யாரும் இல்லை. தீவுக்கோட்டைக்கு தாங்கள் அறியாமல் யார் வரப்போகிறார்கள் என்ற எண்ணம் கோட்டைக் காவலருக்கு இருந்ததால் நான் பிழைத்தேன். உன்னை படகில் கிடத்தி படகை செலுத்தியபோதும் நீ மயக்கத்திலிருந்ததால் இந்த குடிசைக்கு உன்னைக் கொண்டு வந்தேன். மூன்று நாட்களாக உனக்கு சிசுருஷை செய்யவே நேரம் சரியாயிருந்தது. நல்லவேளை நீ விழித்துக்கொண்டாய். நேற்றிரவுதான் கோவிந்தன் வந்தான். அவனிடம் உன்னை ஒப்படைத்து விட்டு நீராடச் சென்றேன்'' என்று துறவி விளக்கினார் அதுவரை நடந்ததை.

அவர் சொன்ன நிகழ்ச்சிகளைக் கேட்ட அரசகுமாரி பிரமித்துப் போனாள். அவள் மனத்தில் சந்தேகங்கள் பல எழுந்து அவளை சித்திரவதை செய்ததால் ''ஆமாம்! கோவிந்தனை உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''கோவிந்தன் தனியாக மலையில் வந்து கொண்டிருந்தான்.



அவன் அலங்காரத்திலிருந்தும் நாமத்திலிருந்தும் அவன் யாதவர்கள் பட்டத்து யானையாக இருக்க வேண்டுமென்று ஊகித்தேன். யாதவர்களிடம் கோவிந்தன் என்ற பட்டத்து யானை ஒன்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் எதற்கும் "கோவிந்தா!" என்றழைத்தேன். அது காதுகளை விரித்து துதிக்கையை தூக்கிக் கொண்டு அருகில் வந்தது. துதிக்

கையை தடவிக் கொடுத்து என்னுடன் அழைத்து வந்தேன் இந்தக் குடிசைக்கு. நீ விழுந்துகிடப்பதைப் பார்த்ததும் உள்ளே நுழைய முடியாததால் வெளியில் நின்றே உன்னை தடவிக் கொடுத்தது. இனி யாரும் உன்னை அணுகமுடியாதென்று தீர்மானித்து நீராடச் சென்றேன். நீராட்டத்தை முடித்து உன் நலத்துக்காக காயத்ரி மந்திரத்தை ஜபித்தேன். பயன் கிடைத்தது. நான் திரும்பியபோது நீ வாயிலில் சாய்ந்து கொண்டிருந்தாய்'' என்றார் துறவி.

துறவி சொன்ன விஷயங்கள் ஏதோ புராணங்களில் நடப்பது போல் தோன்றியது குலவதிக்கு. ''மூன்று நாட்களாக நான் பட்டினியாகவா கிடந்தேன்? அப்படித் தெரியவில்லையே'' என்றாள் அரசகுமாரி.

''உனக்கு தினம் நான் பால் ஊட்டினேன் சிரமப்பட்டு'' என்றார் துறவி.

''எப்படி?'' என்று குலவதி கேட்டாள் சந்தேகத்துடன்.

மூன்று நாட்களும். அவளை அவ்வப்பொழுது தாம் மடியில் கிடத்திக்கொண்டு வாயை வலுக்கட்டாயமாகத் திறந்து பால் புகட்டியதை சொல்ல சங்கடமாயிருந்ததால் துறவி அதை விவரிக்கவில்லை. ''உனக்கு சக்தியிருந்தால் இன்று நீ நீராடலாம்'' என்றார்

அவர் சங்கோஜம் நிறைந்த குரலில்.

''என்னால் அசையக்கூட முடிய வில்லையே'' என்றாள் ராஜகுமாரி.

''கவலைப்படாதே'' என்ற துறவி கமண்டலத்தை தரையில் வைத்துவிட்டு அரசகுமாரியை குழந்தைபோல் தூக்கி கோவிந்த னிடம் நீட்டினார். கோவிந்தன் தனது துதிக்கையில் அரசகுமாரியை தாங்கிக்கொள்ள, துறவி முன்னால் நடந்தார். அவரை கோவிந்தன் பின்பற்றியது. கோவிந்தன் துறவி சொற்படி கேட்பதைக் கண்ட குலவதி பிரமித்தாள். கோவிந்தன் யாருக்காவது பணிந்து நடக்க வேண்டுமானால், தானோ, ஹேமாத் ரியோ, அல்லது தனது தந்தையோ கோவிந்தனிடம் அவரை அறிமுகப் படுத்தியிருக்க வேண்டும் என்று உணர்ந்திருந்ததால் ''சுவாமி!'' என்று அழைத்தாள் குலவதி, கோவிந்தன் துதிக்கையில் இருந்த படியே.

''என்ன அரசகுமாரி?''

''கோவிந்தனை உங்களுக்கு ஹேமாத்ரிஅறிமுகப்படுத்தினாரா?''

''இல்லை. ஹேமாத்ரி சிறையிலி ருக்கிறார்.''

''வேறு யார் அறிமுகப்படுத்தி யிருக்க முடியும்?''

''உன் தந்தை அறிமுகப்படுத்தி யிருக்க முடியாதா?''

''எப்படி முடியும்? அவர் இங்கு எங்கேயிருக்கிறார்?''

"இங்கில்லை. பஞ்சவடியிலிருக்கிறார்" என்று சாதாரண விஷய்த்தை சொல்வது போல் சொன்னார் துறவி.

திகைத்தாள் அரசகுமாரி. "என் தந்தை பஞ்சவடியிலிருக்கிறாரா? என்னை ஏன் அவர் அழைத்துப் போகவில்லை?" என்று கேட்கவும் செய்தாள்.

"நான்தான் வேண்டாமென்று சொன்னேன்" என்றார் துறவி.

அதிர்ச்சி அதிகமாயிற்று அரசகுமாரிக்கு. "நீங்களா!" என்று குரலிலும் அதிர்ச்சி ஒலிக்கக் கேட்டாள்.

"ஆம். நான்தான்"

"அதை என் தந்தை கேட்டுக்கொண்டார்?"

"கேட்காமலிருக்கக் காரணமில்லை"

"காரணம் ஏன் இல்லை. நீங்கள் ஆண் மகன்..."

"ஆனால் துறவி"

"துறவியாயிருந்தாலும் ஆண் பிள்ளையல்லவா? உங்களுடன் என்னை தனிமையில்விட தந்தை எப்படி ஒப்புக்கொண்டார்?"

துறவி அவளை உற்றுப் பார்த்தார் ஒருக்கணம். "பெண்ணே! துறவிகள் மற்றவர்களைப் போன்றவர்கள் அல்ல. புலன்களை அடக்கியவர்கள். ஆசையை அறுத்தவர்கள்..." என்று மேலும் ஏதோ சொல்லப் போனார்.

அரசகுமாரி பலவீனமாக நகைத்தாள். "ஆகா! துறவிகளி டம் சிக்கியவர்கள், புராணங்களில் பட்ட பாடு! ஆசையை அறுத்த வர்களாம், சுத்த புரட்டு" என்றாள் அரசகுமாரி சிரிப்பின் ஊடே.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டே பயணம் செய்தபோது ஒரு சிறு அருவிக்கருகில் கோவிந்தன் நின்று அரசகுமாரியை மிக மெது வாக அருவியின் நீர்க்கரையில் இறக்க முயன்றது. அப்பொழுது துறவி "கோவிந்தா! இரு இரு" என்று கூறிக்கொண்டே ஓடிவந்து தமது வலுவான கைகளில் அரசகுமாரியை தூக்கிக் கொண்டு அருவியில் செடிகள் சூழ்ந்திருந்த மறைவில் அவளை மெதுவாக உட்கார வைத்தார். பிறகு அவளருகில் தாமும் அமர்ந்து "பெண்ணே! அருவியின் முனையிலே உட்கார். ஆழத்துக்குப் போகாதே. இதன் வேகம் அதிகம்" என்று கூறினார். பிறகு தமது கமண்டலத்தால் நீரை மொண்டு மொண்டு அவள் மீது ஊற்றினார் மெதுவாக. "உட்கார்ந்தபடியே உடம்பை தேய்த்துகொள்" என்று கூறிவிட்டு தமது மடியிலிருந்த மடிக்கப்பட்ட இலையை அவளிடம் கொடுத்து "இதில் வாசனைப் பொடி இருக்கிறது" என்றும் சொன்னார்.

அரசகுமாரி கமண்டலத்தை

தன் கையில் வாங்கிக்கொண்டு ''நீங்கள் சற்று மறைவில் இருங் கள்'' என்ருள்.

''ஏன்?''

''என்ன முட்டாள் கேள்வி இது? நான் நீராடுவதை எப்படிப் பார்க்கலாம் நீங்கள்?''

''கமண்டலம் இருக்கட்டுமா?''

''அது மட்டும் இருக்கட்டும். நீரை மொண்டு நீராட உதவியா யிருக்கும்.''

''சீக்கிரம் நீராடு. நீராட்டம் முடிந்ததும் உனது தந்தையிடம் போவோம். அவர் கவலையுடனிருப் பார்'' என்று சொன்ன துறவி செடிகளின் மறைவுக்குச் சென்ருர்.

துறவி கொடுத்த இலையி லிருந்த வாசனைப் பொடியை உட லில் தேய்த்து நீராடினுள் அரச குமாரி. அவர் கமண்டலத்தி லிருந்தே நீரை சாய்த்து சாய்த்து வாசனைப்பொடியை குழைத்தாள். இப்படி நீராடி முடித்ததும் ''சுவாமி! சுவாமி'' என்று குரல் கொடுக்க துறவி மறைவிலிருந்து வெளியே வந்தார்.

''எனக்கு உடுக்க ஏதாவது கொண்டுவந்தீர்களா?'' என்று அதி காரத்துடன் வினவிளுள்.

துறவி சற்று சிந்தித்துவிட்டு தமது தோளிலிருந்த காஷாயத் துணியை அவளிடம் கொடுத்து மறைவுக்குச் சென்ருர். அரசகுமாரி

அந்த காவியை உடுத்திக்கொண்டு வெளியே வந்தாள். கையிலிருந்த கமண்டலத்தை எடுத்து துறவியிடம் கொடுத்து "இது மிகவும் உபயோகமாக இருந்தது" என்று வெட்கத்துடன் சொன்னாள்.

துறவி ஏதும் பேசவில்லை. அருவி நீரில் இறங்கி கமண்டலத்தை நன்றாக அலம்பி நீரை மொண்டு கொண்டார். "புடவையை பிழிந்து எடுத்துக்கொள். வா போவோம்" என்றார். அவர் சொன்னபடி அரசகுமாரி செய்ததும் கோவிந்தன் அவளை துதிக்கையால் தூக்கி தனது மத்தகத்தில் வைத்துக்கொண்டு நடந்தது.

அழகு மிகுந்த சந்நியாசினி போவது போல் அவள் யானை மீது சென்றாள். காவி கூட அவளுக்கு மிகவும் அழகாயிருந்ததை கவனித்தார் துறவி. கையிலிருந்த கமண்டலத்தைப் பார்த்தார். "இது அதிர்ஷ்டம் செய்தது. அரசகுமாரியின் பருவ உடலுக்கு நீர் ஊற்றியது" என்று துறவி நினைக்கக் கூடாத நினைப்புகளில் ஆழ்ந்தார். அரசகுமாரி துறவிக் கோலத்தில் பட்டத்து யானை மீது வந்ததைப் பார்த்த யாதவ மன்னன் மகாதேவன் "இவளும் துறவியாகிவிட்டாளா என்ன!" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

—தொடரும்



# 11 துறவியின் பந்தபாசங்கள்

காஷாய ஆடையணிந்து காட்டு தேவதைபோல் பட்டத்து யானைமீது அதிவேகத்தில் தனது பாசறையை நோக்கி மலைக்காட்டு முகப்பிலிருந்து வந்த தனது மகளை வியப்பு நிரம்பிய விழிகளால் பாசறைக் குடிலின் வாயிலிலிருந்தே நோக்கிய யாதவ மகாராஜா மகாதேவன் "இவளும் துறவியாகிவிட்டாளா என்ன?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டானென்றால் அதற்குக்காரணம் இருக்கவே செய்தது. ஹேமாத்ரி அவ்வப்பொழுது அனுப்பிய ஓலைகளில் மறைமுகமாக சுட்டிக்காட்டிய விவரங்களிலிருந்து சந்திரதேவருக்கும் தனது மகளுக்கும் ஏற்பட்ட பந்தத்தைப்பற்றி ஓரளவு ஊகித்திருந்தான் மகாதேவன். அவள் அன்று காஷாயத்தையும் உடுத்தி வந்தது அவன் ஊகத்தை பெரிதும் உறுதிப்படுத்திலும் அதை இம்மியளவும் வெளிக்குக் காட்டாமல் யானை தன் முன்பாக வந்து நின்றதும் தனது கைகளை நீட்டி யானைமீதிருந்த மகளை இறக்கினான். அவளை அன்புடன் அணைத்து உச்சியில் முத்தமும் இட்டான்.

அவன் காட்டிய அன்பினால் தந்தைக்கு தன்னைப்பற்றி எந்த சந்தேகமும் ஏற்படவில்லையென்று நினைத்த குலவதி "அப்பா! நீங்கள் எப்படி திடீரென்று இங்கு வந்து சேர்ந்தீர்கள்?" என்று வினவினாள். "அதுவும் யானைப்படையை அதிகமாகக் கொண்டு வந்திருக்கிறீர்களே?" என்று இன்னொரு கேள்வியையும் எழுப்பினாள்.

குலவதி கேட்ட மிக சூட்சுமமான கேள்விகளை உணர்ந்த மகாதேவன் "பெண்ணே! உன் அண்ணனுக்குப் பதில் நீ ஆண்மகனாகப் பிறந்திருந்தால் இந்த பஞ்சவடிக்கு நான் வரவே அவசியமிருந்திருக்காது" என்று கூறி "உனக்கு வேறு உடை தேவையாயிருந்தால் உள்ளே போய் ஆடையை மாற்றிக் கொண்டு வா. ஆனால் இந்த உடையும் உனக்கு பொருத்தமாகத்தான் இருக்கிறது. அதுவும் குருவும் சிடப் பெண்ணும் ஒரே ஆசிரமத்திலிருப்பதும் தவறல்ல" என்றும் சொல்லி புன்புறுவல் செய்தான்.

நாணம் மேம்பட்டதன் விளைவாக குலவதி ஏதும் பதில் சொல்லாமல் பர்ணசாலைக்குள் நுழைந்தாள். அங்கிருந்த தனது ஆடைப் பெட்டிகளெல்லாம் பழையபடியே இருந்ததைக் கண்டதால் தன்னை சிறையெடுத்த சிலாரா மன்னன் பர்ணசாலையிலிருந்து எதையும் எடுக்கவோ அழிக்கவோ இல்லையென்பதை உணர்ந்து அவன்பால்

சிறிது அனுதாபமும் கொண்டாள். அவன் தன்னைச் சிறைசெய்தது கூட தனது தந்தைமீது பழிவாங்கத் தான் என்று நினைத்தாள். ஆனால் யாதவர்கள் படைக்கு முன்பு சிலாரா படை நிற்பது சாத்தியமில்லையென்பதை அறிந்திருந்ததால், சோமேசுவரன் தோல்வியும் அழிவும் நிச்சயம் என்று முடிவு செய்தாள். இந்தப் போர் மூண்டால் சிறையிலிருக்கும் குருநாதர் ஹேமாத்ரியின் கதி என்னவாகுமோ என்று கவலைப்பட்டாள். அந்தக் கவலையுடன் மாற்றுடை அணிந்து துறவி கொடுத்த காஷாயத்தை நன்றாக மடித்து தனது ஆடைப்பெட்டியின்மீது வைத்தாள். அப்படி அவள் வைத்துக்கொண்டிருக்கை
7 யிலேயே உள்ளே நுழைந்த மகாதேவன் "பெண்ணே! காஷாயத்தை ஏன் அத்தனை ஜாக்கிரதையாக மடித்து வைக்கிறாய்?" என்று வினவினான்.

அவன் குரலில் கேலி இருந்ததை கவனிக்கத் தவறாத குலவதி "அப்பா! காஷாயம் என்னுடையதல்ல. எனது குருநாதருடையது" என்றாள் சிறிது சங்கடம் ஒலித்த குரலில்.

"ஹேமாத்ரியின் காஷாயமா இது? அவரும் துறவியாகிவிட்டாரா?" என்று யாதவமன்னன் வினவினான்.

"அவர் உடையல்ல இது. மகரிஷியின் உடை" — இதை சற்று கோபத்துடன் சொன்னாள் குலவதி.

"மகரிஷியா!"

"ஆம். சந்திரதேவர். அவர் எனக்கு மந்திரோபதேசம் செய்தார்."

"மந்திரோபதேசமா?"

"சந்திர பூஜா மந்திரம்"

"அது மட்டுந்தானா?"

"ஆம். வேறு மந்திரமும் சொல்லிக் கொடுத்திருப்பார். ஆனால் சோமேசுவரன் திடீரென வந்து எல்லோரையும் சிறைசெய்து விட்டதால்..." என்ற குலவதி சொற்களை முடிக்கவில்லை.

"உபதேசம் தடைப்பட்டுவிட்டது. அதை சரிப்படுத்திவிடுவோம். உனது இரண்டாவது குருநாதர் வரட்டும்" என்று கூறிவிட்டு "வா குலவதி! வெளியே வா படைகளைப் பார்வையிடுவோம்" என்று அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு குடிலுக்கு வெளியே வந்தான்.

அவன் வந்தபோது வாயிலிலேயே துறவி நின்றுகொண்டிருந்தார். "யாதவ மன்னருக்கு தலை வணங்குகிறேன்" என்று கூறி தலை வணங்கிவிட்டு மன்னன் பக்கத்தில் நின்றிருந்த குலவதியை நோக்கினார்.

"நன்றி மகரிஷி" என்றான் மகாதேவன்.

"மகளைக் காப்பாற்றியதற்கா?" என்று துறவி கேட்டார்.

"இல்லை. அவளை பக்குவப்படுத்தியதற்கு..." என்றான் மன்னன்.

''என்ன சொல்கிறீர்கள் மன்னவா?'' என்று துறவி கேட்டார். தமது கூரிய விழிகளை யாதவன்மீது நாட்டவும் செய்தார். மேலும் தொடர்ந்து பேசினார். ''சிலாரா வம்சம் பண்பாட்டில் யாருக்கும் சளைத்ததல்ல. உங்கள் குமாரத்தி இங்கு வந்தபோது இருந்த தூய்மையுடன் இப்பொழுதும் இருக்கிறாள். என் சகோதரன் இங்கு வந்து அரச குமாரியையும் பணிப்பெண்களையும் ஹேமாத்ரியையும் சிறை செய்தது ஒரு மன்னன் செய்யக்கூடாத ஈனச் செயல். அதற்கு நான் பரிகாரம் செய்து விட்டேன். உங்கள் மகளை சிறை மீட்டுவிட்டேன். ஹேமாத்ரியும் அரசகுமாரியின் பணிப்பெண்களும் சீக்கிரம் விடுதலையாவார்கள்'' என்று சற்று உணர்ச்சிவேகத்துடன் பேசினார் துறவி.

மகாதேவன் துறவியை உற்று நோக்கினான் பல விநாடிகள். துறவிக்கு இருந்த பாச பந்தங்களையும் உணர்ச்சி வேகத்தையும் கவனித்த யாதவன் ''மகரிஷி! எல்லா பாவங்களுக்கும் பரிகாரம் கிடையாது. பெண்களை சிறையெடுப்பதற்கு மன்னிப்பு கிடையாது. ஹேமாத்ரியோ என் மகளோ இங்கு வேவு பார்க்க வரவில்லை. புண்ய யாத்திரையை முன்னிட்டு வந்தார்கள். அவர்களை திடீரென வீரர்களுடன் வந்து சிறை செய்வது வீரன் செய்கையல்ல. தவிர அது யாதவ

ராஜகுலத்துக்கும் பெருத்த அவமானம். அதை போரினுல்தான் தீர்க்க முடியும்'' என்று திட்டமாகச் சொன்னுன். ''இன்று மாலையே எனது படைகள் மலையைத் தாண்டி ராஜபுரிக்குள் நுழையும். அதைத் தடுக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று உங்கள் சகோதரர் சரணடையலாம் அல்லது படையை எதிர்க்க ஏற்பாடு செய்யலாம்'' என்று தனது முடிவை எடுத்துச் சொல்லவும் செய்தான்.

அவன் போர் ஏற்பாடுகளைப் பற்றி துறவி கவலைப்படவில்லை. ''சோமேசுவரன் உங்கள் படைகளை கண்டிப்பாய் சந்திப்பான், நீங்கள் இங்கு வந்திருப்பது ஏற்கனவே தெரியும். ஆனுல் உங்கள் பெரும் படையை எதிர்த்து நிற்க என் நீமையனுல் முடியாது. ஆனுல் நீங்கள் வெற்றி கொள்வதில் ஒரு ஆபத்து நிச்சயமாக இருக்கிறது'' என்ருர்.

''என்ன ஆபத்து?'' யாதவன் வினவினுன்.

''உங்கள் நிலப்படை நிலப் போரில் வெற்றி பெற்றதும் எனது அண்ணன் கடற்படையில் சென்று விடுவான். அந்த பலமான கடற் படையை நீங்கள் சமாளிக்க முடியாது. திரும்பத்திரும்ப அது நிலத்தைத்தாக்கும் கடலிலிருந்து. நீங்கள் நிரந்தரமாக அவனை சமாளிக்க ராஜபுரியிலேயே தங்கும்படியாயிருக்கும்...'' என்ற சந்திரதேவர் சிறிது தயங்கினுர்.

''ஒருவர் தலையிடாதிருந்தால் அந்த கடற்படையையும் நான் சமாளிப்பேன்'' என்ருன் யாதவ மன்னன்.

துறவிக்கு யாதவமன்னன் யாரைக் குறிப்பிடுகிருனென்று தெரிந்திருந்தும் அவன் வாயாலேயே விஷயத்தை வரவழைக்க விரும்பி ''யாரது?'' என்று விசாரித்தார்.

''துறவியாகிவிட்ட ஒருவர். இந்த கடற்படையை நிறுவியவர். அவர் இகபந்தங்களில் ஈடுபடாமலிருந்தால் இந்த கடற்படையும் எனக்கு பெரிய விஷயமல்ல'' என்ருன் சோமேசுவரன்.

அதுவரை அவர்கள் உரையாடலில் இடைபுகாமல் இருவரும் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்ற குலவதி ''அப்பா! மகரிஷி எப்படி இகபந்தங்களுக்கு திரும்ப முடியும். துறவியானவர் துறவிதானே. அடிக்கடி ஆசிரமத்தை மாற்ற முடியுமா?'' என்று வினவிஞள். துறவியை கடைக்கண்ணுல் பார்த்து விஷமமாகப் புன்முறுவலும் செய்தாள், தந்தைக்குத் தெரியாமலே.

''அவசியமிருந்தால் ஆசிரமத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான். இதை துறவியே ஒப்புக்கொள்வார்'' என்று கூறிய மகாதேவன் துறவியை பக்கவாட்டில் பார்த்தான்.

துறவியும் யாதவ மன்னனை கம்பீரமாக ஏறெடுத்து நோக்கினுர். ''மன்னவா! நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது.. ஆனுல் ஒன்று நிச்சயமாகச் சொல்வேன். நான் துறவி. இந்தப் போரில் யார் பக்கமும் வாளோ வில்லோ எடுக்கமாட்டேன். ஆனுல் மன்னிக்கமுடியாத அதர்மம் ஏதாவது ஏற்படுமாஞல் நான் கண்டிப்பாய் தலையிடுவேன்'' என்று உறுதியுடன் சொற்களை உதிர்த்தார்.

மகாதேவன் துறவியின் கையை சகோதர பாவத்தில் பற்றினுன். ''சந்திரதேவரே! நீர் உண்மைத் துறவியோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனுல் சத்தியசந்தர், மகாவீரர், அதர்மத்துக்கு இடம் கொடுக்காதவர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதர்மம் என்னிடமிருந்து ஏற்படாது. இதை நீங்கள் நிச்சயமாய் நம்பலாம்'' என்ருன்.

மகாதேவன் அதற்குமேல் பேச்சை வளர்த்தாமல் கையை உயர்த்தவே எதிரே போர்முரசு ஒலித்தது. அதுவரை இளைப்பாறியிருந்த படைப்பிரிவுகள் உயிருற்று துடித்து எழுந்தன. ''துறவி! வாருங்கள் படைகளைப் பார்வையிடுவோம். மகளே நீயும் வா'' என்று கூறி படைகளின் ஊடே நடந்து சென்ருன். துறவியும் குலவதியும் அவன் பின்னுல் அக்கம் பக்கத்தில் சென்றனர்.

பஞ்சவடி தீரத்திலிருந்து அந்த பெரும்படை முரசு ஒலித்ததும் வெகு சீக்கிரத்தில் அணிவகுத்துவிட்டதையும் மன்னனை வரவேற்க சித்தமாகிவிட்டதையும் கண்டு நல்ல கட்டுதிட்டமுள்ள இரும்புப் படையை யாதவன் உருவாக்கியிருக்கிறனென்பதை துறவி உணர்ந்து கொண்டதால் "இதற்கு முன்பு சிலாரா படைகள் நிற்கமுடியாது" என்று உள்ளூர சொல்லிக்கொண்டு "முடிந்தால் இந்தப் போரை நிறுத்துவதுதான் நல்லது" என்றும் நினைத்தார். ஆகவே ஒரு தீர்மானத்துக்கு வந்து "மன்னவா! படையெடுப்பை நீங்கள் ஒரு நாள் நிறுத்திவைக்கமுடியுமா?" என்று வினவினர்.

"காரணம்?" ஏதும் புரியாமல் கேட்டான் மகாதேவன்.

"சமாதானம் செய்ய முயற்சி செய்கிறேன். அண்ணனிடம் சொல்லிப் பார்க்கிறேன்" என்றார் துறவி. அவரது குரலில் உணர்ச்சி அலைகள் பெரிதும் உழன்றன.

"எப்பொழுது படைகளை ஏவட்டும்?" என்று வினவினன் மகாதேவன்.

"நாளை மாலை ஏவுங்கள். நாளை மாலைக்குள் நானும் ஹேமாத்ரியும் இங்கு வரவில்லையென்றால் உங்கள் படை நகரட்டும்" என்றார் துறவி.

மகாதேவன் சம்மதித்தார். துறவி அவனிடமும் பர்ணசாலையின் தனிமையில் குலவதியிடமும் விடை

பெற்றுக்கொண்டார். குலவதி அவரை நோக்கி அச்சத்துடன் கேட்டாள் ''உங்கள் சகோதரர் உங்களுக்கு ஆபத்து ஏதும் விளைவிக்க மாட்டாரே?'' என்று.

''என்ன இருந்தாலும் சகோதரன். பயப்படாதே. என்னை எதுவும் செய்யமாட்டான்'' என்றார் துறவி. பிறகு குலவதியின் கைகளைப் பற்றி ''குலவதி! வீணாக போரில் ஈடுபடாதே. உனக்கு எந்த தீங்கு நேர்ந்தாலும் என்னால் சகிக்க முடியாது'' என்றார். அவர் குரல் தழுதழுத்தது. அதை வெளியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மகாதேவன் ''துறவியின் இகபந்த பாசங்கள் அத்துமீறிக் கொண்டிருக்கிறது'' என்று சொல்லி நகைத்துக்கொண்டான் உள்ளூர.

பர்ணசாலையிலிருந்து வெளியே வந்த துறவி மன்னனிடம் விடைபெற்றுச் சென்றார். அடுத்த இரண்டு நாட்கள் அவர் காணப்படவில்லை. மகாதேவன் மூன்றாவது நாள் தனது படைகளை நகர்த்தினான். அவனது யானைப்படை பூமியே அதிரும்படியாக மிக வேகமாக மலைமீது ஏறிச் சென்றது. யானையின் பிளிறல்களால் நிரம்பிய அந்த மலைக்காட்டுப் பகுதிகளிலிருந்த இதர மிருகங்கள் ஓடவும் பதுங்கவும் துவங்கின. மகாதேவன் படை மிகப் பயங்கரமாக ராஜபுரிச் சரிவில் இறங்கியது.

(அடுத்த இதழில் முடியும்)

## 12 துறவிக்கு ஒரு துணை

பெரும் போருக்கு நன்ருகப் பழக்கப்பட்ட சுமார் ஆயிரம் யானைகள் வில்லும் வேலும் உடைய வீரர்களைத் தாங்கி ஸஹ்யாத்ரி மலைச்சரிவில் ராஜபுரியை நோக்கி தடதடவென்று இறங்கியபோது அதை சிலாரா மன்னனின் புரவிப் படையும் காலாட்படையும் எதிர்த்து நின்றன. யாதவ மன்னன் யானைகள் அசாத்தியமாக பிளிறிக் கொண்டு துதிக்கைகளால் அக்கம் பக்கங்களில் கிடைத்த பாறைகளை எடுத்து எதிரிப்படை மீது வேகமாக வீசியதாலும், அந்த யானைகள் மீதிருந்த வீரர்களின் ஆயிரம் வேல்கள் ஒரே சமயத்தில் திட்டமிட்டதுபோல் பறந்து சென்றதாலும் சோமேசுவரன் படைகள் ஆரம்ப அதிர்ச்சியின் விளைவாக சிறிது பின்வாங்கிஞலும் மீண்டும் பக்கங்களில் நகர்ந்து ஒன்றுகூடி எதிரியின் படையைத் தடைசெய்ய முயன்றன. சோமேசுவரனும் சுமார் இரண்டாயிரம் புரவி வீரர்களையும், காலாட்படை வீரர்கள் மூவாயிரம் பேர்களையும் போர்க்களத்தில் ஈடுபடுத்தியிருந்தாலும், அக்கம்பக்கத்தில் அவற்றை நகர்த்தி வேல்களை வீசியும் அம்புகளை எய்தும் யானைகளை ஓரளவு தடைசெய்ய முயன்ருலும் எதிரிகளை சமாளிக்கமுடியாமல் திணறிஞன்.

மகாதேவனின் யானைப்படை மலைச்சரிவில் இறங்கியபோது அவற்றின்மீது தைத்த எதிரியின் வேல்களால் அவை இன்னும் ஆவேசம் கொண்டு வேகத்தை அதிகப்படுத்தி தாறுமாருக எதிரிப்படைக்குள் நுழைந்து புரவி வீரர்களை புரவிகள் மேலிருந்தே தூக்கி மலைப்பகுதியில் விசிறின. அப்படி விசிறப்பட்ட வீரர்களின் மண்டைகள் பாறைகளில் மோதிப் பிளந்ததால் ஏற்பட்ட அலறலாலும், யானைகளின் கால்களுள் மிதிக்கப்பட்ட சில வீரர்களின் ஓலத்தாலும் மலைச்சரிவும், மலைச்சரிவு சந்தித்த ராஜபாட்டையும் பயங்கரமான அவல ஒலிகளால் நிரம்பின. யாதவ மன்னனின் யானைப்படை ராஜபாட்டையில் இறங்கி பரந்து நின்றதை அடுத்து அவனது புரவிப்படையும் சமதரைப்பகுதியை அடையவே போர் மிக மும்முரமாயிற்று. மகாதேவன் புரவி வீரர்கள் வாட்களைச் சுழற்றிக் கொண்டு எதிரி புரவி வீரர்மீதும் காலாட்படை மீதும் சுழன்று சுழன்று போராடினுர்கள். காலாட்படைக்குள் புகுந்துவிட்ட யானைப் படையும் அங்கு பயங்கரமான சேதத்தை விளைவிக்கத் தொடங்கியது. தனது பெரும் புரவியில் ஏறி வாளேந்தி பிரளயகால ருத்திரன் போல் இடைப்பட்டவரையெல்லாம் வெட்டிக்கொண்டு முன்னேறிய மகாதேவன் சோமேசுவரனை எதிர்கொள்ள விரும்பி எதிரி புரவிப்படையை நோக்கினுன்.

சிலாரா மன்னன் படைப்பகுதியில் எங்கும் காணோம். இரவு மூளும் சமயத்தில் சிலாரா படைகள் யாதவனின் பெரும்படையை சமாளிக்க முடியாமல் பின்வாங்கத் தொடங்கின. பின்னால் அதிக சமதரை எதுவுமில்லாததால் வேகமாகப் பின்வாங்குவதும் சாத்தியமில்லாது போகவே படைவீரர் சிலர் சரிவில் உருண்டனர். புரவிகளும் உருண்டு அலறின பெரிதாக. அவற்றுடன் வெறிகொண்ட யாதவனின் யானைகளின் பிளிறல்கள் அங்கு ஏதோ பிரளயம் நடப்பதுபோன்று பிரமையை சிருஷ்டித்தன. அஸ்தமித்த சிறிது நேரத்திற்கெல்லாம் சிதறி பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தன. அவற்றை பின்பற்ற இஷ்டமில்லாத மகாதேவன் தனது பெரும் சங்கத்தை எடுத்து ஊதினான். இரு புரவி வீரர்கள் அவன் சங்கொலியைக் கேட்டதும் அருகில் வர ''எதிரிகளின் படையில் பாதி அழிந்துவிட்டது. இத்துடன் போரை நிறுத்தி ராஜபுரிக்குள் சென்று சோமேசுவரனை சிறை செய்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். தனது படைகளில் மாண்டவர்களை அடக்கம் செய்யவும் காயமடைந்தவர்களை கவனிக்கவும் உத்தரவுகளைப் பிறப்பித்து தான் மட்டும் தனது புரவியை கடற்பகுதியை நோக்கி செலுத்தினான்.

எதிரே தெரிந்த கடலுக்கு இன்னொரு கடலைப்போல் ராஜபுரி பாட்டையிலும் மலைச்சரிவிலும் கடற்பகுதியிலும் பரந்து கிடந்த

லிருந்து அசைந்து மீண்டும் பழைய அணிவகுப்பை ஏற்படுத்திக் கொண்டது. யாதவனால் ஏவப்பட்ட படைத்தலைவர்களில் சிலர் ராஜபுரியின் கோட்டைக் கதவுகளை நோக்கி படைவீரர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் பின்னாலிருந்து புரவிமீது வந்த அவன் மகள் குலவதி "அப்பா! அதோ சில மரக்கலங்கள் கடலில் ஓடுகின்றனவே, அவற்றில் யார் போகிறார்கள்?" என்று வினவினாள்.

அந்த மரக்கலங்களில் தப்பிச் சென்று தான் அயர்ந்த சமயத்தில் மீண்டும் தாக்க சோமேசுவரன்தான் முயற்சி செய்வான் என்று தீர்மானித்த மகாதேவன் "குலவதி!

புரியை ஒரு நிதானத்துக்குக் கொண்டு வா. நான் சென்று அந்த கடற்படையை கவனித்து விட்டு வருகிறேன். நம்மிடமும் கடலோடும் திறமைசாலிகள் இருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு மீண்டும் தனது பக்கத்தில் நின்ற வீரனுக்கு சைகை செய்ய அவன் பெரிய கொம்பு வாத்தியத்தை எடுத்து பெரிதாக ஊதினான். அதைக்

கேட்டதும் புரவிப்படையிலிருந்து விரைந்து வந்த சிலரை நோக்கி ''உங்களில் எத்தனை பேருக்கு மரக்கலங்களை இயக்கத்தெரியும்?'' என்று வினவினான்.

''மரக்கலப் போரில் கலிங்கத்தில் பயிற்சி பெற்ற மாலுமிகள் ஐந்நூறு பேரும் மரக்கலத்தை செலுத்தவல்ல ஐந்நூறு பேரும் இருக்கிறார்கள். அவர்களில் நால்வர் மரக்கலத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்'' என்று அந்த வீரர்கள் சொல்லவே ''அதோ அந்த மரக்கலங்களை நாம் தொடரவேண்டும்'' என்று கூறிய மகாதேவன் மலைச்சரிவில் மீண்டும் இறங்கி கடற்கரையை நோக்கி விரைந்தான் தனது புரவியில். வெகுவிரைவில் சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட வீரர்கள் அவனைத் தொடர்ந்து சென்றார்கள். அடுத்த ஜாமத்திலேயே துறைமுகத்திலிருந்த ஐந்து மரக்கலங்கள் கடலில் ஓடின.

முன்னே சென்ற சோமேசுவரன் மரக்கலங்கள் ஆறும் அவற்றைத் தொடர்ந்து யாதவன் கைப்பற்றிய சோமேசுவரனின் மரக்கலங்கள் ஐந்தும் விரைந்துகொண்டிருந்ததும் அவற்றில் ஜொலித்த பந்தங்கள் ஏதோ இரண்டு வைர மாலைகளைப்போல தெரிந்ததும் பார்ப்பதற்கு மிக ரம்மியமாயிருந்தாலும்

அந்த ரம்மியத்தால் விளையப்போவது பயங்கரப்போர், உயிர் நாசம் என்பதை உணர்ந்த குலவதி மிகவும் துன்பத்தையே அடைந்தாள். இருப்பினும் தந்தையின் உத்தரவை நிறைவேற்ற யாதவர் படைகளை அழைத்துக்கொண்டு ராஜபுரிக் கோட்டை வாசலை நோக்கி சென்ற சமயத்தில் சட்டென்று புரவியை நிறுத்தினாள். சிலாரா கப்பல்களுக்கும் யாதவர் கைப்பற்றி ஓட்டிச் சென்ற கப்பல்களுக்கும் இடையில் இன்னொரு பெரிய மரக்கலம் நுழைவதைக்கண்ட குலவதி "அந்த மரக்கலம் யாருடையது?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டிருக்

கையிலேயே கடற்படைப்போர் துவங்கிவிட்டது. மகாதேவன் தனது மரக்கலங்களின் பாய்களை விரித்து ஓடியதாலும் காற்றும் அனுகூலமாயிருந்ததாலும் வெகுசீக்கிரம் சோமேசுவரன் மரக்கலங்களை நெருங்கிவிட்டான். கடலில் பயங்கரமான போர் மூண்டது. அது முடியும் நேரத்தை ஊகிக்கமுடியாத காரணத்தால் குலவதி தனது படைகளுடன் ராஜபுரியை அடைந்தாள்.

யாதவ யானைகளின் தாக்குதலால் ராஜபுரிக்கோட்டை கதவுகள் பிளந்து விழுந்து கிடந்தன. ராஜபுரி சரணடைந்துவிட்டதால் சேதம் குறைந்திருந்தது. இருப்பினும் போரில் மாண்ட வீரர்களின் பெண்டு பிள்ளைகளின் கதறலால்

ராஜபுரி அவல புரியாகவே விளங்கியது அன்றிரவில். குலவதியை சந்தித்த யாதவன் படைத்தலைவர்கள் அவளை சோமேசுவரன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவள் இருக்க சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தார்கள்.

அன்றிரவும் மறுநாளும் அரண்மனையிலேயே தங்கிய குலவதி கடற்போர் என்ன ஆயிற்றோ என்ற கவலையுடன் காலம் கழித்தாள். மூன்றாவது நாள் மாலையில் வெற்றி முரசங்கள் ராஜபுரி வாயில் ஒலித்தன. வெற்றி வாகை சூடிய மகாதேவன் ராஜபுரிக்குள் நுழைந்தான். இருபுறத்திலும் ஹேமாத்ரியும் துரவியும் உடன்வர அரண்மனைக்குள் நுழைந்து நேராகக் குலவதியை நாடி வந்த மகாதேவன் "மகளே! கடற்போரிலும் நாம் வெற்றியடைந்தோம். ஆனால் சிலாரா மன்னன் தோற்கவில்லை. வீரமரணம் அடைந்தான்" என்று கூறி மகளைத் தழுவினான்.

ஹேமாத்ரி அப்பொழுது தமது கவிதைச் சிறப்பைக் காட்டினார். "நிலத்தில் மரணத்தைத் தழுவாத சோமேசுவரன் ஜலசமாதி அடைந்தான்" என்று கவிதை பொழிந்தார். "ஆனால் இதில் எனக்கு ஏதும் பெருமை இல்லை" என்றும் குறிப்பிட்டார்.

''ஏன்?'' என்று குலவதி வினவினாள்.

''சோமேசுவரன் போர் மூளுவதற்கு முன்பாக சிறையிலிருந்து கடத்தி என்னை மரக்கலத்துக்குக் கொண்டு போய்விட்டான். கடைசியில் தோல்வி நிச்சயம் என்று தெரிந்தபோது என்னை பாய் மரத்தில் கட்டி கொளுத்த முயன்றான். ஆனால் அவன் திவைக்கு முன்பு ஒரு கட்டாரி அவன் மார்பில் பாய்ந்து அவன் உயிரைக் குடித்தது. அதை எறிந்தவர் அந்த மரக்கலத்துடன் இன்னொரு மரக்கலத்தை இணைய விட்டு அதிலிருந்து பாய்ந்துவந்தார். கட்டாரி பாய்ந்த சோமேசுவரன் தள்ளாடி நடந்து கடலில் விழுந்தான். அவன் விழுந்த இடத்தில் ரத்தம் குமிழிட்டு நீர் மட்டத்துக்கு மேல் தெரிந்தது'' என்று விளக்கினார் துறவி.

''தங்களைக் காத்தவர்?'' சந்தேகத்துடன் கேட்டாள் குலவதி.

''வேறு யார்! இந்த போலி துறவிதான்'' என்று சந்திரதேவரைக் காட்டினார் ஹேமாத்ரி.

அதிகப்படி பேச்சை வெளியே ஏற்பட்ட வெற்றி கோஷம் தடை செய்தது. சுமார் ஒரு வார காலம்

ராஜபுரியில் தங்கிய

சிலாரா ராஜ்ய நிர்வாகத்தை சீர் செய்துவிட்டு புறப்படச் சித்தமானான். போகுமுன்பு துறவியை வரவழைத்து ''சந்திரதேவரே! இந்த அரசை எனது பிரதிநிதியாக நீங்கள் ஆண்டு வாருங்கள்'' என்றான்.

துறவி அரண்மனை மண்டபத்தில் தலைநிமிர்ந்து நின்றார். ''மன்னவா! அண்ணனைக் கொன்றேன், அவன் அதர்மம் செய்ததால். அவன் பெண்ணைத் திருடினான் ராவணனைப்போல். ஆனால் அவனைக் கொன்ற பலனை அனுபவிக்க நான் விபீஷணன் அல்ல. இந்த அரசில் எனக்கு இனி வேலை இல்லை'' என்றார்.

''எங்கு போகப்போகிறீர்?''

''என் இருப்பிடத்துக்கு, காட்டுக்கு.''

''காட்டில் என்ன செய்யப் போகிறீர்?''

''தவம்'' என்று சொல்லிவிட்டு அரண்மனை மண்டபத்தைவிட்டு வெளியே சென்றார் மகரிஷி சந்திரதேவர்.

நான்கு நாட்கள் ஓடின. ராஜபுரி நிதானத்துக்கு வந்து மகாதேவனும் தனது படையின் ஒரு பகுதியை அங்கு நிறுத்திவிட்டு தேவகிரிக்குப் பயணமானான். போகும்போது ''ஹேமாத்ரி! எதற்கும் துறவி எப்படி இருக்கிறார் என்று பார்த்துவிட்டுப் போவோமா?'' என்று கேட்டான் மகாதேவன்.

ஹேமாத்ரி இசைய்வே இருவரும் காட்டுக்குள் துறவியிருந்த பழைய குடிலை நோக்கிச் சென்றார்கள். குடிலின் கதவு திறந்து கிடந்தது. உள்ளே விளக்கு ஒன்றின் மங்கலான வெளிச்சத்தில் குலவதி துறவியின் இரும்புப் பிடியில் இருந்தாள். சற்று எட்டவே மறைவில் நின்ற மன்னன் காதில் அவர்கள் உரையாடல் விழுந்தது.

''நீர் ஒரு மகரிஷியா?'' என்று நிந்தித்தாள் குலவதி.

''ரிஷியில்லாமலென்ன?'' என்றார் சந்திரதேவர்.

''ரிஷியிருக்கும் நிலையா இது?'' என்று இன்பமாக நகைத்தாள் குலவதி.

''புராணத்தை நீ சரியாகப் படிக்கவில்லை'' என்றார் மகரிஷி.

''நீங்கள் படித்திருக்கிறீர்கள்?'' குலவதி கேட்டாள்.

''ஆம். எந்த ரிஷிக்கும் ஒரு ரிஷிபத்தினி உண்டு. இந்த ரிஷி தான் இதுவரையில் ஒண்டிக்கட்டையாக இருந்தான்'' — இதை சொன்ன துறவி நகைத்தார்.

வெளியே மன்னனுடன் நின்ற ஹேமாத்ரி சொன்னார் ''துறவிக்கு துணை ஏற்பாடாகிவிட்டது. இனி நமக்கு இங்கு வேலை இல்லை'' என்று

''என் மகள்...'' என்று பாசத்துடன் பேசினன் மகாதேவன்.

"துறவி பார்த்துக்கொள்வார். கவலே வேண்டாம்" என்ற ஹேமாத்ரி திரும்பி நடந்தார். மகாதேவனும் பின்பற்றினுன். அவர்கள் செல்வதற்காக காத்துக் கொண்டிருந்ததுபோல் குடிலின் கதவும் மூடிக்கொண்டது.

—முற்றும்—

